கல்கி

KALKI 14.1.96 ரூ. 3.00



Sreemathi™

பண்டிகை

நேரங்களுக்குப்

பரவசமூட்டும்

படைப்புகள்



Aishwarya™

HANDWOVEN

ஐஸ்வர்யா அழகு கைத்தறி புடவைகள்.
சில்க் டச் மெருகுடன் நுண்மையாக
நெய்த நளினங்கள்.



PATHI GROUP

PATHI BHASKARIAH & BRO,
149, Nagarthpet Bangalore 560 002
Tel : 2224093, 2237870
Fax : 91 - 080 - 2224093 Grams : 'PATHISILKS'

'பாட்டுத் திறத்தாலே வையம் பாலித்திட'ச் செய்துகொண்டிருக்கும் பாரதியாரின் கொள்ளுப் பேரனுடன் ஒரு சந்திப்பு :



"வேலையை விட்டேன், வாழ்த்தினார்கள்!"



"முழு நேரப் பாடகராக இருக்க வேண்டும் என்பதற்காக 'இஞ்சினியர்' வேலையை உதறியதாக உங்கள் டி.வி. நிகழ்ச்சியில் சொன்னீர்கள். இந்த முடிவுக்குத் தூண்டிய சூழ்நிலை அல்லது காரணம் எது?"

"இறைவன் சித்தப்படி காரியங்கள் நடந்தன என்றுதான் சொல்வேன். முதலில் இருந்த பணியில், நான் அடிக்கடி கச்சேரிகளுக்காக விடுப்பு எடுக்க நேர்ந்ததால் எனக்கென்று தனி அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தரே வைத்திருந்தார்கள்! அடுத்து இன்னொரு வேலை. அதில் ஆர். அண்டு டி. பிரிவில் இருந்தேன். எனக்கு இருந்த இசை ஆர்வத்தைக் கண்டு என் குரு டி.வி. கோபாலகிருஷ்ணன், 'வேலையை விட்டா நீ இன்னும் நன்னாயிருப்பாய்...' என்று சொல்லுவார். இது என் மனத்தில் விதையாக விழுந்திருக்க வேண்டும். ஒரு நாள் மாலை அலுவலகப் பணி முடிந்து வீட்டுக்குக் கிளம்பும் நேரம்... ஒரு மீட்டிங் இருக்கிறது என்று மேலதிகாரி அழைத்தார். 'இந்த நேரத்தில் மீட்டிங்கா?' என்று அலுப்பு வந்தது. அதிகாரியின் அழைப்பை மீற முடியாமல் மீட்டிங்கில் கலந்து கொண்டேன். 'சில நிர்வாக மாற்றங்கள் காரணமாக ஆராய்ச்சிப் பிரிவை மூடப் போகிறோம்; உன்னை விற்பனைப் பிரிவுக்கு மாற்றல் செய்கிறேன்' என்றார். நான் ஒருகணம் கூட யோசிக்கவில்லை. "வேண்டாம் சார்; I will quit" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். சரஸ்வதி தேவிதான் என் நாவில் உட்கார்ந்து என்னை அவ்வாறு பேச வைத்திருக்கிறாள்... வீட்டுக்கு வந்த போது எந்தவிதச் சலனமும் இன்றி மனம் அமைதி

யாக இருந்தது. திட்டமிட்டபடி மனைவி மைதிலியை அழைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போனேன். திரும்பிவரும் வழியில் தான் அவளிடம் செய்தியைச் சொன்னேன்..."

"உங்கள் மனைவி என்ன சொன்னார்?"

"அப்போது அவள் ஏழு மாத கர்ப்பிணி. உடனடி ரியாக்ஷனாகக் கொஞ்சம் கவலைப்பட்டாள். ஆனால், என்றைக்காவது ஒருநாள் நான் வேலையை விட்டுவிடுவேன் என்று என் குடும்பத்தில் எல்லோருமே எதிர்பார்த்ததாலோ என்னவோ, என் முடிவு அவளைப் பெரிதாகப் பாதிக்கவில்லை. மைதிலியும் எஞ்சினியரிங் படித்து வேலையில் இருந்தாள். பின்னர், வளரும் குழந்தைகளைக் கவனிக்க வேண்டிய நிலையில் அதை விட்டுவிட்டு இப்போது வீட்டிலிருந்தபடியே கன்ஸல்டன்ஸி ஸர்விஸ் நடத்துகிறாள்."

"'வேலையை விட்டால் நன்னாயிருப்பாய்' என்று உங்கள் குரு சொன்ன வாக்கு பலித்து விட்டதா...?"

"நிச்சயமாக! அவரிடம் என் முடிவைச் சொன்னபோது கூட, 'இன்னிலேர்ந்து நீ உருப்படுவாய்!' என்றுதான் வாய் நிறையச் சொன்னார். குறைவில்லாத வாழ்க்கை எனக்கு வாய்த்திருக்கிறது."

"எந்த விதத்தில்...?"

"வசதியாக வாழ்கிறேன் என்பது ஒருபுறம். எனது பணியினால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு நிம்மதியும் கிடைக்கிறது. அதனால் அவர்களுடைய ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் பெறுகிறேன். இவையும் ஒரு வகையான செல்வம்தானே? மேலும் இந்தப் பணியைச் செய்வதிலேயே ஒரு தெய்வீக உணர்வும் ஆத்ம சுகமும் இருக்கிறது..."

"இசை என்பது தொழிலாகும்போது ஆத்ம சுகம் கிடைக்குமா...?"

"சங்கீதம்தான் நம்மைக் காப்பாற்றுகிறது; நாம் அதைக் காப்பாற்றவில்லை என்கிற உண்மையை மறக்காமல் இருந்தால் நிச்சயம் கிடைக்கும். பாரதியார் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளானார்; வறுமையில் உழன்றார் என்கிறார்கள். ஆனாலும் 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்?' என்றுதான் அவர் பாடினாரேயொழிய 'எத்தனை கோடி துன்பம்?' என்று ஒருபோதும் அவர் கேட்கவில்லை... ஆரம்ப நாட்களிலேயே இந்த வைராக்கியம் எனக்கு வந்தது என்று சொல்ல மாட்டேன். இந்த மாதம் போதுமான அளவு கச்சேரிகள் இல்லையே என்று நான் கவலைப்பட்டதுண்டு. கவலைகளை உதறி இறைவன் காலடியில் போட்டுவிட்டேன்... அப்புறம் காரியங்கள் தானாக, அழகாக நடக்க ஆரம்பித்தன."

"உங்கள் கச்சேரியை ஆரம்பிப்பதற்கு முன்னால் தியானம் செய்கிறீர்களே?"

"இஷ்ட தெய்வங்களையெல்லாம் ஆவாஹனம் செய்கிறேன்... என் குரு டி.வி.ஜி. இதில் எனக்கு வழிகாட்டியிருக்கிறார்..."

"அவரை குருவாகத் தேர்ந்தெடுத்தது ஏன்?"

"அம்மாவிடமும் பின்னர் வள்ளியூர் குருமூர்த்தியிடமும் பாட்டு கற்றுக் கொண்டவன், குறுகிய காலத்துக்கு பாலமுரளியிடமும் பயின்றேன். ஹிந்துஸ்தானி இசை கற்றுக் கொள்ளத்தான் டி.வி.ஜி.யிடம் போனேன். அவருக்குக் கர்நாடக இசையிலும் கம்பீரமான தேர்ச்சி இருப்பதை அறிந்து கொண்டேன். அதிலும் பயிற்சி அளித்தார். அவர் பாட்டு மட்டும் சொல்லித்தரவில்லை. கச்சேரியைத் திட்டமிடுவதில் ஆரம்பித்து, குரல் பயிற்சி, ஒலிபெருக்கியைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது,



அடுத்த இதழுடன்

இலவச இணைப்புப் புத்தகம் :

இதயத்தைப் புரிந்து கொள்வோம்!

படிக்க, வியக்க, பாதுகாக்க.....

— பிரபல டாக்டர்கள் வழங்கும் மருத்துவக் கையேடு

சிறிய, நுணுக்கமான அழகுகளை உணர்ந்து வெளிப்படுத்துவது, என்று என்னை ஒரு மேடைப் பாடகனாக்கி, முழுமைப்படுத்துவதற்கான அனைத்தையும் கற்றுக் கொடுத்தார். கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் ஒலி பெருக்கியிலேயே பாட வைப்பார். அதை டேப் செய்து போட்டுக் காட்டி, நிறை குறைகளைச் சுட்டிக்காட்டுவார். மேடையில் அவருக்குப் பின்பாட்டுப் பாடும்போது திடீரென்று என்னைத் தனியாகப் பாடச் சொல்லிவிடுவார்... அந்த சமயத்தில் மறுக்க முடியாது; பாடிவிடுவேன். 'எப்படிப் பாடறான் பார்த்தேளா!' என்று மேடையிலேயே பாராட்டி விடுவார்! இப்படியே என் தன்னம்பிக்கையை வளர்த்து என்னை ஒரு முழுநேரக் கலைஞராகப் பட்டை தீட்டியது டி.வி. கோபாலகிருஷ்ணன் சார் தான்."

"டி.வி. நிகழ்ச்சியில் பங்கேற்ற நீங்கள் அதன் தாக்கம் பற்றி யோசித்ததுண்டா?"

"மிகவும் சக்திவாய்ந்த medium அது. பல்லாயிரம் பேரின் வீட்டு வரவேற்பறைக்கு என்னை அழைத்துப் போய்விடுகிறது. அதனால் என்னை அவர்கள் சந்திக்கும்போது ஏதோ அவர்கள் வீட்டு மனிதரைப் போல் எண்ணுகிறார்கள்; பழகுகிறார்கள். இதன் மூலம் அறிமுகமாகும் மனிதர்களின் வட்டமும் விரிவடைகிறது. ஆனால் டி.வி. மூலம் அளிக்கக் கூடிய கேளிக்கை, சினிமா சார்ந்ததாகவே பெரும்பாலும் அமைகிறது என்பது வருத்தத்துக்குரியது. என்ன செய்வது? பார்வையாளர்களின் விருப்பமும் அந்த சினிமா நிகழ்ச்சிகள்தான் என்பதை டி.வி. நிலையத்தாரே ஆராய்ந்து முடிவுகளையும் வெளியிட்டு விடுகிறார்கள். இத்தனைக்கும் இடையே உங்க நிகழ்ச்சியைப் பார்த்த பிறகு எங்களுக்குக் கர்நாடக இசையைப் பற்றி மேலும் தெரிஞ்சுக்க ஆசையாயிருக்கு' என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். இது ஆறுதலான விஷயம்."

"நீங்களும் சினிமாவில் பாடியிருக்கிறீர்கள். இனிமேல் பாடமாட்டீங்களா?"

"வேண்டாம். இது - இப்போது நான் செய்து கொண்டிருப்பது - நன்றாக இருக்கிறது. இதில் எனக்குக் கூடுதலாக ஏதோ ஒன்று கிடைக்கிறது. அதனால் இப்போது வேண்டாம்...."

"இன்று பாரதி இருந்தால் அவர் மீசை துடித்திருக்கும், இப்படிப் பேசியிருப்பார், இப்படிப் பாடியிருப்பார்... என்றெல்லாம் சொல்கிறார்கள். இன்றைய அரசியலைப் பற்றி பாரதியின் கொள்ளுப்பேரனான உங்கள் கருத்து....?"

"கருத்துச் சொல்லும் அளவுக்கு எனக்கு அதில் ஈடுபாடு இல்லை. ஆனால் பாரதியார் இன்றைய சமுதாய அவலங்களைச் சாடியிருப்பார் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை..."

"கவிதைகள், பாடல்கள் எழுதுவதுண்டா...?"

"இல்லை. அவை என் திட்டமிட்ட முயற்சியின்றி பீறிட்டு வரவேண்டும். அப்படி வராதபோது எழுதுவதில் அர்த்தமில்லை. இசை எனக்கு அவ்வாறு வருகிறது. அதனால் பாடுகிறேன். பாரதியார் கவிதைகளைக் கூர்ந்து கவனித்தால் அவருக்குப் பாட வேண்டும் என்ற ஆசை மிகுதியாக இருந்தது புரியும். அவருடைய அந்த ஆசை என் மூலமாக நிறைவேற்றப்படுவதாக எனக்குத் தோன்றுவதுண்டு."

சந்திப்பு : **சீதா ரவி**

வண்ணப்படங்கள் : **யோகா**

டி.என்.ஏ. சோதனை, உலகம் வியக்கும் சாதனை!

டி.என்.ஏ. சோதனை மூலம் ஏமாற்றும் காதலர்களை மட்டுமல்ல; கருவிலிருக்கும் குழந்தைக்குப் பிற்காலத்தில் வரக்கூடிய நோய்களைக் கூட கண்டறிய முடியும்!

விலாசினி இளம் இன்ஷூரன்ஸ் ஏஜெண்ட். குனிராமன் பணம் படைத்த பஸ் கம்பெனி முதலாளி. இன்ஷூரன்ஸ் பாலிஸி தொடர்பாக குனிராமனை அடிக்கடி சந்திக்கப் போனார் விலாசினி. தொடர்பு நெருக்கமாகி கட்டில் - பிறகு தொட்டில் என்று கொண்டு போய் விட்டது! குனிராமன் பின்வாங்கினார். கைக் குழந்தையுடன் விலாசினி அபலையாக நின்றார்.

இதுவரை தமிழ்ச் சினிமா போல் சென்ற கதையில், 'திடீரென்று திருப்பம் - மீதிக் கதையை சுஜாதா எழுதி முடித்தது போலா னது!

டி.என்.ஏ. பரிசோதனைகள் பற்றி பத்திரிகைகள் மூலம் அறிந்திருந்த விலாசினி, குனிராமன் பேரில் வழக்குத் தொடர்ந்தார்.

ஹைதராபாத்தில் உள்ள Centre for Cellular and Molecular Biology (CCMB) அமைப்பில் டி.என்.ஏ. பரிசோதனை செய்யப்பட்டு, குழந்தையின் தந்தை குனிராமன்தான் என்பதற்கான சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டன. கேரளா, தலசேரி நீதிமன்ற தலைமை மாஜிஸ்திரேட் ஞானசுதர்ஷனம், விலாசினிக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கினார். மாதம் ஐந்நூறு ரூபாய் ஜீவனாம்சம் வழங்க வேண்டிய நிலையில் குனிராமன் உயர்நீதி மன்றத்துக்கு அப்பீல் செய்ய, அவர் வழக்கு தள்ளுபடியாகி விலாசினிக்கு வெற்றியையும் டி.என்.ஏ. பரிசோதனை முறைக்கு முதல் முறையாக மிகப் பெரிய அங்கீகாரத்தையும் தேடித் தந்தது.

விலாசினி வழக்கில் சாட்சியங்கள் சமர்ப்பித்த (CCMB) விஞ்ஞானி டாக்டர் லால்ஜி சிங். ராஜீவ் காந்தி கொலை வழக்கிலும் சமீபத்தைய நைநா சகானி கோர சம்பவத்திலும் முக்கியமான உயிரியல் (DNA) சாட்சியங்கள் சமர்ப்பித்தவர். அவருடன் ஒரு பேட்டி :

மிகவும் பரபரப்பான தலசேரி வழக்கில் உங்கள் அனுபவம் என்ன...?

சோதனைகளை முடித்து, நீதிமன்றத்துக்கு முடிவுகளை அனுப்பி பல மாதங்கள் கழித்துத் தான் 'சம்மன்' வந்தது. 'இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம் தரப்படும்; தங்கும் செலவும் சாப்பாட்டுச் செலவும் தரப்படமாட்டாது' என்று அறிவித்தது! கோர்ட் சம்மன் என்றால் ஜனாதிபதிக்கே இந்தக் கதிதான் என்று சொன்னார்கள்! எங்கள் நிலைய இயக்குனர் இதை அலுவலகப் பணியாகக் கருதி செலவுகளை ஏற்க உதவி செய்தார்.



• டாக்டர் லால்ஜி சிங்

தலசேரியில் ஒரே ஒரு லாட்ஜ்தான். அங்கிருந்த மூன்று ஏ.சி. ரூம்களும் 'வி.ஐ.பி.களுக்காக ரிசர்வ் செய்யப்பட்டுள்ளன; தர முடியாது' என்று சொல்லி விட்டார்கள். கிடைத்த ரூமில் தங்க முடிவு செய்தேன். அதற்குள் நிருபர்கள் தேடி வர, சில நிமிடங்களிலேயே லாட்ஜ்காரர்கள் பார்வையில் என் அந்தஸ்து வி.ஐ.பி. லெவலுக்கு உயர்ந்து விட்டது! அப்புறம் ஏ.சி. ரூமும் உபசாரங்களும் - அமர்க்களம்தான்!

மறுநாள் காலை நீதிமன்றத்தின் சிறிய அறையில் கூட்டம் அலைமோதியது. மாஜிஸ்திரேட் டி.என்.ஏ. முறையை விவரிக்கச் சொன்னார். நான் ஸ்லைட் புரஜக்டரை உபயோகிக்க அனுமதி கேட்ட போது, முதலில் சாட்சிக் கூண்டை விட்டு வெளியே வரக் கூடாது என்று சொல்லி விட்டார்! அப்புறம் என்ன

தோன்றியதோ, இந்த வழக்கின் தேவையைக் கருத்தில் கொண்டு சிறப்பு அனுமதி அளித்தார்! ஸ்லைடைத் திரையிட வெள்ளைச் சுவர் வேண்டுமே! மாஜிஸ்திரேட் இருக்கையின் பின்னால்தான் அது இருந்தது. அவரோ தாம் இருக்கையை விட்டு எழுந்தால் கோர்ட் கலைந்து விடும் என்றார்! ஒருவழியாக, இருக்கையை விட்டு எழாமலே சற்று விலகி அமரச் சம்மதித்தார்.

நான் ஸ்லைடுகள் உதவியுடன் என் விளக்கத்தை முடிக்க, எதிர்த் தரப்பு வக்கீல் சரமாரியாகக் கேள்விகள் வீசினார். 'அமெரிக்காவிலேயே இந்த DNA முறை நீதிமன்ற அங்கீகாரம் பெறவில்லை. இந்தியாவில் ஒரு கச்சிதமான தொழில்நுட்பமாக அது எவ்வாறு இருக்க முடியும்?' என்று வாதிட்டார்.

தமது ஆராய்ச்சியே வீண் என்ற பழியை எந்த விஞ்ஞானியால் ஏற்க முடியும்! ரொம்பவும் கோபமாக வந்தாலும் நிதானமிழக்காமல் மாஜிஸ்திரேட்டிடம் என் பரிசோதனையின் நம்பகத் தன்மையை விளக்கினேன். அமெரிக்க நீதிமன்றங்கள் DNA முறையில் சுட்டிக் காட்டிய தவறுகள் என்ன என்றும், அவற்றை நாங்கள் எப்படி நிவர்த்தி செய்துள்ளோம் என்றும் விரிவாகச் சொன்னேன். நான்கு மணி நேர விளக்கத்தின் முடிவில் அவர் முகத்தில் திருப்தியின் சாயல் தெரிந்தது.

அதைவிட முக்கியம் - அநீதிக்கு உட்பட்ட அந்தத் தாயின் பார்வையில் நன்றி வழிந்தோடியது. எனக்குக் கிடைத்த எத்தனையோ விருதுகளை விட அந்த நன்றிப் பார்வையையே மகத்தான விருதாகக் கருதுகிறேன்.

மறுநாள் தலசேரியிலிருந்து பஸ் ஏறி புறப்பட்ட போது, நாளிதழில் வெளியாகியிருந்த என் புகைப்படத்தைக் கொண்டு என்னை அடையாளம் கண்டவர்கள் சரமாரியாக DNA பற்றி கேள்வி கேட்டுத் துளைத்ததும் மறக்க முடியாத அனுபவம்.

நான் சாட்சி சொல்லி ஐந்து மாதங்களுக்குப் பிறகு விலாசினிக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது.



• ....ராஜீவ் கொலை வழக்கில்..



• நைனா சகானி வழக்கில்.

டி.என்.ஏ. பரிசோதனை என்பது என்ன? கொஞ்சம் விளக்குங்களேன்...

'டிஆக்ஸிரிபோ நியூக்ளிக் ஆசிட்' என்பதுதான் டிஎன்.ஏ. உயிரியலில் இது ஓர் அற்புத விளக்கு! மனிதனின் உடலில் உள்ள கோடானுகோடி செல்கள் ஒவ்வொன்றிலும் இது ஏறத்தாழ ஆறு அடி நீளத்தில் அமைந்துள்ளது. ஒரு செல் என்பதே நாம் வெற்றுக்கண்ணால் பார்க்க முடியாதது என்னும் போது, அதற்குள் ஆறு அடி நீளத்தில் முடங்கியிருக்கும் டிஎன்.ஏ. அமைப்பு எவ்வளவு சன்னமாக இருக்கும் என்று கற்பனை செய்வது கூட கடினம்! இன்னும் தெளிவாகச் சொல்வதென்றால், பூமியிலிருந்து சூரியன் வரை நீளக்கூடிய ஒரு டிஎன்.ஏ. நூலைத் தயாரித்தால் கூட அதன் மொத்த எடையே அரை கிராம்தான் இருக்கும்!

இந்த டிஎன்.ஏ. அமைப்பானது ஒரு மனிதனுக்கு இருப்பது போல் மற்றவருக்கு இராது. (ஒரே மாதிரி பிறக்கும் இரட்டையர்கள் விதிவிலக்கு). இன்னும் துல்லியமாகச் சொல்வதென்றால், முப்பதாயிரம் கோடியில் ஒரு வாய்ப்பாகத்தான் ஒரே டிஎன்.ஏ. அமைப்பு இருவருக்கு அமைய சந்தர்ப்பம் உள்ளது. (உலக



"ஆபீஸ்ல வேலையை விட்டு நிறுத்துற அளவுக்கு, அப்படி என்ன தப்பு செஞ்சீங்க?"
"மறதியா, பைலை பார்க்கச் சொன்ன மானேஜர் கிட்டேயே லஞ்சம் கேட்டுட்டேன்."
— செங்குன்றம் கே.ஆர்.

மக்கள் தொகையே அறுநூறு கோடிதான்.) அதே சமயத்தில் ஒருவரது டிஎன்ஏ அமைப்பு அவரது அப்பா, அம்மாவின் டிஎன்ஏ அமைப்பைச் சில விஷயங்களில் ஒத்திருக்கும்.

ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட குணாதிசயமும் டிஎன்ஏ அமைப்பைப் பொருத்துதான் அமையும். உடலிலிருந்து ரத்த சாம்பிள் எடுத்து உயிர் வேதியியல் முறையில் ஒரு மாற்றத்தை விளைவித்து டிஎன்ஏவைத் தனியாகப் பிரிக்கலாம். மற்றொரு வேதியியல் முறையில் அதைக் கூறுபோட வேண்டும். எலக்ட்ரோபோரஸிஸ் என்னும் முறை மூலம், டிஎன்ஏ துகள்களை நீளவாரியாகப் பிரித்து கதிரியக்கப் பொருள் கலந்து எக்ஸ்ரே எடுத்தால், அப்பா - குழந்தை டிஎன்ஏ அல்லது அம்மா - குழந்தை டிஎன்ஏ என்று ஒப்பு நோக்கலாம்.

இந்த ஆராய்ச்சியில் உங்கள் முயற்சியால் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன?

அலெக் ஜெஃப்ரி என்ற ஆங்கிலேய விஞ்ஞானி 1985-இல் இந்த டிஎன்ஏ ஆராய்ச்சி முறையைக் கண்டுபிடித்தார். இதற்குத் தேவையான வேதிப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருந்ததால் செலவு அதிகமாயிற்று. சகவிஞ்ஞானி டாக்டர் ஸ்ரீதேவியுடன் இணைந்து, தேவையான வேதிப் பொருளைப் பாம்பின் உடலிலிருந்து பிரித்தெடுக்கும் முறையைக் கண்டுபிடித்துள்ளேன். ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்குள் பரிசோதனையை இப்போது செய்ய முடிகிறது. மேலும் இவ்வேதிப் பொருள் உபயோகிக்கும் முறையினால் (BICM Probe என்று இதற்குப் பெயர்) பரிசோதனையின் நம்பகத்தன்மை பல மடங்கு அதிகரித்துள்ளது.

டிஎன்ஏ ரேகை ராஜீவ்காந்தி கொலை வக்கில் எவ்விதம் உதவியது?

முதலில், மிகவும் சிதைந்து போன ராஜீவ் காந்தியின் உடலை ஒன்றிணைப்பதிலும், பின்பு தனுவின் பெல்ட் வெடிகுண்டு மூலமாகத்தான் கொலை நிகழ்ந்தது என்பதை நிரூபிக்கவும் டிஎன்ஏ ரேகைப் பரிசோதனை உதவியது. பெல்ட் துண்டங்களில் ஒட்டியிருந்த சதை தனுவின் உடலைச் சேர்ந்தது என்பதை நாங்கள் சந்தேகமற உறுதி செய்ததால்தான் விசாரணை மேற்கொண்டு தொடர முடிந்தது.

சிவராசன், நளினி ஆகியோரது உடல்களை வைத்து அவர்களது அடையாளத்தை உறுதி செய்யவும் நாங்கள் உதவினோம். இலங்கை அரசின் உதவியால் சிவராசனுடைய சகோதரனுக்கு டிஎன்ஏ ரேகைப் பரிசோதனை செய்து, சிவராசனது டிஎன்ஏ ரேகையுடன் ஒப்பிட்டு உறுதி செய்தோம். கனடா தேசத்தில் வசிக்கும் நளினியின் சகோதரியை இப் பரிசோதனைக்கு உட்படுத்த முதலில் கனடா அரசு இணங்கவில்லை. இந்தியாவில் இவ்வளவு நவீன பரிசோதனை முறை நடைமுறையில் உள்ளது என்பதை அவர்கள் நம்பவில்லை! பின்பு எங்களது விஞ்ஞான சாதனைகளை அவர்களுக்கு உணர்த்தி, பரிசோதனைக்கு உட்படுத்தி, நளினியின் அடையாளத்தையும் உறுதி செய்தோம்.

ராஜீவ் காந்தியால் தொடங்கி வைக்கப்பட்ட CCMBயிலேயே அவரது கொலை வழக்குக்கான சாட்சியங்கள் ஆராயப்பட்டது விதியின் கோர விளையாட்டுத்தான்!

இப்போது இந்த முறை நீதித் துறையில் எந்த அளவிற்கு பயன்படுகிறது?

இதுவரை நூற்றுக்கும் அதிகமான கேஸ்களில் இந்த முறையின் அடிப்படையில் நீதி வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக பெங்களூரில் டாக்டர் விஷாகனய்யா என்பவரும் அவருடைய மகனும் சேர்ந்து மருமகளை விஷமிட்டுக் கொன்று, துண்டு துண்டாக வெட்டிக் காட்டில் எறிந்து விட்டனர். பல மாதங்களுக்குப் பின் கிடைத்த ஒரு எலும்பை மட்டும் வைத்து இந்த முறையின் மூலம் அது கொலை செய்யப்பட்டவரின் உடலைச் சேர்ந்தது என்று நிரூபிக்கப்பட்டது. இன்னொரு கேஸில் நெல்லூரில் ஒரு பெண் திருமணமாகி இருபது ஆண்டுகளுக்குப் பின் கருவுற, தன் மூலம் அது நடந்திருக்காது என்பது கணவனுக்கு உறுதியாகத் தெரிந்தபோதும் அதை நிரூபிக்க இந்த முறை உதவியது.

வம்சாவளியைக் கண்டுபிடிப்பது தவிர இந்த முறைக்கு வேறு என்னென்ன பயன்கள் உள்ளன?

ஒரு நபரின் அடையாளத்தை சந்தேகமற நிரூபிக்க வேண்டிய தேவை ஏற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்த முறை

யைத் தவிர வேறு வழியில்லை. உதாரணமாக கொலை நடந்த இடத்தில் கொலையாளியின் சில முடிகள் கிடைத்தால் போதும்... கொலையாளி தனது முகவரியையே விட்டுச் சென்றதற்குச் சமம்! முடி வேரில் உள்ள செல்களை இப்பரிசோதனைக்கு உட்படுத்தினால் இவன் தான் கொலையாளி என்று திட்டவட்டமாகக் கூற முடியும். வம்சாவளியாக வரும் வியாதிகளை முன்கூட்டியே அறிந்து தகுந்த முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவும் இந்த முறை உதவும்.

இந்த முறையைத் தவறான காரியங்களுக்கு உபயோகிக்க முடியுமா?

எந்த ஒரு விஞ்ஞான சாதனைக்கும் தவறான உபயோகங்கள் இருக்கத்தான் செய்யும். அது உபயோகிப்பவரின் குணத்தைப் பொறுத்தது. எனது கருத்து என்னவென்றால், தவறான உபயோகம் தவிர இந்த முறையால் சில சமூகப் பிரச்னைகள் எழவும் வாய்ப்புண்டு. எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சி... கனடாவில் குடியுரிமை பெறுவதற்காக ஓர் இந்தியக் குடும்பம் அனைவருக்கும் இந்தப் பரிசோதனை செய்யப்பட்டது. மூன்று மகன்களில் ஒருவன் அந்தக் குடும்பத் தலைவருக்குப் பிறக்கவில்லை என்பது தெரியவந்தது!

அடுத்து நமது இந்திய சமூகத்திற்கே உரிய பிரச்னை... ஆண் குழந்தைகளின் மேல் உள்ள அமோக ஆசை. இந்த முறையின் மூலம் ஆண் குழந்தை வேண்டுமென்றால் உருவாக்க முடியும். அது மட்டுமல்ல... குழந்தையின் நிறம், உடற்கூறுகளைக் கூட நமது விருப்பத்துக்கேற்ப உருவாக்க முடியும். ஆனால் இப்படியெல்லாம் செய்வது இயற்கையுடன் விளையாடும் அபாயகரமான விஷமம்! தார்மீக ரீதியில் தவறும் கூட!

விருப்பத்துக்கேற்ப குழந்தைகளை உருவாக்குவது ஒருபுறம் இருக்கட்டும்... கருவிலிருக்கும் குழந்தைக்குப் பிறவியிலேயே வியாதிகள் இருப்பதை இந்த முறையின் மூலம் கண்டுபிடிக்க முடியும். வாழ்நாள் முழுதும் கஷ்டப்படப் போகும் அந்த ஜீவனைக் கருவிலேயே அழிக்கும் யோசனை வரலாம். அது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படுமா? வருங்காலத்தில் இந்தப் பரிசோதனை சாதாரணமாகும் போது, இதன் மூலம், ஓர் இளைஞனுக்குப் பல ஆண்டுகள் கழித்து வரவிருக்கும் வியாதிகள் பற்றி முன்கூட்டியே தெரியவந்தால், அவன் எதிர்காலம் என்னவாகும்? இதுபோன்ற பிரச்னைகளைச் சமுதாயம் சரியான சிந்தனையுடன் எதிர்கொள்ள வேண்டும்.



நிருபர் : சினிமா துறைக்கு வந்ததன் நோக்கம் ஏதாவது உண்டா?

நடிகை : அரசியலிலே, சேர வேண்டும் என்கிற உந்துதல்தான்....

— ஆர். வசந்தகுமார்

இந்த முறை பரவலாகப் பயன்படுத்தப்படுவதற்கு நடைமுறைப் பிரச்னைகள் என்னென்ன இருக்கின்றன?

இந்தப் பரிசோதனையை இப்போது இந்தியாவில் எங்கள் ஆய்வுக் கூடத்தில் மட்டும்தான் செய்ய முடியும். வேறு இடங்களில் செய்வதானால், முற்றிலும் குளிர்ப்பதன வசதியுடனான ஆய்வகம் வேண்டும். பவர்கட் என்பதே இருக்கக் கூடாது. CCMBயில் குளிர்பதனக் கருவிகளை கம்ப்யூட்டர் மூலம் தொடர்ந்து கண்காணிக்கும் வசதி உள்ளது. ஆனால் இதனது பலன்களை மக்கள் அறிய அறிய இதற்கான தேவை கூடிய வண்ணம் இருக்கிறது. அரசாங்கக் குற்றவியல் ஆய்வகங்கள் இந்தப் பரிசோதனைக்கான வசதிகளைப் பெறாவிட்டால் தனியார் பரிசோதனைக் கூடங்கள் இதைத் தொடங்க வாய்ப்புள்ளது.

மற்றொரு விநோத பிரச்னை என்னவென்றால், நமது சட்டத்தின் கீழ் ஒரு நபரின் உடலில் இருந்து அவரது அனுமதியின்றி மருத்துவப் பரிசோதனைக்காக சாம்பிள் எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது! இது பல சமயங்களில் குற்றவியல் புலனாய்வுக்குத் தடையாக இருக்கிறது. இதற்கும் தகுந்த தீர்வு காணப்பட வேண்டும்.

பின்குறிப்பு :

CENTRE FOR CELLULAR AND MOLECULAR BIOLOGY சர்வதேச அளவில் இந்தியாவுக்குப் புகழ் தரும் உயிரியல் ஆய்வுக் கூடம். இந்தியாவின் தலைசிறந்த உயிரியல் விஞ்ஞானிகள் இங்கு பணிபுரிகின்றனர். பெரும்பாலானவர்கள் மேலைநாடுகளிலிருந்து இங்கு (ஹைதராபாத்) வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆய்வுக்குத் தகுந்த வசதிகள் செய்து கொடுத்தால் வெளிநாடுகளில் வசிக்கும் சிறந்த இந்திய விஞ்ஞானிகளை மீண்டும் தாயகத்திற்கு ஈர்க்க முடியும் என்பதற்கு இந்த ஆய்வுக்கூடம் ஓர் அற்புதமான உதாரணம்.


பேட்டி : **எம். அருள்**

தெய்வபூமியின் கம்பீர தரிசனம்!

பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட மாபெரும் வளாகம். அதன் நடுவில் அழகான குளம். குளத்தின் மத்தியில் தங்கத்தால் எழில் மண்டபம்... குளத்தில் மூழ்கி எழுந்து கோயிலுக்குள் சென்று பிரார்த்திக்க சிறப்பான வசதி. மண்டபத்தின் மையத்தில் மலர்க் குவியல்களுக்கிடையே 'கிரந்த்'தை வைத்து, சுற்றிலும் குருமார்களும் பக்தர்களும் மனமுருகி பக்திப் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அமிர்தசரஸ் பொற்கோயிலில் இந்தக் காட்சியைக் கண்ட போது, மெய்மறந்து பரம் பொருளின் மகிமையில் கலந்தேன்.

வளாகத்தின் தூய்மையும், ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு அற்ற அன்பான



வரவேற்பும், சுவையான இலவச உணவும், வரும் அனைத்து பக்தர்களுமே நிதானித்து, பரபரப்பின்றி பிரார்த்தனை செய்து விட்டுப் போவதும் அந்த தெய்வ பூமிக்குத் தனியொரு கம்பீரத்தைக் கொடுக்கிறது. அதனை தரிசித்தது என் வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவம்.

– வசந்தா கல்யாணசுந்தரம்,
சென்னை – 30.

அகந்தை அழிந்தது!

என் நண்பர் பல வருடங்களாக மலைக்குப் போய் வரும் அனுபவஸ்தர். சாஸ்தாவிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர். அவருடன், பக்கத்து குடியிருப்பில் நடந்த ஐயப்ப பூஜைக்குப் போனேன். அவர் தோளில், அவரது நாலு வயதுக் குழந்தை மணிகண்டன் தூங்கியபடி வந்தான்.

நாங்கள் போய்ச் சேரவும் பூஜை ஆரம்பிக்க, மணிகண்டனும் விழித்துக் கொண்டு தோளை விட்டு இறங்கினான்.

பூஜை நடத்திய குருசாமி, "எங்கே அஷ்டோத்ரம் சொல்கிற சாமி?" என்று கொஞ்சம் அதட்டலாகவே அழைத்தார். அவர் எதிர் பார்த்திருந்த சாமி வரவில்லை. குருசாமி கோப வார்த்தைகள் கொட்டி விட்டு, அஷ்டோத்திரம் சொல்ல வேறு யாராவது வரும்படி அழைத்தார். உடனே முன்னுக்கு வந்த ஒருவர் புத்தகத்தைப் புரட்டி வார்த்தைகளைத் தேட ஆரம்பித்தார்.

"என் நண்பர் முந்திக் கொண்டு, இதுக்குப் போய் புத்தகமா? நான் சொல்றேன்," என்று ஆரம்பித்து கணீரென்று அஷ்டோத்ரம் கூற ஆரம்பித்தார். சொல்லிக் கொண்டே வந்தவருக்குத் திடீரென வார்த்தை மறந்து போக, ஒரு கனத்த மௌனம் நிலவியது. நண்பர் புத்தகத்தைத் தேடிப் புரட்ட ஆரம்பித்தார்.

அந்தச் சமயத்தில், "ஓம் சர்வ சாஸ்த்தார்த்த தத்வக்ஞாய நமஹ" என்று நான்கு வயது மணிகண்டன் அடியெடுத்துக் கொடுக்க, அத்தனை சாமிகளும் ஆடிப் போனார்கள்.

ஒருகணம் உடல் சிலிர்த்தது. நண்பர், "அகந்தையை அழிப்பவனே! ஓம் சமஸ்தாபராத ரக்ஷகரே! என்னை மன்னிச்சுடு அய்யா!" என்று பிரார்த்தித்து, புத்தகத்தைப் பார்த்து அஷ்டோத்திரத்தைத் தொடர்ந்து வாசித்து முடித்தார்.

– சி.எம். நாராயணன்,
திருப்பாப்புலியூர்.

(அனுபவங்கள் தொடரும்)

கி. ராஜேந்திரன்

ருஷ்ய மாஃபியா பற்றி சூர்யா சுவாமியும் கேள்விப்பட்டிருக்க வேண்டும். அவன் முகத்தில் கலக்கம் தெரிந்தது; செயல்களில் அவசரமிருந்தது. ஆனாலும் அவன் தன்நிலை இழக்கவில்லை.

"கிளம்பு, கிளம்பு, சீக்கிரம்!" என்றான். "எனக்கு முன்னால் நட! என் உயிர் காக்கும் கேடயம் நீதான்!"

பென்ஜமினை அழைத்து தனக்குப் பின்னால் வரச் சொன்னான். "கார் நிற்குமிடத்துக்கு வழிகாட்டு" என்றான். அணிந்திருந்த ஓவர்கோட் பாக்கெட்டில் துப்பாக்கி மறைத்து, அதனால் இன்பாவின் முதுகைக் குறிபார்த்தான். இடக்கரத்தில் பிரீஃப்கேஸ் பற்றிக் கொண்டு 'உம்' என்று அதட்டினான்.

ஒருவர் பின் ஒருவராக ரயில் விளையாட்டு போல் நடந்தார்கள்.

"எப்படி இருந்தாலும் நான் சாகத்தான் போகிறேன்" என்றான் இன்பா. "ருஷ்ய மாஃபியா குண்டு பாயும். தப்பினா நீ கட்டுத் தள்ளப் போறே."

"ஷட் அப்" என்றான் சூர்யாசுவாமி.

இன்டர்போல் அதிகாரிகள், ஸ்காட்லாண்ட் யார்ட், லண்டன் போலீஸ் எல்லாரும் தங்கள் கண்ணெதிரே அவர்கள் நடந்து போவதைக் கைகட்டி நின்று பார்த்தார்கள்.

"என் மேல் கைவைத்தால் சன்னல் டிரெய்ன் நெம்பர் 634-ல் மினி அணுகுண்டு வெடிக்கும்; ஜாக்கிரதை" என்று எச்சரித்தான்.

பிரீஃப்கேஸை உயர்த்திக் காட்டி அவர்கள் முகங்களில் அச்சம் பரவச் செய்தான்.

ஹோட்டலின் கார் பார்க்கை நெருங்கியதும், "எங்கேடா ருஷ்ய மாஃபியா?" என்றான் பென்ஜமின், கிண்டலும் கோபமுமாக.

"இங்கே இல்லேன்னா ஏர்போர்ட்டில் காத்திருக்கலாம். அவசரப்பட்டு என்னைக் கொன்று விடாதே" என்றான் இன்பா.

"எனக்காகப் பிரத்யேக வாடகை விமானம் தயாராயிருக்கு. அது ருஷ்யர்களுக்குத் தெரியாது. பயணிகள் விமானப் பகுதியில்தான் ஒரு வேளை என்னை எதிர்பார்த்திருப்பாங்க."


"அவங்க உன்னை விடக் கெட்டிக்காரங்க" என்றான் இன்பா.

அதன் பலன், மண்டையில் துப்பாக்கியின் அடிவாரம் 'நச்'சென்று தாக்கியது. மண்டைக்குள் ஓராயிரம் மின்னல்கள் ஒரே சமயத்தில் இறங்கின.

கதவு திறந்து, "ஏறுடா" என்று வெண்டை வார்த்தையால் திட்டினான்.

"பென்ஜி! டிரைவ் பண்ணு!"

முன் ஸீட்டிலேயே மூன்று பேர். இன்பா மையத்தில். இடுப்பில் துப்பாக்கி முனையின் உறுத்தல். பென்ஸ் வழுக்கிப் போனது; வேகமெடுத்தது.



இன்பா விழிகளை மட்டும் திசை திருப்பி, கைகடிகாரம் பார்த்தான். ஜான் கார்மிக் பத்துப் பதினைந்து நிமிஷ அவகாசம் கேட்டிருந்தான். கூடுதலாக ஓர் ஐந்து நிமிஷம் தர முடிந்தாலும் நல்லதே. பின்நோக்கி செலுத்தப்படும் ரயில், சிறியதொரு ஸ்டேஷனை அடைய, பயணிகள் எல்லோரையும் இறக்கி, பஸ்ஸோ லாரியோ கிடைத்த வாகனத்தில் ஏற்றி அனுப்புவார்கள். அந்த வட்டாரத்து மக்களும் ஆபத்து உணர்த்தி வெளியேற்றப்படுவார்கள். ஒரு

மைல் சுற்றளவுக்கு மனித வாடையே கூடாது. யுத்த முனைப்புடன் புயல் வேகத்தில் காரியங்கள் அநேகமாக நடந்து முடிந்திருக்கும்...

காரின் டேஷ் போர்டில் சிகரெட் லைட்டர் கண்ணில் தென்பட்டது. அதை அழுத்தி விட்டால், சில வினாடிகளில் சூடேறி சிவக்கும். இருவர் கவனமும் சாலையில் இருக்க, விரல் நீட்டி லைட்டரை 'ஆன்' செய்தான். விழிகளை வலப்புறம் செலுத்தி பென்ஜமின் தன் பக்கத்துக் கதவை 'லாக்' பண்ணவில்லை என்பதையும் கவனித்துக் கொண்டான்.

24



சற்றுத் தொலைவில் நாற்சந்தியில் பச்சை, மஞ்சளாயிற்று. "நின்று போ! இத்தனை ஆபத்துக்களுக்கு உட்பட்டு பணம் குவித்த பிறகு, அந்தச் செல்வத்தை அனுபவிக்காமல் ஒரு சாலை விபத்தில் நான் சாக விரும்பவில்லை'' என்றான் சூர்யா.

சிவப்புக்கு மரியாதை காட்டி, கார் வேகம் தணிந்து நின்றது.

அதே கணத்தில் இன்பா சிகரெட் லைட்டர் உருவி, சூர்யாசுவாமி கரத்தில் வைத்து அழுத்த, தோல் எரிந்து, புகைந்து, துர்நாற்றம் எழ, 'ஆ' என்ற அலறலுடன் சூர்யா சுவாமி வலக்கரத்தை இடக்கரத்தால் பற்றிக் கொண்டு உயர்த்த, துப்பாக்கி குறி விலகியது. இடி விழுவது போல் இன்பா பென்ஜமினை வலது தோளால் தாக்கினான்.

பென்ஜி கதவு மீது மோத, அது திறந்து கொண்டு அவனையும் கீழே இழுத்துக் கொண்டது. இமைக்கும் நேரத்தில் இன்பா சாலையில் கிடந்த பென்ஜமின் மீது பாய்ந்து விழுந்து, உருண்டு எழுந்து ஓடினான்.

அவன் கதவுக்கு வெளியே பாய்வதைப் பார்த்து, புரள்

இருட்டு

வதைக் காணாத சூர்யாசுவாமி, வேதனையுடன் கை இறக்கி, கண்மூடித்தனமாகச் சுட்டான். குண்டுகள் பென்ஜமின் உடலைத் துளைக்க, அலறித் துடித்து அடங்கினான், அந்த விசுவாச ஊழியன்.

இதற்குள் இன்பா ஓட்டமெடுத்திருந்தான். ஸீட்டில் நகர்ந்து, டிரைவர் இடத்துக்கு மாறி, இன்பா நோக்கி குறிபார்ப்பதற்கு முன், அவன் பல வரிசைக் கார்களைக் கடந்திருந்தான். ஆவேசத்துடன் புறப்பட்ட புல்லெட்டுகள் நாலைந்து கார்களில் பட்டுத் தெறித்து, உலோகச் சத்தம் எழுப்பின. சாலையில் சிலர் பீதியுடன் திரும்பி, குழப்பக் கூச்சல்கள் எழுப்பினார்கள். இந்தக் கொலை பாதகத்தைக் கவனியாத பலரும், பார்த்தும் வம்பில் சிக்கிக் கொள்ள விரும்பாத சிலரும், சிவப்பு மறுபடி பச்சையாக மாறியதும், முன்பக்கக் கார் நகராததால் கோபமுற்று, ஹாரன் ஒலித்து, அமர்க்களப்படுத்தினார்கள்.



"அந்த ஹோட்டல் மெனுவெல்லாம் புதுமையா, வித்தியாசமா இருக்குன்னு சொன்னியேன்னு போனது தப்பாப் போச்சு!"

"ஏன், பிடிக்கலையா?"

"ஊஹூம். ரொம்பப் புதுமையா, காசு இல்லாம சாப்பிட்டதுக்கு அரைச்ச மாவைக் கொடுத்து அரிசியாக்கித் தரச் சொல்றாரு!"

- பாஸு

"பென்ஜி! பென்ஜி!" என்று அழைத்தான் சூர்யாசுவாமி. காரிலிருந்தபடியே குனிந்து உடலை உயர்த்தினான். தலை தொய்ந்தது.

சூர்யாசாமிக்குக் கூட கண்களில் நீர்த்திரை படர்ந்தது. என்றாலும் தப்புகிற ஆர்வமே தலைதூக்க, கதவு சாத்தி, காரைச் செலுத்தினான். நாற்சந்தி கடந்து, நாலுலேன் சாலையில் ஹீத்ரோ நோக்கி வேங்கை வேகத்தில் பாய்ந்தது பென்ஸ்.

விமான நிலையத்தின் கண்ட்ரோல் டவர் தொலைவில் தெரியத் தொடங்கிய சமயம், சாலையை மறித்து போலீஸ் கார்கள் நின்றன. அவற்றின் பின்னாலிருந்து ஸ்டென் கன்கள் எட்டிப் பார்த்தன. ரேடியோ செய்தி அவர்களை அங்கு தருவித்து அணி வகுத்திருக்க வேண்டும்.

சூர்யாசுவாமியின் கால், பிரேக் அழுத்த, டயர்கள் கிரீச்சிட்டன. "அரைவேக்காட்டுப் பசங்களா!" என்று ஆரம்பித்து, பன்மொழி நாமாவளிகளில் அர்ச்சனை செய்தான். துஷ்டசகஸ்ரநாமம் பிறந்தது.

காற்றை வெட்டிச் சுழலும் ஹெலிகாப்டர் விசிறியின் 'சடக், சடக்' ஒலி நெருங்கி வந்து அடங்க, ஜான் கார்மிக் இறங்கினான்.

"சூர்யா! சரணடைந்து விடு!" என்று ஒலி பெருக்கியில் பேசினான். "சன்னல் ரயிலை பின்நோக்கிச் செலுத்தி, ஒரு சின்ன ரயில் நிலையத்தில் நிறுத்தி விட்டோம். பயணிகளை இறக்கி அப்புறப்படுத்தியாகி விட்டது. சுற்று வட்டார மக்களும் வீடு வாசல் துறந்து, பாதுகாப்பான இடத்துக்குப் போய் விட்டார்கள். இனி குண்டு வெடித்தாலும் பயமில்லை. உனக்கு ஆதாயமில்லை. கடலடி டன்னலுக்குச் சேதம் உண்டாகாது."

காரை விட்டு இறங்கி, "நீ பாதி உண்மையைத்தான் சொல்கிறாய்" என்று கத்தினான் சூர்யாசுவாமி. "பிரெஞ்சு அரசாங்கம் உலகக் கண்டனத்தைப் புறக்கணித்து, பசிபிக் மகா கடலில் 'பிகினி அடால்' பகுதியில் பிரும்மாண்டமான அணுகுண்டு சோதனை நடத்தும். ஆனால் உன்நாட்டில் ஒரு மினி அணுகுண்டு வெடிப்பதைக் கூட விரும்பாது. மக்களின் கோபத்துக்கு பயப்படும். கதிரியக்கம் பரவு தலைத் தடுக்கவே முயற்சி செய்யும். இன்னும் ஒரு நிமிஷத்துக்குள் எனக்கு நீ வழி விடா விட்டால் இப்போது அந்த ரயில் நிற்கும் ஊர் சுடுகாடாக மாறும்!"

கடைசி முயற்சியாகத் தான் நடத்திய ஒரு நாடகமும் தோற்று விட்டதை உணர்ந்தான் ஜான் கார்மிக். "ஜெயிச்சுட்டே ஸான் ரோக்கோ! நீ போகலாம்" என்றான். போலீஸ் கார்கள் உறுமின. போக்குவரத்துக்கு வழி விட்டு நகர்ந்தன.

கர்வப் புன்னகை மலர, சூர்யாசுவாமி காரைக் கிளப்பினான். "இப்ப மட்டுமில்லே, நான் எப்பவுமே ஜெயிக்கிறவன்டா,...." என்று அசிங்க வார்த்தை உதிர்த்தான்.

பென்ஸ், ஹீத்ரோவை அடைந்து, தனி நபர் விமானங்கள் போக்குவரத்துக்கான பிரத்யேகப் பகுதிக்குப் போனது. இறங்கி, கதவை அறைந்து விட்டு, பிரீஃப்கேஸ் ஒரு கரத்திலும் துப்பாக்கி, ஓவர் கோட்டின் பெரிய பாக்கெட்டில் மறைவாக ஏந்தியும் நடந்தான். யாரும் தடுக்கவில்லை. 'ஏன், எதற்கு' என்று கேட்கவில்லை. ஸ்காட்லாண்ட் யார்ட், 'ஆபத்தான மனிதன் என்று ஏற்கெனவே எச்சரிக்கை மணி அடித்திருக்கும்' என்று எண்ணி கர்வம் கொண்டான். கஸ்டம்ஸ், செக்யூரிடி எல்லாம் தாண்டிச் சென்றதும் தானியங்கு

முறையில் திறந்து கொண்டது கண்ணாடிக் கதவு. வெளியே அவன் வாடகைக்கு எடுத்திருந்த பிரத்யேக ஸெஸ்னா விமானம், ஜெ.ஜெ. 999 என்ற எண் தாங்கி பளபளத்து நின்றது. இவன் வரக் கண்டதும் அதன் இஞ்சின் கர்ஜிக்க ஆரம்பித்தது. சீருடை தரித்து படிகளின் அருகே நின்ற ஒருவன், "ஸான்ரோக்கோ?" என்று வினவினான்.

"ஆமாம்."

"நான் ஹண்டர். ஆலன் ஹண்டர். துணை பைலட்."

"ஓ.கே. போகலாம். சீக்கிரம்" ஆலனுக்கு முதுகு காட்டி படிகளில் அவசரமாக ஏறினான், சூர்யாசுவாமி.

பின்தொடர வேண்டிய ஆலன் துப்பாக்கி எடுத்தான். "ஸான் ரோக்கோ! உன்னுடைய போதைப் பொருள் வர்த்தக சாம்ராஜ்யத்தை ருஷ்ய மாஃபியா இன்று முதல் தனதாக்கிக் கொள்கிறது" என்றான்.

சூர்யாசுவாமி சிலையானான். புல்லெட்டுகள் பாயக் காத்திருந்தான்.

பாய்ந்தன. ஒன்று, இரண்டு, மூன்று. சரிந்து விட்ட ஸான்ரோக்கோவை மிதித்துக் கடந்து, ரேஸ் குதிரை வேகத்தில் படியேறி விமானத்தினுள் புகுந்தான், ஹண்டர். கதவு சாத்தப்படும் போதே விமானம் நகரத் தொடங்கி, வேகம் எடுத்து, மேலெழும்பி விண்ணை அளந்தது.

துப்பாக்கி சத்தம் கேட்டு சில தலைகள் எட்டிப் பார்க்க, வேறு சிலர் ஓடி வந்தார்கள். கீழே விழுந்து கிடந்த சூர்யாசுவாமி வேதனை பொறுத்துத் திரும்பி, 'கிட்ட நெருங்காதே' எனும் பாவனையில் இடக்கரத்தால் துப்பாக்கி காட்டினான். வலக்கரத்தால் பிரீஃப்கேஸ் திறந்து மிகுந்த பிரயாசைப்பட்டு சங்கேத மொழி தட்டினான்.

ஃபிரெஞ்சு மண்ணில், 'லா ஷாடலேன்' ஸ்டேஷன் இருந்த இடத்தில் பிரும்மாண்ட பள்ளம் தோன்றியது. அதனுள் தவிடுபொடியான ஸ்டேஷன் இடிபாடுகளும் ரயில் பாகங்களும் சரிந்து விழுந்தன. புகை மண்டலமும் தூசு மண்டலமும் ஒருசேர எழுந்து உயர்ந்து, உயர்ந்து ஒரு கரும் பூதமாக வானில் குடை விரித்தன. நாலாபுறமும் கதிரியக்கம் பரவ ஆரம்பித்தது. சூர்யாசுவாமியின் ஆவி உடலை விட்டு வெளியேறி, கொடூரச் சிரிப்புடன் வாயு மண்டலத்தில் கும்மாளமிட்டது.

போலீஸ் காரை வாசலில் நிறுத்தி விட்டு ஓட்டமாய் ஓடி வந்த ஜான் கார்மிக், "டூ லேட், அணுகுண்டு வெடித்து விட்டது" என்றான். "பரவும் கதிரியக்கத்தைக் கட்டுப்படுத்துவது தான் இனி முதல் வேலை" என்று ரேடியோவில் தகவல் கொடுத்தான்.

இன்னொரு போலீஸ் காரில் இன்பாவையும் இழுத்துப் போட்டுக் கொண்டு புயலாக வந்து சேர்ந்த ஜேம்ஸ் பினாக், "கடைசியில் ருஷ்ய மாஃபியா வந்து சேர்ந்தே விட்டது; அதனுடன் போராடுவதுதான் அடுத்த வேலை" என்றான்.

"இரண்டுமே உங்கள் தலைவலி. பெஸ்ட் ஆஃப் லக். நான் வந்த வேலை முடிந்தது" என்றான் இன்பசாகரன். "மனைவியை அழைத்துக் கொண்டு ஊர் போய்ச் சேருகிறேன்."

இரண்டு நாட்கள் லண்டனைச் சுற்றிப் பார்த்தார்கள்.

மேடம் டுஸாண்டில் இந்திரா காந்தி, ராஜீவ் மெழுகு பொம்மைகள் இவர்கள் பார்க்கவென்றே புதிதாக நிறுவப்பட்டன போல் தோன்றின. விக்டோரியா ஆல்பர்ட் மியூஸியத்தில் திப்புவின் பொம்மைப் புலியும் அது ஆங்கிலேய வீரனை அடிக்கும் போது எழும் கர்ஜனை ஒலியும் இவர்கள் வேடிக்கை பார்க்கவே இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இன்னும் இயங்குவதாகத் தோன்றியது. நைட் கிளப்புகள் நிறைந்த ஸோஹோ பகுதியில் விலைமாதர்கள் அழைப்பதைக் காண வேடிக்கையாக மட்டுமின்றி அனுதாபத்தையும் ஏற்படுத்தியது சாயாவுக்கு. "ஹூம் தப்பித் தவறி எவனாவது அகப்பட்டுக் கொண்டால், ஊர் திரும்பக் கூட காசு விட்டு வைக்க மாட்டார்கள். 'ஐயோ பாவம்' இவர்களில்லை, இவர்களிடம் சிக்கியவர்கள்தாம்" என்றான் இன்பா. "அனுபவம் பேசுகிறதா?" என்று கேட்டுச் சிரித்தாள், உற்சாகமாக. தியேட்டர் ஒன்றில் நாற்பது வருஷங்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் "மௌஸ் டிராப்" நாடகம் பார்த்துச் சிலிர்த்தார்கள். பிக்கடல்லி சதுக்கத்தின் கண் சிமிட்டும் வண்ண விளக்குகள் வாழ்த்தி வழி அனுப்பின.

மறுநாள் தேம்ஸ் நதியின் உல்லாசப் படகு பயணம், பல சரித்திர நிகழ்ச்சிகளையும் நிகழ்கால விநோதங்களையும் கண்டு ரசிக்க வைத்



"சிறு சேமிப்பு"ங்கறதை அந்த ஆள் தப்பாப் புரிஞ்சுக்கிட்டிருக்கார்."

"எப்படி?"

"முப்பது வருஷத்தில் இருபது ரூபாய்தான் சேமிச்சிருக்கார்!"

–வெ. ராஜாராமன்

தது. லண்டன் டவர் பாலம், உயர்ந்தும் தாழ்ந்தும் கப்பல்களுக்கும் சாலை வாகனங்களுக்கும் மாறி மாறி வழிவிடுவதைக் கண்டு பிரமித்தார்கள். பக்கிங்ஹாம் அரண்மனை வாசலில் சிலையாக நிற்கும் காவலர்கள் கண்ணிமைக்கிறார்களோ என்று காத்திருந்து பார்த்தார்கள். டிரஃபால்கர் சதுக்கத்தில் புறாக்களுக்குக் கடலை தூவி, நடைபாதைக் கலைஞர்களிடம் தங்கள் அரவணைப்பை வண்ண ஓவியமாக்கிக் கொண்டார்கள். லண்டன் டவரில் வைர, வைடூரியங்கள் பதிக்கப் பெற்று ஜொலிக்கும் அரச குடும்பத்தின் பரம்பரை ஆபரணங்களையும் கிரீடங்களையும் பார்த்து வாய் பிளந்தார்கள்.

"ஆளுக்கு ஒன்றாக கிரீடம் அணிந்து கொள்வோமா?" என்றாள்.

"வேண்டாம். அப்புறம் டயானா – சார்லஸ் ஆகி விட நேரலாம். இன்பா – சாயாவாகவே இருப்போம்" என்றான்.

அவசர ஷாப்பிங் செய்து அளவாகச் சில பரிசுப் பொருள்கள் வாங்கிக் கொண்டு, செயிண்ட் பால்ஸ் கதீட்ரல், நெ. 10, டௌனிங் தெரு, பார்லிமெண்ட் கட்டடம், அதன் உச்சியில் பிக்பென் கடிகாரம், ஹைட்பார்க்கின் பசுமை என்று களைத்துக் கால் கெஞ்சும் வரை சுற்றி விட்டு, நிமிஷத்துக்கு ஒரு விமானம் ஏறி இறங்கும் ஹீத்ரோவில் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் ஏறிய போது "அப்பாடா" என்றிருந்தது.

இதற்குள் பாரிஸிலிருந்து தகவல் கிடைத்திருந்தது : ஒரே ஒரு கால் ஊனமுற்ற பயணியைக் கூட சக பயணிகளின் கருணை காப்பாற்றி விட்டது. அனைவரும் தப்பி விட்டனர். 'லா ஷாடலேன்' ஊரும் சுற்று வட்டாரமும் தனிமைப்படுத்தப்பட்டு மாற்றுப் பாதையில் ரயில்கள் போக ஏற்பாடுகள் நடக்கின்றன....

சென்னை விமான நிலையத்தில் இவர்கள் இறங்கிய போது, அமெரிக்கா செல்ல ஏர் இந்தியாவில் ஏறத் தயாராக அனுபமா காத்திருந்தாள்.

"கங்கிராட்ஸ், அனு! தைரியமாப் போயிட்டு வா. அஞ்ஞான வாழ்க்கைல ஏற்பட்ட சில ஏமாற்றங்களை விஞ்ஞான உலகம் ஈடுகட்டிடும்" என்றான் இன்பா.

"யார் கண்டது? அந்த விஞ்ஞான உலகத்துல எத்தனையோ புதிய மனிதர்களைச் சந்திக்கப் போறே. காதலின் ரசாயனம் பற்றியும் நீ ஆராய நேரிடலாம்" என்றாள் சாயா.

"சந்தேகமே வேண்டாம் நிச்சயம் அப்படித்தான் நடக்கும்" என்றாள் ரஸியா.

"இந்த மாடர்ன் கிளியோபாட்ராவைக் கேளு! காதல் சம்பந்தமா சகலமும் அத்துப்படி!" என்றான் சின்னி.

எல்லோரும் குபீரென்று சிரிக்க, அனுபமாவும் அடக்க மாட்டாமல் கலந்து கொண்டாள். அந்த நகைப்பில் அவளுடைய சில பல ஏக்கங்கள் கரைந்து மறையும் என்ற நம்பிக்கை இன்பாவுக்கு ஏற்பட்டது.

இரண்டு மாதங்கள் சென்று உதகையில் ஒரு சின்ன ஹாலிடேக்கு வந்திருந்தார்கள். சூர்யாசுவாமியின் ஆசிரமம் களையிழந்து இருண்டு கிடந்தது. அரசு கையகப்படுத்திய அரண்மனையொத்த அந்த பங்களாவில் பூமி மட்டத்தின் கீழே இருந்த போதைப் பொருள்கள் கட்டெரிக்கப்பட்டன. டி.ஐ.ஜி. மருதகாசியையும் இன்னும் சில அதிகாரிகளையும், அமைச்சர்களையும் கூட குற்றவாளிகளாக்கும் சாட்சியங்கள் மயில்வாகனத்துக்குக் கிடைத்திருந்தன. சி.பி.ஐ. உரிய நடவடிக்கை எடுத்திருந்தது. வழக்குகள் வருஷக்கணக்கில் இழுக்கடிக்கும். ஆனால் ஸ்விஸ் வங்கிகளில் சூர்யாசுவாமி போட்டிருந்த லட்சக்கணக்கான டாலர்களோ அவன் உயிர் பிரிந்த அந்த வினாடியே ருஷ்ய மாஃபியாவின் லாபமாகி விட்டது!

ஏரிக்கரைச் சாலையில் காலாற நடந்த போது, இடையில் நின்று இன்பாவின் தோளில் சாய்ந்து, "என்னமோ மாதிரி இருக்குங்க" என்றாள் சாயா.

"ஏன்? ஏன்? என்ன? என்ன?" என்று கரிசனத்துடன் துடித்தான் இன்பா.

"போகப் போகத் தெரியும்; நாளாக ஆக உறுதிப்படும்" என்று அவன் கரத்தை அடிவயிற்றில் வைத்துப் பொத்தினாள்.

"அடி சக்கை! பெண்ணாயிருந்தால் ரைன் நதி நினைவாக ரம்யா; ஆணாக இருந்தா மைன் நதி நினைவாக மெய்யப்பன்!" என்றான்.

(முற்றும்)



"நம்ம ஏட்டையாவோட பாழாப்போன தொலைநோக்குச் சிந்தனையால பல சமயங்கள்ல நமக்கு நியாயமாச் சேர வேண்டிய மாமூல் கிடைக்காமலே போயிடுதுப்பா!"

"எப்படி?"

"நாளைக்கு எம்.எல்.ஏ.வா, வாரியமா, மந்திரியா வரப் போறவங்ககிட்ட ரொம்ப நச்சரிக்காம, கண்ணியமா நடந்துக் கோங்கிறார்!"

– நாகலை இளவல்





1996 ஜனவரி 14
யுவ மார்கழி 30
மலர் : 54
இதழ் : 24

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.




பயிர் காய்கிறது; அரசியல் தழைக்கிறது!

காவிரியில் தண்ணீர் வருகிறதோ இல்லையோ, தஞ்சை மற்றும் நாகை மாவட்ட விவசாயிகளின் நிலையை எண்ணி நமக்குக் கண்ணீர் வருகிறது.

ஆண்டுதோறும் நம்பிக்கையுடன் விதைத்துவிட்டு, கர்நாடகம் விடப்போகும் காவிரித் தண்ணீருக்காக இலவு காத்த கிளிகள் போல் ஏங்கும் அவர்களின் நிலையை இதுவரை ஆட்சியிலிருந்த எந்த அரசும் புரிந்து கொள்ளவில்லை. அவ்வாறு புரிந்து கொண்டிருந்தால், இந்தப் பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வுக்கு ஓர் அஸ்திவாரமாவது இதற்குள் போடப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், நடப்பது என்ன...? ஒவ்வொரு ஆண்டுமே துளியும் முன்யோசனையோ, எச்சரிக்கை உணர்வோ இன்றித்தான் அரசுகள் செயல்படுகின்றன. நெருக்கடியான நிலை உருவாகும் போதுமட்டும் சிலிர்த்தெழுகின்றன. தஞ்சை தமிழ் மாநாட்டின் போது, காவிரிக்குக் குறுக்கே மிதவைப் பாலம் அமைப்பதற்காக ஏராளமான நீரை மேட்டூரிலிருந்து வெளிப்படுத்தி வீணடித்த தாகச் சொல்லப்படுகிறது. இதைத் தெரிந்தே அனுமதித்த தமிழக முதல்வர்தான் அண்மையில் டெல்லிக்கும் தமிழகத்துக்குமாகப் பறந்து பறந்து தண்ணீர் கேட்டார்!

கர்நாடகமும் சரி, தமிழகமும் சரி காவிரிப் பிரச்னையை அரசியல் கண்ணோட்டத்தில்



மட்டுமே அணுகி அவசர அவசரமாகத் தாற்காலிகத் தீர்வுகள் காண்பதென்பது வழக்கமாகி விட்டது. இதனால் தமிழக விவசாயிகளுக்குத் திரும்பத் திரும்ப பலத்த அடி விழுகிறது.

இம்முறை பிரச்னை எழுந்தபோது, நடுவர் மன்றம் பதினோரு டி.எம்.சி. தண்ணீரை விடச் சொல்லி கர்நாடக அரசுக்கு ஆணை பிறப்பித்தது.

ஆனால் அந்த ஆணையைக் கர்நாடக அரசு நிறைவேற்றவில்லை. உச்ச நீதிமன்றமோ, கர்நாடக அரசை நடுவர் மன்றத் தீர்ப்பை நிறைவேற்றுபடி நிர்ப்பந்திக்காமல், இரு மாநில முதல்வர்களுடனும் பிரதமர் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்; நடுவர் மன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தச் செய்ய வேண்டும் எனக் கூறிவிட்டது.

தனது இந்த முடிவினால் உச்சநீதி மன்றம் பிரதமரையும் சம்பந்தப்பட்ட இரு மாநில முதல்வர்களையும் பலத்த தர்மசங்கடத்துக்கு உள்ளாக்கிவிட்டது. தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் பிரதமர் யாரையும் பகைத்துக் கொள்ள இஷ்டமின்றி, 'கர்நாடகம் உடனடியாக ஆறு டி.எம்.சி. தண்ணீரை விடுவிக்க வேண்டும்' என்று மத்யஸ்தம் செய்ய, அதையும் கர்நாடகம் வேண்டா வெறுப்பாக நிறைவேற்றுவதாகக் காட்டிக் கொள்கிறது. இதற்கே, கன்னட தீவிரவாதிகள் வன்முறையில் இறங்கிவிடும் அபாயம்.

தேவேகௌடாவும் ஜெயலலிதாவும் பட்டாளமென அணி திரட்டிக் கொண்டு டெல்லிக்குப் பறந்ததுதான் மிச்சம். முதல்வர்களுடன் சென்ற குழுவினருள் ஒருவர் கூட பிரதமரைச் சந்திக்கவில்லை. ஏராளமான வரிப்பணம் விரயமானதோடு சரி!

ஆகக் கூடி பிரதமரின் உத்தரவோ,- நடுவர் மன்றத்தின் ஆணையோ, உச்ச நீதிமன்றத் தீர்ப்போ எதுவாயினும், அரசியல் காரணங்களின் முன்னிலையில் அவையெல்லாம் வெறும் கிள்ளுக் கீரை என்று ஆகிவிட்டன!

ஆயக்கட்டுதாரர் உரிமை என்பது சர்வ தேச அளவில் அங்கீகரிக்கப்படும் சட்டம். இந்த உரிமை மட்டும் மதிக்கப்படாவிட்டால், இன்று பல ஐரோப்பிய நாடுகளில் விவசாயமே நடக்காது!



ஒரே நதி இரண்டு மூன்று நாடுகள் வழியே கூட ஓடுகிறது அங்கே. இது விஷயத்தில் பல் வேறு நாடுகளுக்கிடையே அங்கு நிலவும் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இங்கே இரு மாநிலங் களுக்கிடையே இல்லாதிருப்பது சோகம்!

கர்நாடக அரசோ, 'தமிழகத்தின் உரிமையை மறுக்கவில்லை; ஆனால் அங்கு சாகுபடி நிலப்பரப்பின் விஸ்தீரணம் கூடிவிட்டது; காவிரியில் நீர் வரவோ குறைந்துவிட்டது - இதற்கு நாங்கள் எப்படிப் பொறுப்பாக முடியும்?' என்று வாதிடுகிறது.

தமிழகமோ 'ஒப்பந்தத்தை மீறி கர்நாடகம் அணைகள் கட்டிவிட்டதே; அங்கும் கூட சாகுபடி நிலப்பரப்பு அதிகரித்து விட்டதே!' என்று பதிலுக்குக் கேட்கிறது.

நடந்து முடிந்தவற்றை மாற்றுவதற்கில்லை. ஆனால் இரு அரசுகளுமே இணைந்து செயல் பட்டால் பிரச்னைக்கு நல்ல தீர்வைக் காண முடியும்.

விவசாயத்தைப் பொறுத்தவரை கர்நாடக - தமிழக எல்லைக்கோடு என்று ஒன்று இருப் பதையே மறந்துவிடலாம். இரு மாநில விவசாய, விஞ்ஞான நிபுணர்கள் இணைந்து, அந்த ஒட்டுமொத்த நிலப்பரப்புக்கான புதிய விவசாய நடைமுறைத் திட்டம் ஒன்றை வடிவமைக்கலாம். விளை பொருளையும் அவற்றின் பயனையும் இரு மாநிலங்களுக்கும் பொதுவாக்கலாம்.

இதை ஏதோ நடைமுறைக்கொவ்வாத இலட்சிய திட்டம் என்று எண்ணாமல், அரசியல் வேறுபாடுகளை உதறிவிட்டுச் செயல்பட வேண்டும். இந்தத் திட்டத்தை முற்றிலுமாக விவசாய பொருளாதார விஞ்ஞான நிபுணர்களிடம் ஒப்படைத்துவிட்டு இரு அரசுகளும் ஒதுங்கி நின்று உதவினாலே போதுமானது.

நவீன விவசாய முறைகளும் குறைந்த தண்ணீர் உபயோகித்து நிறைய விளைச்சல் காணும் தொழில் நுட்பமும் புகுத்தி, நிபுணர் குழு வெற்றிகரமான ஒரு செயல்திட்டத்தைத் தர முடியும். அத் திட்டம் உணர்வுபூர்வமான பந்தத்தை ஏற்படுத்தி தேசிய அளவில் கூட ஒருமைப்பாட்டுக்கு முன்னுதாரணமாக அமைய முடியும்.

...இரண்டாம் பரிசு ரூ. 3,000
...வழங்கப்படும்.)
பரிசு விழாதவர்களுக்கு தலா ரூபாய் 500 வீதம் வழங்கப்படும்.
சிறப்பு பரிசு : 6-12-95 முதல் 6-1-96 வரை கீழ்கண்டபடி வழங்கப்படும்.

3 டிக் தொடர்ந்து அடிப்பவருக்கு	டிபன் கேரியர்	10	நபருக்கு
4 டிக் தொடர்ந்து அடிப்பவருக்கு	Wall Clock	5	நபருக்கு
5 டிக் தொடர்ந்து அடிப்பவருக்கு	சைக்கிள் & JP	1	நபருக்கு
6 டிக் தொடர்ந்து அடிப்பவருக்கு	½ சவரன் & JP	1	நபரு...
7 டிக் தொடர்ந்து அடிப்பவருக்கு	1 சவரன் & ...		

பொழுதுபோக்கின் பெயரால் சூதாட்ட விடுதிகள்!



சென்னை நகரின் பல இடங்களிலும் 'மனமகிழ் மன்றம்' என்கிற பெயரில் சூதாட்ட விடுதிகள் இயங்கி வருவதைச் சுட்டிக்காட்டி இருந்தார் ஒரு வாசகர். அவர் குறிப்பிட்டிருந்த இடங்களில், ஓர் இடத்துக்குச் சென்றோம்.

பெரிய ஸைன் போர்டு, ஏஸி வசதி, தனி கேஷ் கவுண்டருடன் சப்தமில்லாமல், ஓர் உள்ளடங்கிய இருட்டு மாடி அறையில் நடைபெறும் சூதாட்ட உற்சவத்தைக் காண நேரிட்டது.

நம்மைக் கண்டதும், "ஆட வந்திருக்கீங்களா? புதுசா இருக்கே?"என்று இழுத்த உரிமையாளரிடம் நாம் யாரென்பதைச் சொன்னதும் மிரண்டார். வியர்த்துக் கொட்டி, நா குழற, "அதெல்லாம் ஒண்ணுமில்லைங்க. சும்மா தமாஷா, பொழுது போக்கா நடக்கும். டேபிள் டென்னிஸ், கேரம், செஸ் தவிர ரம்மி மட்டும் ஆடுவாங்க. ரெக்ரியேஷன் கிளப் நடத்த லைசென்ஸ் கூட வாங்கி இருக்கேன்"என்றார்.

"ரெக்ரியேஷன் கிளப்" என்று லைசென்ஸ் வாங்கித்தான் இது போல சூதாட்டம் நடத்த முடியும். சூதாட்டத்துக்கு என்று யார் லைசென்ஸ் தருகிறார்கள் இங்கே?" என்றார் அருகில் ஒரு டீக்கடைக்காரர்.

அந்த உரிமையாளர் சொன்ன டேபிள் டென்னிஸ், கேரம், செஸ் எல்லாம் நடப்பதற்கான அடையாளங்கள் அங்கு இல்லை. நாலைந்து வட்ட டேபிள்களில் ரம்மி யாகம் தான் நடந்து கொண்டிருந்தது. டோக்கன் வைத்து ஆடிக் கொண்டிருந்தார்கள். டேபிள் நிறைய நோட்டுகளும் சில்லறையுமாக.

சுமார் நான்கு வருடங்களாக இங்கே இது நடந்து கொண்டிருப்பதாகச் சொன்ன அந்த உரிமையாளர் "நான் என்னங்க! சின்ன அளவு தாங்க!"என்று விட்டு, வேறு சில 'பெரிய' கிளப்புகளை இனம்காட்டி, போக வழியும் சொன்னார்.

நகரின் பல முக்கிய பகுதிகளில் உள்ளடங்கினாற்போல 'ஏ' கிளாஸிலிருந்து

"புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கத் தயார்!"



"பொழுது போக்கு இடங்களில் காசு வைத்துச் சீட்டாடுவது சரிதானா? போலீஸ் அதைக் கண்டு கொள்ளாதா?" சென்னை நகர போலீஸ் கமிஷனர் ஸ்ரீ. வீரராகவனிடம் கேட்டோம்.

"இது போன்ற மனமகிழ் மன்றங்கள், ரெக்ரியேஷன் கிளப்புகள் ஆகியவற்றுக்குப் போலீஸ் லைஸென்ஸ் தேவையில்லை. ஏழு பேர் சேர்ந்து சங்கங்கள் பதிவு செய்வது போல் இது போன்ற மன்றங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். அந்த ஏழு பேர் ஆரம்



• ரம்மி யாகம்

தரை டிக்கெட் கிளாஸ் வரையிலான இவ்வகை ஏரியா, போலீஸை சரிக்கட்டுவதன் மூலம் கோலாகலமாக நடக்கின்றன.

நாம் சென்ற மனமகிழ் மன்றத்தில் வங்கி ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள் முதல் லுங்கி கட்டி, பீடி குடித்த ஆசாமிகள் எனப் பல ரகத்தவரைக் காண முடிந்தது!

'மது அருந்தக் கூடாது' என்று போர்டு வைத்திருந்தார்கள். ஆனால் நுழைந்ததுமே 'குப்'.

இருட்டு மூலைகளில் சிலர் குடித்து. உருண்டிருந்ததும் காப்பி, டீ, சிகரெட் சப்ளை பையன்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்ததும் மாடிப்படி வாசலில் ஒரு ஆசாமி 'பாதுகாப்பாக' நின்று, வருபவர்களை 'எடைபோட்டு' உள்ளே அனுப்பிக் கொண்டிருந்ததும்...

எல்லாவற்றையும் விட விசேஷம், முக்கிய தினங்களில் இங்கே உறுப்பினர்களுக்கு 'டோர்னமெண்ட்'டே நடத்துகிறார்கள்!

மூன்று 'டிக்' அடிப்பவர்களுக்கு டிபன் கேரியர், ஆறு 'டிக்' அடிப்பவர்களுக்கு அரை சவரன் என்று பரிசளிப்பு வைபவங்கள் வேறு! (காண்க – அழைப்பிதழ்!)

சமூக நீதி காப்பவர் கவனிக்க வேண்டும்.

- ஔரங்கசீப்

படம் : **ஸ்ரீஹரி**

பிக்கும் மன்றங்களில் எழுநூறு பேர் உறுப்பினர்களாகச் சேரலாம். தமிழ்நாடு முழுக்க 25,500 மனமகிழ் மன்றங்கள் இருக்கின்றன. சென்னையில் சுமார் 5000 இருக்கின்றன.

"இந்த மனமகிழ் மன்றங்களில் பொழுது போக்கு ஆட்டங்கள் தான் விளையாட வேண்டும். Games of skill, Games of chance என்று இருக்கின்றன. 'திறமையைக் காண்பிக்கும் விளையாட்டுத்தான் ஆடுகிறோம்' என்று சொன்னால் ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனால் பொழுது போக்கு என்ற பெயரில் சூதாட்டத்தில், திறமையைக் காண்பிக்கிறோம் என்று நடந்து கொள்வார்களேயானால் அதை சட்டப்படி கட்டுப்படுத்த போலீஸுக்கு அதிகாரங்கள் இருக்கின்றன.

"மனமகிழ் மன்றங்களில் காசு வைத்து ஆடினால் Tamil Nadu Games Act படி நடவடிக்கை எடுக்க முடியும். போலீஸ் சோதனையின் போது இது கண்டு பிடிக்கப் பட்டால் ஸ்பாட்டில் பறிமுதல் செய்யப்படும் பணம், அரசு கஜானாவுக்குப் போய்விடும். தவிர கோர்ட்டில் அபராதமும் உண்டு. ஆகவே நான் சொல்ல விரும்புவது குறிப்பிட்ட மன்றத்தில் இப்படி சூதாட்டம் நடக்கிறது என்று புகார் கொடுத்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கிறோம் என்பதுதான்.

"ஆனால் பிரச்னை என்னவென்றால் சமுதாயத்தில் டாக்டர்கள், வழக்கறிஞர்கள், ஏன் பத்திரிகையாளர்கள் கூட இது போன்ற அமைப்புகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அது போன்ற இடங்களில் சோதனை செய்யத் துவங்கினால் போலீஸ் அக்கிரமம் என்று பேசத் துவங்கி விடுகிறார்கள். மேலும் ஏற்கெனவே வேலைப் பளுவால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் எங்களுக்கு இவைகளை கண்காணிக்க நேரமும் இல்லை!"

சந்திப்பு : **ப்ரியன்**

மூன்றாவது கண் - 23

பொதுமக்களோடு நல்லுறவு கொள்ளுதல் என்பது காவல் துறையின் தலையாய கடமை.

மக்களின் முழு நம்பிக்கையையும், ஒத்துழைப்பையும் பெற்றுவிட்டால், போலீஸால் ஆகாத காரியம் என்று எதுவுமே இருக்க முடியாது!

ஆனால், போலீஸ் என்றாலே ஆளுங்கட்சியின் ஆயுதம் என்று பெரும்பாலோர் எண்ணிக் கொண்டிருக்கையில், மக்களின் நம்பிக்கையைப் பெற்று, அவர்களுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது எப்படி?

காவல் துறையில் சேர்ந்த புதிதிலிருந்தே நான் இது பற்றி யோசித்துக் கொண்டிருப்பேன்.

மக்களுடன் நட்பு கொள்ள, திருவிழாக் காலங்கள் மிக உகந்தவை என்பது என் கணிப்பு.

பாதுகாப்புப் பணி ஒருபுறம் இருக்க, நட்பு முறையில் பொதுமக்களுடன் பழகி, அவர்களுக்கு சிறுசிறு உதவிகள் செய்து, புதிய இடமானால் வழிகாட்டி, அன்பாகப் பேசுவதன் மூலம் அவர்களது நன்மதிப்பைப் பெறலாம்.

1963ல் மதுரை மீனாட்சி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் நடந்த சமயம், இதற்கான வாய்ப்பு போலீஸாருக்குப் பெரும் அளவில் கிடைத்தது. அப்பொழுது மதுரையில் எஸ்.பி. யாக இருந்த செந்தாமரை, கும்பாபிஷேகத்துக்கு திரளாக வந்த 6-7 லட்சம் மக்கள் அமைதியாகவும், ஒழுங்காகவும், மனமகிழ்ச்சியோடும் அம்மனைத் தரிசித்துச் செல்ல மிகச் சிறந்த பந்தோபஸ்து ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அப்பொழுது ராமநாதபுரம் மாவட்ட எஸ்.பி.யாக இருந்த நானும் என் மாவட்ட போலீஸாரும் பந்தோபஸ்தில் பணி ஏற்றோம். பல வகைகளிலும் பொதுமக்களுக்கு அப்போது உதவி புரிந்த போலீஸாருக்கு மக்களிடையே நல்ல மதிப்பும் நட்புறவும் ஏற்பட்டன.

இதே போல் ராமேஸ்வரத்திலும் புனித யாத்திரையாக வரும் பயணிகளுக்கு உதவுவதற்கென்றே அங்கிருந்த போலீஸாருக்கு சிறப்புப் பயிற்சி அளித்தேன். பெரும்பாலும் வட மாநிலங்களிலிருந்து அங்கு புனித யாத்திரை வரும் பக்தர்களே அதிகம் என்பதால், இந்தி தெரிந்த போலீஸ்காரர்களுக்கு அங்கே ட்யூட்டி போட்டேன்.

டூரிஸம் டெவலப்மென்ட் துறை, கைடுகள் எல்லாம் அத்தனை பிரபலமாகாத அக்காலத்தில், போலீஸ்காரர்களே கைடாகவும் இருந்து செயல்பட்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

'இதெல்லாம் செய்தாக வேண்டும் என்று சட்டத்தில் இல்லையே' என்று கேட்டால், 'செய்யக் கூடாது என்று மட்டும் சட்டம் சொல்கிறதா?' என்பதுதான் என் பதில்.

1966ல் திருச்சி மாவட்ட டி.ஐ.ஜியாக இருந்த போது, போக்குவரத்துக் காவலர்கள் (டிராஃபிக் கான்ஸ்டபிள்கள்) தம் பணியில் எத்தனை தூரம் ஈடுபாட்டுடன், சிரத்தையாகச் செய்கிறார்கள் என்று கண்டறிய விரும்பி, ஓர் உத்தியைக் கையாண்டேன்.

திருச்சி ரோட்டரி கிளப் அமைப்புடன் கலந்து பேசி, அவர்கள் ஒத்துழைப்புடன் நூறு கார்டுகள் அச்சிட்டோம்.

மக்களின் திருப்திக்கேற்றவாறு எந்த அளவு போலீஸார் தங்கள் பணிகளைச் செய்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள நாங்கள் ஆவலாக உள்ளோம் என்று குறிப்பிட்டு. அதற்கு ஒரு சோதனைத் திட்டமாக இந்த கார்டுகளை உபயோகப்படுத்துகிறோம் எனக் குறிப்பிட்டோம்.

அரசியல் தலையீடில்லாத போலீஸ்துறை சாத்தியமா?

அந்த கார்டுகளை, நகரில் உள்ள சில டாக்டர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள், வியாபாரிகள், பெண்கள் - இப்படிப் பலருக்கு அனுப்பி, கூடவே ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

தினசரி திருச்சி நகரின் பல பகுதிகளில் பயணம் செய்யும் தாங்கள், ஆங்காங்கே பணியில் இருக்கும் கான்ஸ்டபிள்களை ஒரு பதினைந்து நாள் நன்கு கவனியுங்கள். போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பணிகளை, மக்களுக்கு வசதியாகச் செய்து தரும் — உங்கள் பார்வையில் சிறந்தவராகத் தெரியும் கான்ஸ்

சி.வி. நரசிம்மன்

டபிளிடம் பதினாறாம் நாள் இந்தக் கார்டைக் கொடுத்து விடுங்கள்' என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதன்படியே அந்த நூறு பேரும் செயல் பட, பதினைந்து நாட்கள் கழித்து, டிராஃபிக் கான்ஸ்டபிள்களிடம் வந்திருந்த கார்டுகளைக் கொண்டு வரச் சொன்னேன்.

இரண்டு பேருக்கு மிக அதிகமான கார்டுகள் சமமாக வந்திருந்தன!

உடனே ரோட்டரி கிளப் அவர்கள் இருவருக்கும் பெரிய அளவில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி, பாராட்டு விழா நடத்தி, பரிசும் அளித்தது.

இந்த நிகழ்ச்சி, மற்ற கான்ஸ்டபிள்களுக்கும் பணியில் அதிக ஆர்வம் காட்டி, பொது மக்களின் நன்மதிப்பைப் பெற ஒரு தூண்டுகோலாக அமைந்தது!

இதோடு தொடர்புடைய இன்னொரு விஷயத்தையும் இப்போதே சொல்லி விடுகிறேன்.


நான் சென்னை திரும்பி வந்து ரிடையரான பிறகு ஒரு நாள்.... ஒரு வங்கி அதிகாரி (அவர் வங்கியில்தான் நான் கணக்கு வைத்துள்ளேன்) என்னிடம் சாதாரணமாகக் கேட்டார், "சார், எங்கள் சர்வீஸ் திருப்திகரமாக உள்ளதா?"

நான் சொன்னேன், "எனக்கு திருப்திதான். ஆனாலும் நீங்கள் உங்கள் வங்கியுடன் தொடர்பு கொள்ளும் பொது மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வது என்பதை ஒரு சிஸ்டமாகக் கொள்ளலாமே?" என்று திருச்சி ரோட்டரியுடன் இணைந்து நான் செய்ததை உதாரணமாகச் சொன்னேன்.

அவர் அலறிவிட்டார்.

"ஐயோ! யூனியன்காரர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்களே!"

எனக்கு வருத்தமாக இருந்தது. மக்களின் சௌகரியத்துக்காக இயங்கும் ஓர் அமைப்பு, மக்களின் கருத்தைப் பற்றி அக்கறை கொள்ளாமல், யூனியனுக்கு பயந்து நடக்க வேண்டிய நிலை எவ்வளவு வேதனையான விஷயம்!



"சரண்சிங் உள்துறை அமைச்சராயிருந்த காலத்தில் நாங்கள் அளித்த அறிக்கையை இப்போதும் பயன்படுத்தலாம்...."

மற்ற எல்லா துறைகளை விடவும் மக்கள் பணியில் நேரிடையாகவும் அதிகமாகவும் ஈடுபடுகிற போலீஸ் துறைக்கு பொது மக்களின் சப்போர்ட் எவ்வளவு முக்கியம் என்பது பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேனல்லவா?

இதற்கு ஆளும் வர்க்கத்தினரிடமிருந்தும் அரசியல்வாதிகளிடமிருந்தும் குறுக்கீடு இல்லாமல் போலீஸ் துறை சுதந்திரமாகச் செயல்பட வேண்டியது அவசியம்.

நமது அரசியல் திட்டத்தின்படி கோர்ட்டுகள் சுதந்திரமாக இயங்குகின்றன. ஆனால் கோர்ட்டுகள் பரிசீலிக்கும் சாட்சியங்களை முதல் கட்டத்தில் தேடி, விசாரித்து, ரிகார்டில் கொண்டு வரும் பொறுப்புடைய காவல் துறைக்கு மட்டும் சுதந்திரம் இல்லை என்பது தான் இதில் உள்ள முரண்பாடு.

போலீஸ் துறையை சீரமைப்பதற்கும் சிக்கல்களில் சிக்காமல் அது சீராக இயங்குவதற்கும் வழி முறைகளை வகுத்துத்தர, ஜனதா அரசு ஆட்சியிலிருந்த போது உள்துறை அமைச்சர் சரண்சிங் தேசிய போலீஸ் கமிஷன் என்றொரு அமைப்பை நிறுவினார்.

தர்ம வீரா தலைமையில் நான் உட்பட ஆறு பேர் உறுப்பினர்களாக இருந்து செயல்பட்ட NPC பற்றி முன்பு ஒருமுறை லேசாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆங்கிலேயர் காலத்தில் அமுலில் இருந்த காவல் துறைச் சட்டங்களே சுதந்திரத்துக்குப் பின்னும் நம் நாட்டில் தொடர்ந்து வந்துள்ளன. அரசுகள் மாறினாலும் அதே பழைய சட்டங்கள்தான். காவல் துறை என்பது ஆளும் கட்சிக்கு அடிபணிந்து நடக்க வேண்டிய அதே நிலைமைதான்!

'அரசியல் உள்ளிட்ட எந்த ஒரு குறுக்கீடு



நிருபர் : தங்களுக்கும் தங்கள் கணவருக்கும் தகராறு என்று வந்துள்ள செய்தி பற்றி...?

நடிகை : யார் சொன்னது? நாங்கள் விவாகரத்து செஞ்சுக்கலாம்கிற முடிவிலே கூட எங்களிடையே கருத்து வேறுபாடு கிடையாது!

— வெ. ராஜாராமன்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

களிலிருந்தும் காவல் துறையை எப்படி 'insulate' செய்வது?' என்று கண்டறிந்து அறிக்கை தர வேண்டுமென்பதே தேசிய போலீஸ் கமிஷனுக்கு இடப்பட்டிருந்த முக்கியப் பணி.

அதற்காக, ஒரேடியாக அரசாங்கத்திடமிருந்து போலீஸ்துறையைப் பிரித்து விட முடியாது. காவல் துறை என்பது, ஒவ்வொரு மாநிலத்திலும் 50, 60 ஆயிரம் பேரைக் கொண்ட ஒரு பிரும்மாண்டமான அமைப்பு. அதைப் போய் முழுக்க முழுக்க சுதந்திரமாக்கி விடுவதெல்லாம் நடைமுறை சாத்தியமில்லை. குறுக்கீடுகளில்லாமல் அதே சமயம் அரசின் கீழ்தான் இயங்க வேண்டும். இதற்கு என்ன செய்வது?

எங்கள் குழு இந்தக் கேள்வியைச் சுமந்து கொண்டு மாநிலம் மாநிலமாகச் சுற்றி, முதல்வர்களையும் கவர்னர்களையும், உயர் அதிகாரிகளையும் அறிஞர்களையும் சந்தித்துப் பேசியது.

இப்படியான சுற்றுப் பயணத்தின் போது, ஒரு வடமாநில முதல்வரை நான் சந்திக்கச் சென்றிருந்தேன். 'அரசியல் குறுக்கீடுகளிலிருந்து காவல்துறையைப் பாதுகாப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?' என்று கேட்டபோது, அவர் ஒரு போடு போட்டார்.

"அது பத்தி உங்களுக்கு ஏன் சார் கவலை? அரசியல் குறுக்கீடு அதிகம்; பிடிக்கலைன்னு மக்கள் நினைத்தால் அடுத்த எலக்ஷன்ல அந்தக் கட்சியைத் தூக்கிட்டுப் போறாங்க! இதற்காக தனி ஏற்பாடுகளோ, சட்டங்களோ தேவையில்லை. மக்களிடம் இதை விட்டு விடுங்கள்."

இதைச் சிரித்துக் கொண்டே சொன்னார். தேர்தல் வழியாக எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், போலீஸ் மீது இப்பொழுது தனக்கு இருக்கும் அதிகாரத்தைக் கைவிடாது என்பதை அவர் உணர்ந்திருந்தார். சுதந்திரம் பெற்றவுடன் அப்பொழுது இருந்த தேசியத் தலைவர்கள் முயன்றிருந்தால் இந்த அடிப்படை சிக்கலைத் தீர்த்திருக்கலாம். ஆனால் சுதந்திரம் பெற்று, 48 ஆண்டுகள் மாநிலங்களில் ஆட்சி புரிந்த பல அரசியல் கட்சிகள் போலீஸ் துறையை எவ்வாறெல்லாம் துஷ்பிரயோகம் செய்ய முடியும் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டார்கள். இந்த மனப்பான்மையைத்தான் அந்த முதல்வரின் பதில் வெளிப்படுத்தியது.

அதற்கு மேல் அவரிடம் என்ன பேசுவது? எழுந்து வந்து விட்டேன்.

உலகின் தலைசிறந்த போலீஸ் துறை என்று ஜப்பான் போலீஸைச் சொல்லலாம். அரசியல் குறுக்கீடு இல்லாமல் மிகவும் 'சிஸ்டமாடிக்'காக இயங்கும் அந்நாட்டுப் போலீஸ் துறைச் சட்டங்களில் குறிப்பிட்டுள்ள வழி முறைகளை ஆராய்ந்து, அவைகளில் சிலவற்றைப் பின் பற்றி, நம் நாட்டுச் சூழ்நிலைக்கு உகந்தவாறு எங்கள் கமிஷன் ஓர் அறிக்கை தயாரித்தது.

அதன்படி, அரசியல் குறுக்கீடுகள் இல்லாது காவல் துறை செயல்பட ஒரே வழிதான்!

முதலமைச்சர் தலைமையில் ஒரு சிறிய குழு அமைக்கப்பட வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர், ரிடையரான ஒரு உயர்நீதி மன்ற நீதிபதி, இன்னும் ஓரிருவர் மட்டுமே இருக்கக் கூடிய அக்குழுவுக்கு சட்டப்படி காவல் துறையை நிர்வகிக்கும் அதிகாரம் தரப்பட வேண்டும். ஆளும் கட்சி எம்.எல்.ஏ. ஒருவர் குழுவுக்குள் வந்தால் தவறாமல் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ ஒருவரும் உண்டு.

இப்படி இருந்தால் அரசியல் குறுக்கீடு, ஆளும்கட்சியின் மேலாண்மை என்பவையெல்லாம் சாத்தியமற்றுப் போய்விடும்.

குழுவில் இருக்கக்கூடிய அனைவருக்கும் சம அந்தஸ்து அளித்து, சட்டப்படி, அவர்களுக்கு, காவல் துறையின் செயல்களுக்கு அவ்வப்போது விளக்கங்கள் கேட்க, சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரிசீலிக்க மற்றும் நிர்வாக மேற்பார்வை பார்க்க அதிகாரமும் அளித்து விட்டால் பிரச்னையே இருக்காது என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னது அறிக்கை.

ஆனால் அத்திட்டம் அமுலுக்கு வருமுன்... ஜனதா ஆட்சி போய், காங்கிரஸ் ஆட்சி திரும்பி வந்துவிட, இந்திராகாந்தி NPC அறிக்கைகளை முதல் காரியமாகக் கிடப்பில் போட்டார் - அரசியல் காரணங்களுக்காக!

இன்றைக்கும், காவல் துறை மேல் அக்கறையுள்ள, அது உண்மையிலேயே சிறப்பாகச் செயல்பட வேண்டும். என்று விரும்பும் ஓர் அரசு வருமானால், அன்றைய எங்கள் அறிக்கை இப்போதும் உபயோகப்படும்; துணிந்து சொல்வேன்.

(அடுத்த வாரம்)

KALKI SHOPPING PAGE

காதலுக்குக் கல்யாணம்

ஜெரா

கதிர்வேல் பஸ்ஸை விட்டு இறங்கும் போது சூரியன் உச்சியில் காய்ந்து கொண்டிருந்தான்.

ஹாஸ்டல் ஸ்டாப்பிங் மோரித் திட்டின் மீது சாய்ந்து நின்றபடி பீடியை உறிஞ்சிக் கொண்டிருந்த பலராமன், இவனைப் பார்த்ததும் பீடியைச் சுண்டி விட்டுப் பரபரப்பாய் ஓடி வந்தான்.

கைநீட்டி ப்ரீப்கேஸை வாங்கிக் கொண்டவன், "தந்தி நேத்தே கிடைச்சிருக்குமே" என்று கரகரத்தான்.

சற்று ஒதுங்கி அரசமர நிழலில் நின்று கொண்ட கதிர்வேல் ஆயாசமாய் பெருமூச்செறிந்தான்.

"பணம் பொரட்டிட்டு வரணுமில்லே! அதான் லேட்டாயிருச்சு."

இயல்பாய் பேசிக் கொண்டிருந்த கதிர்வேல் சந்தேகமாய் பலராமனைப் பார்த்தான். நெற்றிப் பரப்பில் கோடுகள் பிறக்க,

"சுகன்யாகிட்டே சொல்லிட்டே இல்லே...?!" என்றான்.

பலராமன் பேசவில்லை.

தலைதாழ்த்திக் கொண்டான்.

இருள் அப்பிய முகத்தில் வெளிச்சப் பொட்டாய் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

இவனிடம் எப்படிச் சொல்லப் போகிறோம் என்ற பயமும், நடுக்கமும் பரவலாய் அப்பிக் கொள்ள, "நடந்துக்கிட்டே பேசலாம் கதிரு" என்று முணுமுணுத்தான்.

இருவரும் பங்களா கேட்டின் பக்கம் சமீபித்த போது, காலனிக்குள்ளிருந்து வேகமாய் வந்த டாக்ஸி ஒன்று வேகத்தடைக்காகச் சற்றே தயங்க, உள்ளுக்குள் பாதுகாப்பாய் உட்கார்ந்திருந்த அவளை கதிர்வேல் பார்த்து விட்டான்.


சர்வ அலங்காரத்துடன் மின்னலாய் ஜொலித்துக் கொண்டிருந்த அவள் சட்டென்று முகம் கவிழ்த்துக் கொண்டாள். இருவர் கண்களும் சந்தித்துக் கொண்ட அந்தக் கண நேரத்தில், அவளிடம் தென்பட்ட பதற்றத்தைப் படித்து விட்ட கதிர்வேல் கோபமாய் பலராமன் பக்கம் திரும்பினான்.

ஜில்லென்று அடிவயிற்றில் பயம் சிதற, கண்ணீரோடு நிமிர்ந்த பலராமன் "கதிரு... வந்து..." என்று வார்த்தை பிறழ தடுமாறினான்.

ஆதரவாய் பலராமனின் கையைப் பற்றிக் கொண்ட கதிர்வேல் உச்சிப் பிள்ளையார் கோவிலை ஏறிட்டான்.

மௌனமாய் ஆரம்பப் படிகளில் ஏறி, பாதியில் பரவி இருந்த மர நிழலில் உட்கார்ந்தான்.

எதிரே நின்றிருந்த



பலராமனை தீர்க்கமாய் பார்த்தான்.

"பலராமா... என்னடா நடந்தது..."

தண்ணீருக்குள் அமுக்கப்பட்டவன் போல சிறிது நேரம் திணறிய பலராமன், "சுகன்யா முடியாதுன்னு சொல்லிட்டா கதிரு! அவ உன்னை ஏமாத்திட்டா" என்று பல்லைக் கடித்துக் கொண்டு இரைந்தான். சட்டென்று சமன நிலைக்கு வந்து, "நாளைக்கு அவ கல்யாணம்! சேலத்துல... அதான் கார்ல போறா..." என்று எங்கோ பார்த்தபடி முணு முணுத்தான்.

கவண்கல் தாக்கிய காக்கை போல் கதிர்வேல் தொய்ந்து போனான். முகம் ரத்தமிழந்து தொங்கிப் போனது. ஆழமான வலி ஆவேசமாய் இதயத்தைப் பிசைய, அதிர்ச்சியின் தாக்கத்தில் அசையா சிலையாகிப் போனான்! உப்பிய கன்னங்களில் கரகரவென்று கண்ணீர் இறங்கி முறுக்கிய மீசை நுனிபட்டு தடம் மாறிப் போனது.

நிஜமாகவே இனி நீ எனக்கில்லையா சுகன்யா! தென்றலாய் என்னை திசை மாற்றி விட்டு, யாரையோ தேடிப் போய் விட்டாயா?



கதிர்வேல் இரண்டு மாதங்களுக்கு முன்பு கடைசியாக அவள் எழுதி இருந்த கடிதத்தை ஞாபகப்படுத்திக் கொண்டான். வழக்கம் போல புலம்பி இருந்தாள். அவள் பெற்றோரைச் சந்தித்து திருமணம் பேசச் சொல்லி வற்புறுத்தி இருந்தாள்! இவனும் வழக்கம் போலவே நல்ல நிலைமை வரும் வரை காத்திருக்கும்படி கெஞ்சி இருந்தான்!

"இனி காத்திருப்பதிலும் அர்த்தமில்லை; நம் திருமணமும் என் கையில் இல்லை" என்று அவள் எழுதி இருந்தது ஒரு சம்பிரதாயமான மிரட்டல் என்றுதான் நினைத்திருந்தான். ஆனால் இப்போது....

நீண்ட நாட்களாய் அவளிடமிருந்து கடிதமே வரவில்லை. பிறகுதான் கதிர்வேல் ஒரு முடிவுக்கு வந்தான். வீட்டை விட்டு அவளை வரச் சொல்லி, எங்காவது கோவிலில் வைத்துத் தாலி கட்டி விடுவது என்ற முடிவோடு, விவரத்தை பலராமனுக்கு எழுதி அவள் சம்மதத்தைக் கேட்கச் சொல்லி இருந்தான்!

அப்போது கூட நேரடியாக வந்து, அவள் பெற்றோரிடம் 'பெண்' கேட்கும் தைரியம் வராமல், குட்டியாய் ஒரு கோழைத்தனம் அவன் மனதுக்குள் குறுகுறுத்தது.

உடனே புறப்பட்டு வரச் சொல்லி பலராமனிடமிருந்து தந்தி வந்ததும் சுகன்யா அவன் முடிவுக்குச் சம்மதித்து விட்டாள்

என்ற நினைப்போடுதான், பணம் புரட்டிக் கொண்டு ஒரு திடீர் திருமணத்துக்குத் தயாராய் வந்திருந்தான் கதிர்வேல். ஆனால்...

சுகன்யாவின் அன்பும், காதலும் இவனுக்கு எப்படிக் கிடைத்தது என்பது சாதாரண விஷயம்!

ஆனால் அவளுடைய பிரவேசத்துக்குப் பிறகுதான், பொறுப்பில்லாமல் ஊரைச் சுற்றிக் கொண்டு உடம்பை வளர்த்துக் கொண்டிருந்த கதிர்வேல், அடிதடிக்கு அஞ்சாமல் சண்டியனாய்ச் சரிந்து கொண்டிருந்த கதிர்வேல், உழைப்பை ஓரம் கட்டும் உருப்படாத உதிரியாய் ஒதுக்கப்பட்ட கதிர்வேல், ஒட்டுமொத்தமாக உருமாறி, வேலை தேடி வெளியூர் போய் இன்று நாலு பேர் மதிக்க நடமாடுகிறான் என்பது அசாதாரணமான விஷயம்!

பெண்களின் அன்பு அசாதாரணங்களை மட்டுமல்ல, சில சமயங்களில் அதிசயங் களையும் கூட சாதிப்பதுண்டு! ஒருவேளை இந்தத் திருமணமும் அதில் சேர்த்தியோ!

கண்களை அழுத்தமாகத் துடைத்துக் கொண்டான் கதிர்வேல். "கவலைப்படாதே கதிரு! நீ அவளை எந்த அளவுக்கு விரும்பறேன்னு எனக்குத் தெரியும்! 'இனிமே ஒண்ணுமே முடியாதுன்னு' அந்தச் சிறுக்கி சொன்னப்ப, என் உடம்பு எப்படிப் பதறிப் போச்சு தெரியுமா! உனக்குக் கிடைக்காத அவ இன்னொருத்தன் கூட எப்படி வாழ முடியும்? நாளைக்கு அவளோட மாமன் பையன் மாப்பிள்ளையா, இல்லே நீ மாப்பிள்ளையான்னு பாத்துப்புடுவோம்! குஸ்தி கொட்டாயில சொல்லி நம்ம பசங்களை வரச் சொல்லி இருக்கேன். இப்படியே சேலத்துக்கு பஸ் ஏறுவோம். அவ உனக்கு எழுதின கடிதாக எங்கிட்டே கொஞ்சம் இருக்கு. இதோ..."

பலராமன் இடுப்பு வேஷ்டியில் முடிந்து வைத்திருந்த கடிதச் சுருளைப் பதற்றமாய் எடுத்துக் காட்டினான்!

"மாப்பிள்ளை மூஞ்சியில விட்டெறியலாம், அப்புறம் பாரு அவ கல்யாணத்தை."

வக்ரமாய்ச் சிரித்த பலராமனின் கையில் இருந்த கடிதச் சுருளை வாங்கிக் கொஞ்ச நேரம் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் கதிர்வேல். பிறகு தன் ப்ரீப்கேஸைத் திறந்து, அழகாய் அடுக்கி வைத்திருந்த, சுகன்யாவின் கையெழுத்துத் தெரியும் கடிதங்களைக் கொத்தாக, குழந்தை போல் அள்ளினான்.

"உங்கிட்டே இருக்கற கடிதாககளையும்

‘சுருக் - நறுக்’ என்று ஒரு சொல்லோவியம் - 14

இளமைப் பருவம் என்பது...

இளமை என்பது உடல் சம்பந்தப் பட்டது மட்டுமல்ல; மனம் சம்பந்தப் பட்டதும் கூட. வாழ்க்கையின் வசந்தமே இளமைப் பருவம்தானே என்பாரும் ஏராளம்!

உங்கள் நோக்கில் இளமைப் பருவம் என்பது என்னவென்று தோன்றுகிறது? உங்கள் எண்ணத்தை கீழுள்ள கூப்பனில் நச்சென்று ஒரு சொல்லோவியமாக எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். பிரசுரமாகும் ஒவ்வொரு சொல்லோவியத்துக்கும் 50 ரூபாய் பரிசு. இன்னும் 12 வாரங்கள் தொடரப்போகும் இப்போட்டியில் அதிக முறை பரிசு பெறும் ஒருவருக்கு மெகா பரிசாக ஒரு ஜோடி டைடன் கைக் கடிகாரங்கள்!

முடிவு தேதி : 22.1.96.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

– ஆர்.

இளமைப் பருவம் என்பது : ....

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

எடு; அவ வண்டவாளத்தைத் தண்டவாள மேத்திப்புடுவோம்!”

கதிர்வேல் பதில் பேசவில்லை. மௌனமாய் எல்லாக் கடிதங்களையும் மடக்கி, நீட்டி பலராமனின் சட்டைப் பாக்கெட்டில் துருத்திக் கொண்டிருந்த தீப்பெட்டியை எடுத்து, குச்சி உரசி, முனையில் பற்றவைத்தான்.

பலராமன் வார்த்தை வராமல் பதறப் பதற, தீ ஆவேசமாய் கடிதங்களைக் கடித்துச் சுவைத்து, கரியாக்கித் துப்பியது. எல்லாம் சாம்பலாகும் வரை மௌனத்தில் சயனித்திருந்த கதிர்வேல், பலராமனின் தோளில் தட்டினான்!

“பலராமா! சுகன்யா மேல் தப்பே இல்லே. வசதி வரட்டும், வரட்டும்னு சாக்கு சொல்லி ஒரு பொண்ணோட வாழ்க்கைப் பிரச்னையை கவலமா எடுத்துக்கிட்ட நான்தான் முட்டாள்!

“வாழ்க்கையோட போராட பயந்து தயங்கி நின்ன என்னைத் தள்ளி வச்சிட்ட அவபோல தப்பே இல்லே. என் பலவீனத்தை ஒத்துக்காம அவ எழுதின லட்டரைக் காட்டி, அவ என் மேல வச்சிருந்த அன்பைக் கொச்சைப்படுத்திப் பழிவாங்கறது கேவலமான சின்னத்தனம்... அதை நான் நிச்சயம் செய்ய மாட்டேன். அந்த நெனப்பு கூட என் நெஞ்சிலே வரக் கூடாதுங்கறதுனாலதான் லட்டரை எல்லாம் எரிச்சேன்...

“ஏன்னா... நான் இன்னமும் அவளை நேசிக்கிறேன். நான் நேசிக்கற, நேசிச்ச உயிர் என்னிக்கும் நல்லா இருக்கணும்; சந்தோஷமா இருக்கணும்! அப்படி நினைக்கறதும் நடத்துக்கறதும்தான் உண்மையான நேசம்; காதல்!”

கதிர்வேல் கலங்கிய கண்களுடன் பாக்கட்டிலிருந்து தாலி கோத்த தங்கச் செயின் ஒன்றை எடுத்துக் கொஞ்ச நேரம் பார்த்தான்.

தாலியை மட்டும் கழற்றிக் கொண்டு, செயினை பலராமனிடம் நீட்டினான்.

“நீயும், நம்ம பசங்களும் அவ கல்யாணத்துக்குப் போயி, சந்தோஷமா கலந்துக்கிட்டு ஒத்தாசையா இருந்து கல்யாணத்தை நல்ல படியா நடத்திக் குடுங்க. இதை என் அன்பளிப்பா அவளுக்கு ‘மொய்’ எழுதிடுங்க. இது தான் நீங்க எனக்குச் செய்யற உண்மையான உதவி...”

கைகள் நடுங்க செயினை பலராமன் வாங்கிக் கொண்டான். கண்கள் பனிக்க, அவன் கைகளைப் பற்றி அழுத்திய கதிர்வேல், குனிந்து ப்ரீப்கேஸை எடுத்துக் கொண்டு மெல்ல படிகளில் இறங்கத் தொடங்கினான்!

M.I.E.T

MADRAS INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY

Regd. No.560/89 No.385, ARCOT ROAD, KODAMBAKKAM, MADRAS - 24

"Result par Excellence"

Fresh Regular/Postal Classes admission open for 1996 JAN. BATCH

Degree Level Courses (Equivalent to BE)

- **A.M.I.E. (INDIA)** Studentship SEC. A (Dip. Non-Dip). Sec. B (All Branches)
- **A.M.Ae.S.I.** (Aeronautical Engg.)
- **A.M.I.I.E.** (Industrial Engg.)
- **A.M.I.E.T.E.** (Electronics & Telecommunication)
- **A.I.I.A.E.** (Architectural Engg.)
- **C.E.I.**(London) Part 1 & II
- **A.M.I.M.E.** (Mechanical)
- **A.M.I. Chem. E.,** (Chemical)
- **A.M.I.A.E.** (Automobile)

Diploma Courses (3 years) [Govt. Recognised]

- Dip. in Electronics and Telecommunication Engineering(Dip. I.E.T.E.)
- Dip. in Mechanical Engineering (T. Engineering)
- Dip. in Refrigeration and Air Conditioning
- Dip. in Production Engineering
- Dip. in Automobile Engineering

M.I.E.T / I.T.I. NCVT Courses

- Refrigeration and Air Conditioning
- Electrician
- Fitter
- Mechanic (Motor Vehicle)
- Mechanic (Diesel)
- Data Preparation and Computer Software
- Wiremen
- Electronics
- Instrument Mechanic

M.I.E.T. Computers

- Diploma in Computer Application
- Diploma in RDBMS, ORACLE
- Diploma in UNIX & C
- Diploma in Hardware
- PGDCA
- Certificate Courses
- DTP
- LAN Engineering

For Prospectus and Application form send M.O. or D.D. for Rs. 50/- in favour of "The Principal, M.I.E.T."

Hostel Facility Available
For Girls and Boys

T.M. Gunaraja, A.M.I. E., M.E.
Director

APPU ADS



• ஸ்கோருடன் பார்வையாளர்கள்...



• "எங்க தி



• தம்பூரா வெங்கட் ராமன் : தளர்ந்தமர்ந்த அம்பயர்!

• என். ராம் : வி.ஐ.பி. பார்வையாளர்

பாடுவோர் ஆடினால்....

('எப்படிப் பாடினரோ' மெட்டில் பாடலாம்)

பல்லவி

ஆடிட வந்தனரே - மேடையில்
பாடிடப் பிறந்தோர்
ஆசை கொண்டு - அன்று (ஆடிட...

அனுபல்லவி

பொங்கல் திருநாளில் புகலரும் சேப்பாக்கில்
'ஜிங்ஜிங்' ஒலிக்காத
பெருங்குறை தீர்க்கவே (ஆடிட...

சரணம்

கடுக்கன் சசாங்கும் குருந்தொந்தி சஞ்சய்யும்
துடுக்கு கார்த்திக்கும் படுஸ்டைல் குமரேஷனும்
சீசன் டென்ஷன் பறக்க - சீண்டும்
விமர்சனங்கள் மறக்க
சினிமாப்புகழ் உன்னி
சித்ரவீணர் தலைமையில் (ஆடிட...

டென்னிஸ் பந்தென்றாலும் ஓவர்
இருபத்தைந்தேயானாலும்


உண்ணிகிருஷ்ணன் XI Vs ரவிகிரண் XI கிரிக்கெட் போட்டி ஒன்று சென்னை சி.எல்.ஆர்.ஐ. வளாக மைதானத்தில் சமீபத்தில் நடந்தது. ஜெயித்தது உண்ணிகிருஷ்ணன் XI!



• "ரொம்ப டயர்டா...?" மனைவியுடன் உன்னிகிருஷ்ணன்



...கு நெட்ஸ்ல ஆடுறோம்..."





• "சே! என்ன வெயில்..." : கார்த்திக்

அம்பயர் தளர்ந்தமர்ந்தாலும் ஸ்கோர்
எழுபத்திநான்கேயானாலும்
டிபன் காபி கடை விரிக்க, டீ.வி. காமெராக்கள் படம்பிடிக்க
டிக்கெட் வசூலின்றி
டக்கராய் ஓர் ஆட்டம் (ஆடிட...)

சத்தியமாய் நம்பர் ஒன் சுதா ரகுநாதன்
நித்யஸ்ரீ ஜெயஸ்ரீபோல் சுஸ்வர சகோதரிகள்
பத்திரமாய் வீட்டில் சாதகம் பண்ணிட
பையன்கள் மட்டும்
மட்டையைத் தூக்கி (ஆடிட...)

படங்கள் : யோகா



மாலை மயங்குகின்ற நேரம்

14

ரமணி சந்திரன்

கிருஷ்ணசந்திரனின் பேச்சைக் கேட்டதும், உதயரேகாவின் கைப்பிடி அளவான நெஞ்சுக்குள் என்னென்னவோ உணர்வுகள் முட்டி மோதிய போதும், அவற்றுள் தலைதூக்கி நின்றது, கணவன் அவளை 'உதி' என்று குறிப்பிட்டதால் ஏற்பட்ட குதூகலமே.

மனைவியை அவன் அன்னியமாகவே கருதுகிறான் என்பதை அவளுக்குத் தெளிவுபடுத்துவதற்காக வெகு பிடிவாதமாக, அவளை 'உதயரேகா' என்று முழுப் பெயர் சொல்லியே அழைப்பவன், அந்தரங்கத்தில் அவளை 'உதி'யாகத்தான் காண்கிறான் என்பது தெளிவாகி விட்டதல்லவா?

ஆனால், மேலே அவனது பேச்சுதான் அவளுக்குப் புரியாது போயிற்று. 'கொடுமை செய்தேனே, இன்னமும் செய்யப் போகிறேனே' என்று வருந்திப் புலம்புகிறவன், அந்தக் கொடுமையைச் செய்துதான் தீர வேண்டும் என்று என்ன கட்டாயம்?

தொடர்ந்து மணிவாசகத்தின் குரல் கேட்கவும், இதன் விடை அவன் பேச்சில் கிடைக்கக்கூடுமோ என்று மேலே அவர்கள் பேச்சை ஊன்றிக் கவனித்தாள்.

மணிவாசகத்தின் நோக்கம் நண்பனைத் தேற்றுவதாக இருந்தது. "ஷ், கேசி, நீயாக உதயரேகா சிஸ்டருக்கு எந்த ஒரு கொடுமையும் செய்யவில்லை. சொல்லு, உதயரேகா சிஸ்டரை நீயா விரட்டிப் பிடித்து மணந்து கொண்டாய்? இல்லையே. சொல்லப் போனால் அதைச் செய்தது அவர்கள் அல்லவா? இதில் நீ குற்ற உணர்வு கொள்வதும், வருந்துவதும் கொஞ்சம் கூட நியாயம் அல்ல. வா, சற்று நேரம் உலாவி விட்டுத் திரும்பலாம். இந்த வேதனையிலும் குழப்பத்திலுமாகத் தலைவலி ஏதும் வந்து தொலைக்கப் போகிறது!" என்று சினேகிதனைக் கைப்பிடியாகக் கூடவே அழைத்துச் சென்றான்.

கிருஷ்ணசந்திரனாக மனம் உறுத்தி, இளகி வந்தால் கூட, இந்தப் பாவி மணிவாசகம் விடமாட்டான் போல இருக்கிறதே!

வேண்டியவர்கள் வருந்தாமல் பார்த்துக் கொள்வது அவசியம்தான். ஆனால், தப்பு செய்தவர்கள், அந்தப் பிழையை எண்ணி நொந்து மனம் உருகுவதுதானே நல்லது? அப்போதுதானே தொடர்ந்து அந்தப் பிசகைச் செய்யாதிருப்பார்கள்?

யோசித்தபடியே அவன் திரும்பி வரவும், "என்ன, அடுத்த சித்திரத்துக்குக் கரு யோசிக்கத் தொடங்கி விட்டாயா?" என்று புன்னகையோடு யசோதா, மகளை எதிர்கொண்டாள். "இந்தப் படம் பற்றிய ஆலோசனையில் இருந்ததாக அன்றே சொல்வதற்கென்ன, உதி? உன் முகம் சரியாக இல்லையே என்று பல நாள் மனம் உறுத்திக் கொண்டே இருந்தது" என்றாள் அங்கலாய்ப்பாக.

"உங்களுக்கு ஓர் ஆனந்தமான அதிர்ச்சி கொடுக்க எண்ணினேன், சித்தி." சமாதானம் கூறி முறுவலித்தாள் பெண்.

படத்தின் பக்கம் பார்வை சென்று மீள, "அதிர்ச்சி ஆனந்தமாகத்தான் இருக்கிறது. இப்போது உன் அப்பா இன்னோர் ஆனந்த அதிர்ச்சி தரப் போகிறார். வா, வந்து கேள்" என்று மகளைக் கையோடு அழைத்துச் சென்றாள்.

சலுகையோடு சிற்றன்னையின் தோளில் சாய்ந்தபடியே வந்த மகளைப் பார்த்துப் பெருமையான புன்னகையோடு, "என்ன, அம்மாவும் மகளும் கொஞ்சல் அதிகமாய் இருக்கிறது" என்றார் கேலியாக.

"அதுதான் எப்போதும் இருக்கிறதே. நீங்கள் நம் சிங்கப்பூர்ப் பயணம் பற்றி உதிக்குச் சொல்லுங்கள்" என்றாள் யசோதா.

" 'நம்'?! சித்தியும் கூட வருகிறார்களா, அப்பா? வெரிகுட்!" என்று குதித்தாள் உதயரேகா. "ஆனால் சிங்கப்பூரில் என்ன அப்பா? ஏதேனும் வேலையா? அல்லது சும்மா சுற்றிப் பார்த்து வருவதற்காக அழைத்துப் போகிறீர்களா?" என்று ஆவலாகக் கேட்டாள்.



"யார்? உன் அப்பாவா?" என்று யசோதா முடிந்த அளவு புருவங்களை உயர்த்தவும் உலகநாதன் சிரித்தார்.

"உத்தியோகபூர்வமான கூட்டம்தான். அங்கே சிங்கப்பூர் அதிகாரிகளோடு ஒரு பேச்சு நடத்துவது என்பதுதான் வெளியே சொல்வது. ஆனால், சிங்கப்பூர் ஒரு ஷாப்பிங் பாரடைசாமே. மந்திரி உட்பட,. இலாகாவில பலருக்கு அரசாங்கச் செலவில் அங்கே போய் வர ஆசை. சாமான் பார்த்து வாங்குவதற்காக மனைவியும் உடன் அழைத்து வர அனுமதி..."

"நாங்கள் கஷ்டப்பட்டுக் கட்டுகிற வரிப் பணம் அப்பா!"

"உன் வீட்டார் மட்டும்தானா வரி கட்டுகிறார்கள். என் சம்பளத்தில் எவ்வளவு வரிக்குப் பிடிக்கிறார்கள், தெரியுமா? ச்சு. என்ன செய்வது, போ!" என்று அலுத்துக் கொண்டார் உலகநாதன்.

"ஏதோ, 'நெல்லுக்கிறைத்த நீர், வாய்க்கால் வழிந்தோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்பது போல உன் சித்திக்கு வெளிநாடு சுற்றி வர ஒரு வாய்ப்பு!" என்றார் தொடர்ந்து.

"ஆனால் ஒன்று அப்பா. உங்கள் கூட்டத்தில் நெல் மணியாய் மதிக்கப்பட வேண்டிய ஆள் சித்திதான். சித்தி மாதிரி ஒரு நெல் பயிர், இந்த மாதிரி டூர் எல்லாம் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் உங்கள் 'புல்' அதிகாரிகளுக்கு இப்படி ஓர் ஐடியா தோன்றியிருக்கிறதாக்கும்!" என்று அழுத்தம் திருத்தமாக உரைத்தாள் உதயரேகா.

பெருமிதமாய் முறுவலித்த போதும், "போதும் போதும். உன் சித்தி புகழைக் கொஞ்சம் மெல்லத்தான் பாடு. வேண்டாத காதுகளில் விழுந்து வைத்தால் என் தலைக்கு ஆபத்தாகி விடும்" என்று சிரிப்புக் கிடையே எச்சரித்தார் உலகநாதன்.

"பானுவும் சூர்யாவும் ஆள் உயரத்துக்கு 'லிஸ்ட்' போட்டு வைத்திருக்கிறார்கள்... உனக்



— அடுத்த இதழில் ஆரம்பம்

கும் எது வேண்டுமானாலும் எழுதி வை, உதி. சிங்கப்பூரிலிருந்து தகவல் வந்து விட்டால், என்றைக்கு வேண்டுமானாலும் புறப்பட வேண்டியிருக்குமாம்'' என்றாள் யசோதா.

கிளம்பும் போது, "இந்தப் படத்தைப் பார்க்கும் போது, ஏனோ, மனதைப் பிசைகிறது, உதிம்மா. இதற்கு எதிர்மறையாக, மகிழ்ச்சியை சித்திரிக்கும்விதமாக ஒன்று, என் திருப்திக்காக வரையேன்'' என்றார் காந்திமதி.

கிருஷ்ணசந்திரனின் 'உதி' நினைவு வர, "கட்டாயம், அத்தை!'' என்று உறுதியளித்தாள் மருமகள்.

வீடு சென்றதும், கிருஷ்ணசந்திரன் மீண்டும் நத்தையாய், ஓட்டுக்குள் சுருக்கிக் கொண்டு விட, உதயரேகா மீண்டும் மனம் குழம்பலானாள்.

ஆனால், இது கொஞ்சம் நம்பிக்கை கலந்த குழப்பம்.

'உதி' என்ற ஒரே ஒரு குறிப்பிடலால் மட்டும் அவளிடம் அவனுக்கு நேசம் இருப்பதாகக் கூறி விட முடியாதுதான். ஆனால் தொடர்ந்து அவளுக்காக அவன் வேதனைப் பட்டதை ஒன்றுமில்லை என்று ஒதுக்கி விடவும் முடியாது.

படுக்கையில் கிடந்து யோசித்துக் கொண்டிருந்தவள், திடுமென அதிர்ந்து 'நறுக்'கென்று எழுந்தாள்.

கிருஷ்ணசந்திரன் ஒருகால்... ஆண்மை அற்றவனோ? தாயின் கட்டாயத்துக்காக மணந்து விட்டு இப்போது தவிக்கிறானோ?

ஆனால் விரைவிலேயே இந்தச் சந்தேகம் விலகி விட்டது. அவனுக்கு இருந்த கெட்ட பெயர் ஒன்றோடு, அன்று புத்தக அறையில் அவனது சிலிர்ப்பும் நினைவு வர, அப்படி இருக்கவே முடியாது என்று நிச்சயப்பட்டு நிம்மதியுற்றாள்.

சற்று ஆறுதல் அடைந்தவளாக மீண்டும் படுத்தாள்.

எப்போது அவனுக்கு அவளிடம் கரிசனம் இருக்கிறது என்பது உறுதியாகி விட்டதோ, இனி இதன் காரணத்தைக் கண்டுபிடித்து, சிக்கலைத் தீர்த்து விட, விடாமல் முயற்சி செய்ய வேண்டும் என்று எண்ணியபடியே உதயரேகா உறங்கிப் போனாள்.

வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளா விடினும், எப்போதும் அவளது வேலைகளில் – படம் வரைவது, தோட்டத்தைப் பராமரிப்பது, பாடுவது என்று அவளது சொந்தப் பொழுதுபோக்குகளிலேயே ஈடுபட்டிருப்பது போலத் தோன்றினாலும், உதயரேகா தன் கூரிய கவனத்தைக் கணவன் மேலேயே வைத்திருந்தாள்.

இரண்டு தினங்கள் வெகு சாதாரணமாய்க் கழிந்து விட, மூன்றாவது நாள், டீவி.யின் முன்னே அமர்ந்திருந்த போது அவளுக்கு முதல் துப்பு கிடைத்தது.

பொதுவாக, இன்றைய அரசியலை வெகுவாகக் கிண்டல் செய்யும் ஒரு நிகழ்ச்சியை கிருஷ்ணசந்திரன் மிகவும் ரசித்துப் பார்ப்பான். வாரம் ஒருநாள் இரவில் ஏழரை மணிக்குத் தொடங்கும் இந்த நிகழ்ச்சியைப் பாராமல் கிருஷ்ணசந்திரன், தவறுவதே இல்லை.

உதயரேகாவுக்கும் அந்த நிகழ்ச்சி இஷ்டமே. எனவே அவளும் டீவி. முன்னிருந்து அந்த நேரத்தில் அகலுவதில்லை.

அன்றும் அந்த நிகழ்ச்சியைக் கணவன், மனைவி இருவரும் அவ்வப்போது சிரித்தபடி ரசித்துக் கொண்டிருந்தனர். இருவர் ரசனையும் ஒரே மாதிரி இருக்கிறது, ஆனால்... என்று உள்ளூர ஒரு வருத்தத்துடன் உதயரேகா எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி, நிகழ்ச்சி அமைப்பாளர், தமக்கே உரிய கிண்டலான பாணியில் விமர்சிக்க, கணவன் மனைவி இருவருமே அடக்க மாட்டாமல் நகைத்துக் கொண்டு இருந்தனர் – சேர்ந்து கலந்து அல்ல. அவரவர் தத்தம் போக்கில்தான்.

என்றாலும் இருவரின் சிரிப்பொலியும் கேட்டது.

பாதியில், கிருஷ்ணசந்திரனின் குரல் தேய்ந்து நின்று விட, உதயரேகாவின் நகைப்பு மட்டுமே ஒலிக்கக் கேட்டு சிறு வியப்புடன் திரும்பிக் கணவனை நோக்கியவளுக்கு, அது



''அவர் ஒரு ஹவாலா மோசடிப் பேர்வழிதான்னு தெரிஞ்சு போச்சு.''

''எப்படி...?''

''ஜாமீன்ல விட ஒரு லட்சம் கட்டணும்னு சொன்னதும், 'அமெரிக்க டாலரா? பவுண்ட் ஸ்டெர்லிங்கா?'ன்னு கேட்டிருக்காரே!''

– சீர்காழி வி. ரேவதி

பெருவியப்பாயிற்று!

ஏனெனில், நடையில் சிறு தடுமாற்றத்துடன் கிருஷ்ணசந்திரன், அவனது அறையை நோக்கி, இயன்ற அளவு விரைந்து சென்று கொண்டிருந்தான்!

'என்ன'வென்று ஓடிப் போய்க் கேட்கும் அளவு சுமுகம் இப்போது இல்லை என்றாலும், எழுந்தபடி, ''ஏதாவது வேண்டுமா?'' என்று கேட்டாள் அவள்.

''இல்லை'' என்ற கனத்த குரலின் பதிலோடு அவன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

தாளிட்ட கதவை வெறித்தவளுக்கு டி.வி. மறந்து போயிற்று.

இதே போல இந்தத் தடுமாறும் நடையோடு கதவைச் சாத்தி உள்ளே பதுங்குவதை அவன் முன்பும் செய்திருக்கிறான்.

ஒரு மணி நேரம் ஒன்றரை மணி நேரம் என்று மூடிய அறைக்குள்ளேயே இருப்பதும், லேசாக முகம் மாறி வெளிவருவதும் அவ்வப்போது நடப்பதுதான்.

மனைவியோடு பேச்சைத் தவிர்ப்பதற்காக என்று எண்ணினாளே; அது தவறாக - இதன் காரணம் வேறாக இருக்கக்கூடுமோ?

கணவனின் விசித்திரமான நடத்தைக்கான விடையை அணுகி விட்டது போலத் தோன்றவும் உதயரேகாவின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

அன்றும், சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பூட்டிய அறைக்குள்ளேயே கிடந்தவன் வெளிவரும் போது அவன் அறியாமல் கவனித்தாள். கண்சிவந்து, முகம் வெளுத்திருந்தான். வழக்கம் போலவே.

தொடர்ந்து கிருஷ்ணசந்திரனைக் கண்காணித்த உதயரேகா கண்டுபிடித்த விடை அவளைப் பதறச் செய்து விட்டது.

(தொடரும்)

மனைவி / கணவன் என்பவர்...

'சுருக்-நறுக்' போட்டி — 10 ; முடிவுகள்....

- கடிகாரத்தில் உள்ள முட்கள் மாதிரி, ஒருவரால் மற்றவர் பயன்பட வேண்டும்.
  - த. மதிபாரதி, தேவகோட்டை.

- இல்வாழ்க்கையின் லப்/டப்.
  - வி. அரவிந்த், சென்னை - 18.

- 1+1=1 என்கிற அபூர்வ கணித நிரூபணம்.
  - எல். அபர்ணா, அம்பர்நாத் (மஹாராஷ்டிரா).

- பூவது கொண்டு மனைவியின் புயலது தடுக்கும் தந்திரவாதி.
  - சி. நாச்சிமுத்து, ஈரோடு - 9.

- ஏற்றத்தாழ்வுகளில் கைகொடுக்கும் ஸ்டெபிலைஸர்.
  - என்.எம். கிருஷ்ணா, சிதம்பரம் - 1.

- டபரா-தம்ளர் போல, கோப-தாபங் கள் மாற்றப்பட்டு, ஆற்றப்பட்டு, பதமாக வாழ்க்கை காப்பி சுவைக்கும்.
  - எஸ். சரவணன், தஞ்சாவூர் - 1.

- இரு வேறு துருவங்களின் இணைப்பு. ஆனாலும், ஆத்திரம் வரும் போது கல்லாகவும், ஆசை வரும் போது கற்கண்டாகவும் இருப்பவர்கள்.
  - வி. சுபத்ரா, திருச்சி - 14.

- கணவனின் பாதி ஆக விரும்பி ஏமாற, காலம் காலமாய் இருந்து வரும் தீராத இட ஒதுக்கீட்டுப் பிரச்னையில் சிக்கியவள்.
  - பி. லட்சுமிஸ்ரீ, கரூர் - 1.

- அகவிலைப்படியும் விலைவாசி உயர்வும் போல ஒருவரோடு ஒருவர் ஏற்றத் தாழ்வு மனப்பான்மையின்றி இருத்தல் வேண்டும்.
  - டி. கலைவாணி, தான்தோன்றிமலை.

(பிரசுரமாகியுள்ள ஒவ்வொன்றும் ரூ. 50 பரிசு பெறுகிறது)

தலை போகிற பிரச்னைகளால் தலைவர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள். 'இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா' என்று கேட்கிறார் எஸ்.வி. சேகர். சும்மா கேட்பதோடு மட்டுமின்றி, காவிரி பிரச்னையிலிருந்து டெலிகாம் விவகாரம் வரைக்கும் சாமி வந்தது போல் உடுக்கை அடித்து, உடனே உடனே தீர்வு சொல்கிறார். ஒரு மாறுதலுக்கு சேகர் சொல்கிற யோசனைகளை அப்ளை பண்ணிப் பார்த்தால், நாடு என்ன ஆகும் என்று யோசித்துப் பாருங்கள். இப்போது இருப்பதை விட ஒன்றும் மோசமாகி விடாது என்று தோன்றினால் ஒருவரி அவருக்கு எழுதிப் போடுங்கள். வரும் எலக்ஷனில் மனிதர் மைலாப்பூர் தொகுதியில் நின்றாலும் நிற்கக் கூடும்!



"இந்தக் காவிரி இருக்குதுங்களே, அது பொறந்த காலத்துலருந்தே பிரச்னைதான். அன்னிக்கு அகஸ்தியர் புடிச்சி வெச்சிக்கினு உடமாட்டேன்னு அடம் புடிச்சாரு. இன்னிக்கு தேவகௌடா புடிச்சி வெச்சிக்கினு பேஜார் பண்றாரு.

"இந்த சமாசாரம் தீரணும்னா, அதுக்கு ரெண்டு வழி இருக்குதுங்க. ஒண்ணு - தஞ்சாவூர்க்காரங்க ஒட்டுமொத்தமா, ஆளுக்கு ஒரு பக்கெட்டு எடுத்துட்டு கர்நாடகாவுக்குப் பாத யாத்திரையா போயி, தண்ணி மொண்டாந்துடலாம். உடமாட்டேன்னு தான் சொல்றாங்களே தவிர, வந்து புடிச்சிக்கக் கூடாதுன்னு சொல்லலை, இல்லையா? அப்பால பேச்சு பால் மாறக் கூடாதுன்னு கண்டிசனா சொல்லீறணும் அவங்களுக்கு.

"இதுல இன்னொரு லாபம் என்னன்னா, 'இலவச பக்கெட் வழங்கும் திட்டம்'னு கவர்மெண்ட்டு புதுசா ஒரு திட்டம் ஆரம்பிக்க இதுல வழி இருக்குது. அதுல காண்ட்ராக்டு, டெண்டர்னு நிறைய பேரு பிழைக்க சான்ஸ் இருக்குது.

"இது கொஞ்சம் கஷ்டம்னு தோணிச்சின்னு வையிங்க - ரெண்டாவது ஐடியா ஓர்க் அவுட் ஆவுமா பாருங்க.

"இப்பத்தான் நாலு நாலு தெருவைப் பிரிச்சி ஒரு மாவட்டம்னு சொல்லிடறாங்களே. அதே மாதிரி தஞ்சாவூர் தவிர தண்ணி தேவைப்படற ஊருங்க ரெண்டு மூணைப் பீராஞ்சி கர்நாடகா ஸ்டேட்டோட சேத்துறலாம். அப்ப தண்ணி உடமாட்டேன்னு சொல்ல முடியாது பாருங்க. அவுங்க ஸ்டேட்டு ஆயிட்டதால கட்டாயம் வுட்ருவாங்க. அப்பால காவா வெட்டி மத்த இடங்களுக்கு நாம ராவோட ராவா இஸ்துக்கலாம். சிம்பிளாயிரும்.

"அடுத்த சமாசாரம். 'தமிழகம் அமைதிப் பூங்கா அமைதிப் பூங்கா'ன்னு சொல்றாங்க. ஆனா பாம் பாமா வெடிக்குது. 'சே, சொன்னபடி அமைதிப் பூங்காவா இருக்க மாட்டேங்குதே'ன்னு கவலைப் படறாங்கன்னு கேள்விப் பட்டேன். ரொம்ப வருத்தமா இருந்திச்சு. இந்த ஐடியா சரிப்படுமா பாருங்க.

"நியூ இயர் அன்னிக்கு காஸ்மெடிக்ஸ் கம்பெனிக்காரங்க மெரினா பீச்சுல ரெண்டவர் பட்டாசு வெடிச்சாங்களே, மொத்தமா... கேள்விப் பட்டீங்கல்ல? அதே மாதிரி கவர்மெண்ட்டே ஒரு நாள் 'பாம் மேளா' நடத்தலாம். மெரீனா பீச்சுலயோ, பனகல் பார்க்குலயோ, (என்னது செகரட்டேரியட்டுலயா? இந்தக் குசும்புதானே வேணாங்கறது!) பேப்பர்ல, டி.வில, ரேடியோவுல விளம்பரப்படுத்தி, 'மொத்தமாகவும் சில்லறையாகவும் பாம் வாங்கப்படும்'னு சொல்லி, ஸ்டேட்டுல இருக்கற பாம் வியாபாரிங்க அத்தனை பேருட்டருந்தும் அத்தினி குண்டுங்களையும் வாங்கி, அந்த ஒரு நாள் பாம் மேளாவுல மொத்தமா வெடிச்சிறலாம். போகி அன்னிக்கு செஞ்சா பொருத்தமாவும் இருக்கும்.

"அப்புறம் அப்பப்ப வெடிக்க வழி இல்லை இல்லியா? அப்ப 'தில்'லா அமைதிப் பூங்கான்னு

"ஜெய் ஜக்கம்மா! கண்டு பிடிச்சேன் வழி கண்டு பிடிச்சேன்!"

அறிவிச்சிரலாம்.

"இது சரிப்படாதுன்னா, பேசாம தமிழ்நாடுன்ற பேரையே அமைதிப்பூங்கான்னு மாத்தி ரிஜிஸ்தர் பண்ணிட்டு, தினத்தந்தில ஆபீச்சுவரி காலம் சைஸுக்கு ஒரு விளம்பரம் தந்துட வேண்டியதுதான். பேரு மாத்தற விசயத்தை நம்மாளுங்களுக்கு யாரும் சொல்லித்தர வேணாம் பாருங்க.

"அடுத்தது லஞ்ச ஊழல் பிரச்னை. அதுல பாருங்க... ஊழல் நடக்குது, ஊழல் நடக்குதுன்னு எதிர்க்கட்சிக்காரங்க கத்தறாங்கன்னா என்ன அர்த்தம்? அதைத் தடுக்கணும்னா? சேச்சே! ஐயோ, நம்மால செய்ய முடியலையேங்கற சோகம்தான் காரணம். ஊழல்ங்கறது 'தேசிய' சமாசாரங்க....

"ஒண்ணு பண்ணலாம். கணக்குல வராம பணம் வாங்கினாத்தானே கத்தறாங்க? பேசாம 'கமிசன்' சமாசாரத்தை அஃபிஷியலாக்க ஒரு சட்டத்திருத்தம் கொண்டாந்துடலாம்! ஒரு கான்ட்ராக்ட் தரணும்னா 69% கமிஷன் தந்தாகணும்னு ரூல் போட்டு, பிரின்ட் பண்ணி ஆளுக்கு ஒரு காப்பி குடுத்துரலாம். சத்தம் போடற எதிர்க்கட்சிக் காரங்களுக்கும் இத்தனை பர்ஸன்ட்டுன்னு பின்குறிப்புல சேர்த்துரலாம். எல்லா இடத்துலயும் இதான் நடக்குதுன்னு எல்லாருக்கும் தெரியும். அப்புறம் இதை சட்ட வடிவமாக்க எதுக்குத் தயங்கணும்?

"சினிமா தியேட்டர்ல கூட ரெண்டு ரெண்டு கவுண்ட்டர் வெச்சிரணும். ஒண்ணு ஒயிட்டு. ஒண்ணு பிளாக்கு. சட்டமா ஆயிட்டா, யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க.

"நரசிம்மராவ், வருஷக் கடைசியும் அதுவுமா எசகுபிசகா டெலிகாம் ஊழல் விவகாரத்துல மாட்டிக்கினு புது வருஷத்தை சந்தோசமாத் தொடங்க முடியாம போயிடுச்சேன்னு சில காங்கிரஸ்காரங்கள்ளாம் வருத்தப்படறதா கேள்விப்பட்டேன். சிரிப்பா வந்திச்சி. ஒவ்வொருத்தர் மாசத்துல ஒரு நாள், வருசத்துல ஒருநாள் மௌன விரதம் இருப்பாங்க. நம்மாளு வருசம் முழுக்க மௌன விரதம் இருக்கற பார்ட்டி. அவருக்கா தெரியாது? அடுத்த ஊழல் வர வரைக்கும் தான் மக்கள் இதைப் பத்திப் பேசுவாங்க. அப்புறம் மறந்துடுவாங்க. அதுவரைக்கும் அவர் சைலண்ட்டாவே இருந்துட்டா பிராப்ளமே வராது.

"நம்ம மக்கள் இயல்பே எந்தப் பரபரப்பையும் ஒரு வாரம் வரைக்கும் பேசறதுதான். பத்திரிகைகள்ல கூடப் பாருங்க... முதநாள் முதல் பக்கத்துல நியூஸ் வரும். அடுத்த நாள் ரெண்டாம் பக்கம். மூணாவது நாள், மூணாம் பக்கத்துல போயி, அப்படியே கடைசியா ஆறு இஞ்ச், நாலு இன்ச் மேட்டராயி, கடைசில யாராவது ஒரு ஜோக் எழுத்தாளர் அதை ஒரு ஜோக்கா எழுதிட்டாருன்னா, அத்தோட குளோஸ்! இதெல்லாம் பெரிய விஷயமாக்கும்.

"அடுத்த வெவகாரம் - தியேட்டருங்கள்ல படம் ஓடறதில்லை, நிறைய வால் ஆவுதுன்னு ப்ரொட்யூசருங்களெல்லாம் புலம்பறாங்க. பேசாம நேரடியா படங்களை டீ.வில ரிலீஸ் பண்ண வேண்டியதுதானே! தியேட்டருக்கு வரவங்களுக்கு படம் பாத்து அலர்ஜி ஆயிட்டா, வீட்டுக்குத்தானே ஓடறாங்க? டீ.வில ரிலீஸ் பண்ணிட்டா வேற வழி இல்லாம உக்காந்துடுவாங்க. அப்பவும் பார்க்க மாட்டோம்னு டீ.வியை அணைச்சிடறாங்கன்னு வையுங்க... அது நாட்டு வளர்ச்சிக்கு ரொம்ப உதவும். நிறைய மின்சாரம் சேமிக்கலாம் அப்பகுங்கறது ஒரு பக்கம் இருக்கட்டும். போரடிக்குதேங்கறதுக்காவது நிறைய பேர் ஒழுங்கா வேலை பார்க்க ஆரம்பிப்பாங்க. உலக அரங்குல நாம அப்ப பெரிய ஆளா ஆயிடலாம்!

"சினிமா பத்தி, டீ.வி. பத்தி சொல்றியே, மேடை நாடகம் நல்லாருக்க ஒரு வழி சொல்லக் கூடாதான்றீங்களா? சொல்றேன். ஞான பீடம் மாதிரி நாடக பீடம்னு ஒரு அமைப்பை மத்திய அரசு டெல்லில நிறுவி, என்னை அதுக்குத் தலைவராக்கிடணும். நான் மூட்டை முடிச்சைக் கட்டிக்கிட்டு அங்க போயிட்டன்னா, இங்க நாடகம் உருப்பட்டுடும்!"

தொகுப்பு : **ஔரங்கசீப்**

அட்டை வண்ணப்படம், படம் : **யோகா**

பொங்கல் சீஸன். மக்கள் பிதுங்கும் மாம்பலத்தில் ஒரு புடைவைக் கடையின் (பனகல் பார்க் எதிரே - குமரன்) உள்ளே - வெளியே :

உள்ளே :

புடைவையை அப்புறம் பார்க்கலாம். முதலில் முகங்களைக் கவனியுங்கள். அதிகபட்சம் விரிந்த கண்கள். அதில் சமவிகிதக் கலப்பில் ஆர்வமும் பரபரப்பும். நொடிக் கொருதரம் கர்ச்சிப்பால் மூக்கைத் துடைத்துக் கொள்ளும் அந்த மாம்பழ நிற கூடிதாரிடம் விசேஷம் ஏது மில்லை. அருகில் கவனியுங்கள். வலப்புறம். நாற் பத்தைந்து வயது இருக்குமா அவருக்கு? தலைப்



புப் பார்ப்பது போல் லாகவமாக விலை அட்டைகளைத் தேடி, விழி ஓட்டும் அவசர அழகில் கொஞ் சம் கவித்துவம் தெரிகிறது.

"புதுசா என்னவெல்லாம் வந்திருக்கு?" என்று கேட்கி றார். "என்னையா கேக்கற?" என்பது போல உடனே திரும்பும் கணவரைப் பாருங்கள். பொங்கல் பர்ச்சேஸுக்கு மனிதர் எத்தனை பட்ஜெட் போட்டிருக்கிறார் என்று முகத்தில் தெரியவில்லை. அப்படி ஒன்றும் மனைவியின் வேகம் பார்த்து, கலவரமடைபவராகவும் தெரியவில்லை.

"இது பட்டு செக்ஷன் தானேம்மா? காஞ்சி புரம், தர்மாவரம் தவிர என்ன புதுசு வந்துடப் போகுது? செக்கண்ட் ஃப்ளோர் போனீங் கன்னா, .சாரீஸ்ல வெரைட்டி பார்க்கலாம்."

அந்த அம்மாவுக்கு மட்டும் தெரியாதா என்ன? "சரி, போலாம்" என்று ஒயிலாகத் திரும்பி; மாடியைப் பார்க்க நடக்கிறார். பின் பற்றும் கணவரை விட்டுவிடுங்கள். சேல்ஸ் மனிதர் மடித்துப் போடும், அம்மணி விரித்துப் பார்த்த புடைவைகளைச் சற்று எண்ணுங்கள். ஆறு. ஏழு. அதோ ஒரு ஆரஞ்சு - ஆக எட்டு.

இப்போது அந்த மாம்பழச் சுடிதாரைக் கவனிக்கலாம். வுட்-பீயுடன் வந்திருக்கிறார் என்று தோன்றுகிறது. பக்கத்தில் அந்த இளை ஞர் சளைக்காமல் பேசிக் கொண்டிருக்கிறார். சகோதரியும் சளைக்காமல் சிரித்துக் கொண்டு. (போனி டெயில் போன்ற புராதன சிகை அலங் காரங்கள் பாலகிகளுக்கு மட்டுமின்றி கல்யா ணத்துக்கு இருக்கிற கன்னியருக்கும் ரொம் பத்தான் அழகாக இருக்கிறது.)

ஆயிரத்து சொச்ச ரூபாயில் அவர் தேர்ந் தெடுத்திருக்கிற புடைவை, கோல்டன் வேவ்ஸ் என்கிற நவீன ரக வரவு என்று இரண்டாம் தளக் கண மறவர் சொல்கிறார். இனி, அந்தப் புடைவையின் குண விசேஷங்களில் கொஞ்சம் கவனம் செலுத்தலாம்.

பட்டு இல்லை தான். ஆனால் என்ன ஆச்சர்யம்? பட்டுப் போல் மென்மை. தவிர, வாரித் தெளித்தாற்போல் சரிகை. ஜோராகத் தான் இருக்கிறது. உடன் வந்த வுட்-பீக்குச் சற்று ரசனை அதிகம்தான்.

"இது மொஃபசல் பண்டிகை சார்!"

அந்தக் குழந்தையைப் பாருங்கள். ஏழெட்டு வயதுக்குள் தான் - அதோ, 'கடிதாருக்குப் போகும் வழி' போர்டுக்குப் பக்கத்தில்... சே, ப்யூட்டிஃபுல்! அத்தனாம் பெரிய புடைவையை சகட்டு மேனிக்குப் பிரித்து விட்டு, பூக்களைத் தொட்டுத் தடவி... ஐயோ, ஏன் மேடம் அடிக்கறீங்க?

சே. பாவம்! அழ ஆரம்பித்து விட்டது இல்லையா? சமாதானம் ஆக ஒரு கொககோலா அல்லது வெனிலா வேண்டியிருக்கும்; அடித்த கையே அணைக்கும்.

நல்லது. நாம் சற்று பேஸ்மென்ட்டுக்கு வந்து அண்ணாந்து பார்ப்போம். இன்டீரியர் டெகரேஷனில் புகுந்து விளையாடி இருக்கிறார்கள். உயரே அந்த மீனாட்சி கல்யாண சிற்பக் காட்சியைப் பாருங்கள். எத்தனை டச்சிங் இல்லை? உத்தரங்கள் மட்டும் சளைத்தவையா என்ன? ஜாலம் காட்டியிருக்கிறார்கள் தானே?

சரி, ஒரு சமாசாரம் சொன்னால் காதோடு வைத்துக் கொள்ள வேண்டும், ஓகே?

இரண்டாம் தளத்தில் அந்த மாம்பழ கடிதாரை கவனித்த சேல்ஸ்மன் இருக்கிறாரே, அவரைச் சற்று ஓரம் கட்டிப் பேச்சுக் கொடுத்தால், சும்மா ஜோராக சுவாரஸ்ய விவரங்கள் கொட்டுகிறார். பாருங்கள் ஒரு பட்டியல்.

1. தீபாவளி அத்தனை சுவாரஸ்யம் பொங்கலில் கிடையாது நம் மக்களுக்கு. ("பொங்கல், மொஃபசல் பண்டிகை சார்.") அதனால் அத்தனை தீவிர வியாபாரம் இல்லை.

2. சிந்தடிக், பாலியஸ்டர், ஷிபான் மோகமெல்லாம் தொண்ணூறு சதம் போய்விட்டது பெண்களுக்கு. '100% காட்டனு'க்கே டிமாண்ட் குறிப்பாக ஆபீஸ் தேவதைகளிடம்.

3. ஸ்டெயின் கார்டு என்கிற, காப்பி, டீ கறைகளைச் சேராமல் தடுக்கிற ரகப் புடைவைகளுக்கு மவுஸ்.

4. பிரின்டட் சாரீஸ் எனப்படுகிற, வண்ணங்கள் அள்ளித் தெளித்த ('தென்றல் வந்து தீண்டும் போது' பாடல் ஆரம்பத்தில் ஒரு கம்ப்யூட்டர் கிராஃபிக் வருமே, அது மாதிரி) ரகங்களை 20-25 வயதினர் அதிகம் விரும்ப ஆரம்பித்திருக்கிறார்கள் - சரிதாரை விடவும். (ஆனா அதிகம் பார்த்ததா ஞாபகமில்லையே நைனா.)

காதோடு வைத்துக் கொள்ள வேண்டிய விஷயம் இப்போதுதான்.

"இவ்ளோ கேக்கறீங்களே, உங்களுக்கு என்ன வேணும்? சீக்கிரம் சொன்னீங்கன்னா, முடிச்சுட்டு அடுத்த கஸ்டமரை கவனிக்கலாம்."

"ஹிஹி. இங்க ஹாண்ட் கர்ச்சிப் விக்கறதில்லைங்களா?" (அடிக்க வருவதற்குள் அம்பேல், ஜூட்.)

வெளியே :

காத்திருப்பவர்களுக்காகவும் கால்வலிக்காரர்களுக்காகவும் கதை அளப்போருக்காகவும் நாற்காலிகள் போட்டிருப்பதைக் கவனியுங்கள். கொஞ்சம் உட்காரலாமா? குட். அப்படியே லலிதா ஜுவல்லரி திசையில் குமரனுக்கு இம்மீடியட் இரண்டாவது கடையைப் பாருங்கள். அதான் சார், அந்த ஃபாஸ்ட் புட் கடை அதிபுத்திசாலிகள் என்று தோன்றுகிறதா? நிச்சயமாக. புதுசாகத் திறந்திருக்கிறார்கள். நல்ல கூட்டம்! பர்சேஸ் முடிந்த பசிக்களைப்பில் ஒரு குடும்பமே அங்கே நுழைவதைப் பாருங்கள்.

அடடா, இதென்ன சண்டை? பிளாட்பாரக் கடைக்காரர்களுக்கிடையே ஏதோ கசமுசா. ஒருத்தர் கஸ்டமரை இன்னொருத்தர் இழுத்து விட, ரகளை தான் இல்லையா?

மாறாக, எதையும் கவனிக்காமல் அதோ உட்கார்ந்த படிக்கு அரைத் தூங்குகிறார் ஒருவர். கையில், வாங்கிய புடைவை பார்சல்கள். ஐயய்யோ... யாராச்சும் லவுட்டிக்கிட்டுப் போயிடப் போறாங்க சார்!

— கிச்சா



• அகராதி வெளியீட்டு விழாவில்.....

நாலு வருட கால கடும் உழைப்பும், பத்து இந்தி பண்டிதர்களின் கண் துஞ்சா செயலாக்கமும், இந்த டிக்ஷ்னரி உருவான வரலாற்றுப் பின்னணி!

"இது வெளிவர முக்கியமாய் உழைத்த தலைமைப் பதிப்பாசிரியர் டாக்டர். சீனி. சௌமிய நாராயணன் அவர்களுக்கும் (தமிழ், இந்தியில் எம்.ஏ.), அவருடன் சேர்ந்து இயங்கிய ஒன்பது இந்தி பண்டிதர்களுக்கும்தான் முழுப் பெருமையும் சேரும்" என்கிறார் கோபாலகிருஷ்ணன்.

அதிசய அகராதி

டிக்ஷனரியைப் பார்த்தாலே பிரமிப்பாய் இருக்கிறது. புதுத் தலையணை சைசில்!

இந்தி - தமிழ் - ஆங்கில அகராதி. கிட்டத்தட்ட 75,000 வார்த்தைகள்; விலையைப் பார்த்தால் அதைவிட பிரமிப்பாய் இருக்கிறது — 290 ரூபாய்!

"நடுத்தர மக்களுக்கு அதிகமில்லையா?" என்ற நியாயமான சந்தேகத்தை எழுப்பினால் உடனே மறுக்கிறார், அகராதியை வெளியிட்டுள்ள அகஸ்தியர் புத்தக நிலைய (திருச்சி)

தினமும் வரும் 'டிமாண்ட்' தந்திகள்!

உரிமையாளர் கோபாலகிருஷ்ணன்.

"இதன் பயன் தெரிந்தவர்களுக்கு, விலை ஒரு பொருட்டே அல்ல. எங்களுக்கு வந்து குவிந்துள்ள ஆர்டரைப் பாருங்கள்" என்று கத்தைக் கடிதங்களை எடுத்துப் போடுகிறார்!

அனைத்தும் 'உடனே அகராதி தேவை' என்கின்றன. இதுவரை 2000 பிரதிகளுக்கு மேல் விற்றுவிட்டதாம்!

இதுபோன்ற மும்மொழி அகராதி வெளியிட எப்படித் தோன்றியது என்றோம்.

பொதுமக்கள்தான் உந்துசக்தியாம். அடிக்கடி கேட்டார்களாம். இந்தி - தமிழ் மற்றும் இந்தி - ஆங்கிலம் என்று இருமொழி அகராதி மட்டுமே இதுவரை இருந்தன. இந்தியாவிலேயே முதன்முதலாக மூன்று மொழிகளையும் இணைத்து வெளிவந்த முதல் அகராதி இதுதான் என்று சொன்னபோது சாதனையின் பெருமிதம் அவர் முகத்தில் விரிந்தது.

எட்டு லட்ச ரூபாய் முதலீடும் (அம்மாடி!)

ஒவ்வொரு பண்டிதருக்கும் பத்து இந்தி எழுத்துக்களைப் பிரித்துக் கொடுத்து, அந்த எழுத்துக்களில் தொடங்கும் சொற்களைத் தனித்தனித் தாளில் எழுதச் செய்து, அதற்கு ஈடான தமிழ் மற்றும் ஆங்கில அர்த்தங்களை எழுதி, அலசி, அந்த ஒவ்வொரு தாளையும் (அதில் ஒவ்வொரு வார்த்தையையும்) மற்ற ஒன்பது பேரும் சரிபார்த்து... கேட்கும்போதே தலைசுற்றியது!

அகராதியைப் புரட்டிய போது நாம் கண்டவை —

இந்தி சொற்களுக்கான பொருள் முதலில் இந்தியிலும், அடுத்து தமிழிலும், இறுதியாக ஆங்கிலத்திலும் உள்ளது. மும்மொழிகளிலும் பொருள் ஒத்திசைவிப்பிற்கான கவனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் வழங்கப்படும்போது, இந்தியில் பொருள் எந்த வரிசையில் உள்ளதோ, அதே வரிசையை தமிழிலும், ஆங்கிலத்திலும் கொடுக்க முயன்றுள்ளனர்.

"ஆக்ஸ்போர்டு டிக்ஷனரி போல, இதுவும், எந்தத் தவறும், குறையும் இல்லாதது, தரமுள்ளது என்று உறுதியளிக்க முடியும்" என்று தன்னம்பிக்கையுடன் சொன்னார் கோபாலகிருஷ்ணன்.

"அதுசரி, அகராதியை ஏன் இரண்டு 'வால்யூ'மாகப் பிரித்துப் போடவில்லை? கையாளச் சௌகரியமாய் இருந்திருக்குமே?"


"சிக்கனம்தான் காரணம்" என்ற சிக்கனமான பதில் கிடைத்தது.

"இரண்டு வால்யூமாகப் போட்டால் 'பைண்டிங்' செலவு அதிகமாகும். மற்ற புத்தகங்கள் போல வெளியே யாரும் எடுத்துச் செல்லப் போவதில்லை. காலிகோ பைண்டிங் முறையில் செக்ஷன் பைண்டிங்காய் செய்யப்பட்டுள்ளதால், எத்தனை முறை விரித்து, உபயோகித்தாலும் பிரியாது. அதனால் அளவு என்பது பிரச்னையாக இராது..."

— கிருஷ்ணா

ஜனவரி 1996

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14		16	17	18	19	
21	22	23	24	25	26	
28	29	30	31			



புதியதோர்






உலகம்

செய்வோம்

பசுமையாக, செழுமையாக,

வளமையாக, முழுமையாக.



ஆம்! பாரதியின் கனவை நனவாக்குவோம்!

புதியதோர் உலகிலே, மதுரைக்கு மிக அருகிலே, பசுமையான நிலம் மற்றும் வீட்டுமனையையும் (10,000 ச.அடி) செழுமையான தேக்கு பண்ணையையும், வளமையான காய்கறி பழ தோட்டங்களையும், முழுமையான பண்ணை இல்லத்தையும் உங்களுக்கே சொந்தம் ஆக்கிடுவீர்!

உங்கள் முதலீடு	[redacted]	[redacted]20 ஆண்டுகளில் மதிப்பு
ரூ.25,000/- அல்லது ரூ.250/- வீதம் 100 கலப தவணைகள்	10,000 ச.அடி நிலம் 24 தேக்கு மரங்கள் 2 ஒட்டு மா 2 வீரிய தென்னை காய்கறி தோட்டம்	ரூ.10 லட்சம் ரூ.24 லட்சம் ரூ.50,000 ரூ.50,000
20 ஆண்டுகளில் ரூ.35 லட்சம் மதிப்பு சொத்துக்கள்		

• 10,000 ச.அடி நிலம் உடன் உங்கள் பெயரில் பதிவு செய்யப்படுகிறது • அற்புத தொழில் நுட்ப விந்தை • சிறந்த நீர்வளம், மண்வளம், பயிர் வளம் • சில ஆண்டுகளில் உங்கள் நிலம் மதுரை நகரின் மையமாகி விடும்.

ரூ.100/- வீதம் 15 மாதங்கள் செலுத்தி லட்சம் பெறும் திட்டங்களும் உள்ளன

ESWAR

Eswar Grow-Tek Ltd.

287, West Masi Street, Madurai 625 001.
Ph: 37305, 35843 Fax: 0452-37305 Tlx: 0445-478-AGRI-IN

The Agri People

PROFAD:ESWAR:167:95:TAM

● வி. சிவா, அரசரடி.

? கடைசி நேரத்தில் ஆந்திராவும் (கிருஷ்ணா நீர்) கைவிரித்து விட்டதே?

! அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதைதான்! சென்னையைச் சுற்றியுள்ள எல்லா ஏரிகளையும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள விஞ்ஞான ரீதியாகத் திட்டம் வகுத்தாலே போதும். அதை விட்டுவிட்டு, கிருஷ்ணா குடிநீருக்காக கோடிக் கணக்கில் பணத்தை அள்ளிக் கொட்டியிருப்பது, ஆந்திர விவசாயிகள் நீர்ப்பாசனம் பெறத்தான் உதவியுள்ளதே தவிர, இதுவரை நமக்குப் பலனில்லை. எதிர் காலத்திலும் ஆந்திர அரசு தயவு வைத்தால் தான் உண்டு!

● மல்லிகை மன்னன், மதுரை - 14.

? 'அன்னை தெரசா போல் பொதுநலச் சேவை செய்யப் போகிறேன்' என்கிறாரே சில்க் ஸ்மிதா...?

! கவர்ச்சி நடிகைகள் பொதுநலச் சேவை செய்யக்கூடாதா என்ன..! கவர்ச்சியே பொதுச் சேவைதான் என்று சொல்லாத வரைக்கும் சரி தான்!

● டி.ஆர். பாலசந்தர், திருநெல்வேலி - 6.

? யார் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டுக்குக் காவிரி நீர் கிடைக்கும்?

! அகஸ்தியர்!

● அவ்வை கே. சஞ்சீவி பாரதி, அவ்வையார் பாளையம்.

? காவிரி நீர்ப் பிரச்னைக்காக எம்.பி. பதவியை ராஜினாமா செய்யத் தயார் என்று மூப்பனார் கூறுகிறாரே?

! ஒரு பலனும் இராது! வாழப்பாடி அமைச்சர் பதவியையே ராஜினாமா செய்தாரே.. என்ன ஆயிற்று!



• பிரச்னை தீராது!

● எஸ்.ஆர். ஸ்வாமி, திருநெல்வேலி-11.

? விசாரணைக் கமிஷன்களால் யாருக்கு லாபம்?

!கமிஷனில் அமர்த்தப்படும் 'ரிடயர்ட்' நீதிபதிகளுக்குத் தான்!

● வி. ரஜினி பாலாஜி, சி.என்.கிராமம்.

? கலைஞரின் இலக்கியம் வை.கோ.வுக்குப் பிடிக்குமாமே?

! பொன்னியின் செல்வன் கூட பிடிக்கும் என்று சொல்லியிருக்கிறாரே.. இலக்கிய ரசனை அரசியலுக்கு அப்பாற்பட்டது.

● என். சி. ராஜேந்திரன், சின்ன சேலம்.

? சென்னையில், கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்துக் கட்டப் பட்டிருக்கும் பல உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு அரங்கங்கள் எப்பொழுதும் தமிழக அரசால் ஒழுங்காகப் பராமரிக்கப்படுமா?

! மிலியன் டாலர் கேள்விதான்! ஆளும் கட்சிக் கூட்டங்களுக்கு வருவோர் தங்கும் இடமாக முன்பு எம்.ஏ.சி. ஸ்டேடியம் (சேபாக்) மாற்றப்பட்டதை எண்ணினால், 'பகீர்'என்கிறது! எம்.ஆர்.எஃப் போன்ற பெரிய தனியார் தொழில் நிறுவனங்களின் பொறுப்பில் விட்டுவிடலாம்.

● ப. மூர்த்தி, பெங்களூர் - 2.

? உங்களது கணிப்பில், 1995ஆம் ஆண்டின் சிறந்த தமிழக மனிதர் யார்...?

! டிசம்பர் 28 அன்று இறந்து போன ராஜாஜியின் மகள் நாமகிரி. இளம் வயதிலேயே கணவரை இழந்தவர். தந்தை விதவா விவாகத்துக்கு எதிரி அல்ல. ஆயினும் அவர் தம் மனைவியை இழந்து மறுமணம் புரிந்து கொள்ளாமலே வாழ்ந்து வந்தது கருதி, அவருக்கு உதவுவதையே வாழ்க்கையின் குறிக் கோளாக்கிக் கொண்டார் நாமகிரி. சுயநலம் துளியுமின்றி ஒரு தவ வாழ்க்கை வாழ்ந்தார். அறிவாற்றல் மிக்கவர்; அற்புதமான ஓவியர்.



• தவ வாழ்க்கை...





• மூப்பரிமாணம்

• பொதுச் சேவை ஆசைகள்

ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்த போது, நாட்டின் முதல் பெண்மணியாக விளங்கி, அயல்நாட்டுத் தலைவர்களை முறைப்படி உபசரித்து கவனித்துக் கொண்டு, பாராட்டுப் பெற்றார். அவரது

எந்தக் கட்சி நம்ம கட்சி?



• வரவேற்க ஒரு மாற்றம்

• அரசியலுக்கு அப்பால்...

கடைசி காலத்தில் அயல் நாட்டிலிருந்து உறவினர் அனுப்பிய பிஸ்கட்களில் ஒன்றே ஒன்றை மட்டும் (அனுப்பியவர் மனம் கோணாமல் இருக்க) சாப்பிட்டுவிட்டு, 'எனக்கு சுதேசி பிஸ்கட்டே போதும்' என்ற தேச பக்தர். கதர் தவிர வேறெதுவும் அணியாத அடக்கத்தின் திரு உருவம். அப்படிப்பட்டவர் காலமானபோது தமிழக, மத்திய அரசுகள் காட்டிய மரியாதை...? வெட்கக் கேடு!

● கண்மணி சுப்பு வேதையா சித்திரவேலு, கருப்பம்புலம்.

? தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழாவுக்குப் போகாமல் நெல்லை பக்கம் போனது 'ஸ்டண்ட்' என்கிறான் என் நண்பன்... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

! அது ஸ்டண்ட் அல்ல; வரவேற்கத் தக்க மனமாற்றம். நேரில் போனதோடு, நிவாரணம் அளித்ததோடு நிறுத்தி விடாமல் உள்ளூர் தலைவர்களைக் கட்சிப் பாகுபாடு இன்றி முதல்வர் அழைத்துப் பேசியதும் அவர்களின் ஆலோசனையும் ஒத்துழைப்பும் கோரியதும் நல்ல அறிகுறிகள்.

● அ. பழநிசாமி, வெங்கிட்டம்பாளையம்.

? எந்தக் கட்சி நம்ம கட்சி?

! கண்மூடித்தனமாக வாக்குறுதிகளை அள்ளி வீசாத கட்சி. நேர்மையையும் சிக்கனத்தையும் உறுதியளிக்கும் கட்சி; சீரிய சுதந்திரப் பொருளாதாரக் கொள்கையுடன் யதார்த்தமான இலக்கு நிர்ணயித்து, அதை எட்டுவதற்கு மக்களுக்கு ஊக்கமும் உத்வேகமும் ஊட்டும் கட்சி. ஜாதி, மதச் சார்பற்ற கட்சி... ஆனால் அப்படி ஒரு கட்சி இருக்கிறதா என்ன...?

● அ. சோ. விஸ்வநாதன், காட்பாடி.

? 1995ஆம் வருடத்தின் ஹைலைட்?

! வேறென்ன...? கல்யாணம்தான்!

● என். குப்புசாமி, வெங்கிட்டாபுரம்.

? 'தனித்துப் போட்டி' என ஜெயலலிதா கூறியதே இனிப்பான செய்தி என மூப்பனார் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து விட்டாரே?

! ராவ்காருவும் அவருடன் சேர்ந்து மகிழாதவரையில் என்ன பிரயோஜனம்! ஜெயுடன் கூட்டணி விரும்பும் காங்கிரஸ்காரர்கள் சண்டிமாடாக வேறு பக்கம் இழுத்துக் கொண்டுதான் இருப்பார்கள்.

● ஆர்.கே. கங்காசீனிவாசன், திருவெண்ணெய் நல்லூர்.

? இசைவிழாவில் இந்த வருடம் அசத்தியது யார்?

! இளம் தலைமுறைக் கலைஞர்கள் பலர்! உதாரணம்: நுங்கம்பாக்கம் கல்சுரல் அகாதமியில் மகாராஜபுரம் ராமச்சந்திரன். ஒரு பூர்வி கல்யாணி ஆலாபனை செய்தார் பாருங்கள்... அந்த ராகத்தின் நீள அகலத்தை மட்டுமின்றி உயரம், ஆழம் என்று நான்கு பரிமாணங்களை அளந்த அனுபவம் ஏற்பட்டது! உழைப்பு + ஆர்வம் + உற்சாகம் என்ற முப்பரிமாணமும் புரிந்தது.

● டி.வரதன், பவித்திரமாணிக்கம்.

? கோவையில் ஒரு எம்.எல்.ஏ. வீட்டில் பதின்மூன்று கோடி ரூபாய் கறுப்புப் பணம் சிக்கியதாமே?

! ஓர் அமைச்சர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தகவல் வந்தது. பிரதமர் எதையும் கண்டு கொள்ளாமல் கமுக்கமாய் இருப்பது ஏமாற்றத்தைத் தருகிறது!

● என். உஷா தேவி, மதுரை - 9. ❐

? தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் அதிக ரசிகர்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ளவில்லையே...?

! உலகத்தர வீரர்கள் கலந்து கொள்ளாதது ஒரு காரணம். அதனால் போட்டியில் சூடு பிடிக்கவில்லை. மேலும் கிரிக்கெட், ஃபுட்பால், டென்னிஸ், ஹாக்கிக்கு இருப்பது போன்ற மவுசு நம் ஊரில் தடகளப் போட்டிகளுக்கு இல்லையே...!

● கே.சி. கோகுலன், சித்தம்பூண்டி.

? புது வருட ஆரம்பத்திலேயே தமிழ் நாட்டில் தண்ணீர் பஞ்சம் வந்து விட்டதே?

! 'அதனால் என்ன....? எல்லோரும் இனி 'மினரல் வாட்டர்' வாங்கிக் குடியுங்கள்' என்று சொல்லாமலிருந்தால் சரி.

❐ ரூ. 25 பரிசு பெறுபவர் :
என். உஷா தேவி,
புஷ்பவல்லி பவனம்,
7, பங்கஜம் காலனி, முதல் தெரு,
மதுரை — 625 009.

ENCAR'S GOLDEN MONTH

21.12.95 முதல் 21.1.96 வரை மட்டும்

ஓர் உன்னதமான முந்திரி முதலீட்டு திட்டம்

- அதிக வருவாய்
- வரி விலக்கு
- முழு உத்திரவாதம் (செக்யூரிட்டி டெபாசிட்)
- மிக குறுகிய கால முதலீடு

உங்களுக்காக

ENCAR

Cashew Cash Bond

என்கார் கேஷ்யூ கேஷ்பாண்ட்

கடின உழைப்பின் மூலம் ஈட்டிய உங்கள் முதலீட்டின் பாதுகாப்பைப் பற்றி கவலை, அதிக வருவாய் பெற முதலீட்டை பணயம் வைக்க வேண்டிய நிலைமை, நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் எதவும் இனி இல்லை.

என்கார் கேஷ்யூ பாண்ட் அளிப்பது உறுதியான அதிக வருவாய்

★ இத்திட்டத்தில் 6 ஆண்டு காலத்திற்கு ரூ. 5000/- முதலீடு செய்து 28% க்கும் கூடுதலான மிகுதியான வருமானம் பெறலாம் மேலும் உங்கள் முதலீட்டிற்கு கம்பெனி தரவேண்டிய பணத்திற்கு உத்திரவாதமாக எங்களிடம் உள்ள நிலத்தில் ஒரு பகுதியை (ஒரு யூனிட்டிற்கு 2400 ச.அடி) உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பை அளிக்கிறது. ★ முதலீட்டாளர்களுக்கு வருமானத்தை பற்றி கவலையும் சந்தேகமும் இல்லாத முதலீடு, மற்றும் எந்த சூழ்நிலையிலும் இட்டவட்டமாக ஆண்டுக்கு 28% வருமானத்தை பெறலாம். ★ பல்லாயிரக்கணக்கான முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற்ற உங்கள் என்கார் நிறுவனம் மூன்று தலைமுறையாக தொழில் துறையில் அனுபவம் பெற்ற பிரைவேட் லிமிடெட் (இந்திய கம்பெனி சட்டம் 1956 -ல் பதிவு பெற்றது) என்கார் குரூப் நிறுவனத்தின் ஓர் உன்னதமான முதலீட்டு இட்டம் என்கார் கேஷ்யூ கேஷ்பாண்ட்★ முந்திரி தோட்டத்தில் பெறுகின்ற வருமானம் விவசாயத்தை சார்ந்தது, எனவே நீங்கள் வருமான வரி செலுத்த வேண்டியது இல்லை.

திட்டம்	குறைந்த பட்ச முதலீடு	நில உத்திரவாதம்	வருமானம்	போனஸ்	திட்ட காலம்	மொத்த வருமானம்
A. ஆண்டு வருமான திட்டம்	Rs. 5,000/- (1 Unit)	1 Ground	Rs. 900/- Per Year	Rs. 1,800/- at the end	6 Years	12,200/-
B. கூட்டு வருமான திட்டம்	Rs. 5,000/- (1 Unit)	1 Ground	Rs. 10,000/-		6 Years	15,000/-

ENCAR Cashew Gardens (P) Limited

Registered under Companies Act 1956 - IC. No. 18 - 30423 / 95

Head Office = 134/2, Royapettah High Road, Near Vivek & Co, Luz Corner, Mylapore, MADRAS - 4 Ph : 8526887. Fax : 91-44-840838

Regd. Office = 10 & 11 Varadharaju Complex, (Easwari Complex), Near Chatram Bus Stand, TRICHY - 2.
Ph : 28963 Fax : 0431 - 462750 Telex : 0455-316 ACES IN

Regl. Office = 1/23, Hanumanthappa Layout, Near Manipal Center, 1/A, Ulsoor Road, BANGALORE - 42 Ph : 5598092

Branches = 512-B, N.S.R. Road, Gowri Complex, Annamalai Stores Upstairs, Saibaba Colony, COIMBATORE - 11 Ph : 445052, 445065
= No. 267, Advaida Asrama Road, A.V.K. Nagar, Opp. to New Bus Stand, SALEM - 4 Ph : 448873
= No. 7, west Vadampokki street, Near Perumal Koil, MADURAI - 1 Ph : 35887
= Popular Complex, 31/A, North Pradhakshnam Road, Near Thinnappa Theater, KARUR - 1.

For Safe and Secured Investments - ENCAR

வட்ட மேஜை

● "போக்ரானில் மீண்டும் அணுகுண்டு?..." தலையங்கம் படித்தேன். "எந்தவொரு அரசாங்கத்தின் நோக்கமும் அண்டை நாடுகளுடன் நேசமும் ஒப்புரவும் வளர்ப்பதாக அமைய வேண்டும்" என்று நீங்கள் குறிப்பிட்டிருப்பது பாகிஸ்தானுக்கு மிகவும் பொருத்தமான அறிவுரை. பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு நாம் கையைக் கட்டிக் கொண்டு இருந்துவிட முடியாது. சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் ஹைட்ரஜன் மற்றும் நியூட்ரான் குண்டுகள் தயாரிக்கும் ஆற்றல் பெற்று விட்டன. ரஷ்யாவும் சிதறிவிட்ட சூழ்நிலையில் உலக நாடுகளை அடிமைப்படுத்த நினைக்கும் அமெரிக்காவுக்கு நாம் பணிந்து விடக் கூடாது.

தஞ்சாவூர், வெ. முருகானந்தம்.

● ராஜீவ் மேனனின் பேட்டி யதார்த்தமாகவும் வெளிப்படையாகவும் இருந்தது. அவர் குறிப்பிட்டிருந்த மாதிரி எழுத்தாளர்களுக்கும் திரையுலகினருக்குமுள்ள திரை விலகினால்தான் தமிழில் நல்ல தரமான படங்களை எதிர்பார்க்க முடியும். அது வரை நம் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் லாஜிக் பற்றி கவலைப்படாது தாலி சென்டிமெண்ட், மாரியாத்தா டான்ஸ், ரத்தம் தெறிக்கும் சண்டைக் காட்சிகள் என்றுதான் படமெடுப்பர். வெல் மேனன்! நீங்களாவது ரசிகர்களைப் புரிந்து கொண்டு நல்ல திரைப்படங்களைத் தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சேலம் - 1, கே. பாலசுப்ரமணியம்.

● காலத்தை அனுசரித்துப் போவது புத்திசாலித்தனம் என்று மெகா தயாரிப்பாளரான சரவணன் அவர்களே சொல்லும் போது ஜுஜுபி தயாரிப்பாளர்கள் எல்லாம் எம்மாத்திரம்?

தூத்துக்குடி - 1, எஸ். ராமசுப்பிரமணியன.

● 'வெல்வெட்டு ஆடையும் கல்வெட்டுப் பார்வையும் புல்மொட்டு நீர் போலப் புதுப் புன்னகையுமாக...' ஆகா... ஜில்லிட்டு உம்மை எழுத வைத்த கவிதை நாயகி காஜோலுக்கு ஜே!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

ரூ. 10 பரிசு பெறும் கடிதங்கள்

● 'கையைக் கடிக்கும் காலணிகள்' தலைப்பே 'ஷூப்பர்!' கட்டுரை படிக்க 'ஷூ'வாரசியமாக இருந்தது!

அயன்புரம், த. சத்தியநாராயணன்.

● செருப்புத் திருடர்களிடம் இருந்து தப்பிக்க... காலணிகளைப் பூட்டி வைக்கும் வசதியோடு வந்தால் இன்னும் நன்றாக இருக்கும். உற்பத்தியாளர்கள் கவனிப்பார்களா?

திட்டக்குடி, அ. சரவணராசன்.

● "தொட்டாச் சிணுங்கி"- பட விமர்சனம் படித்தேன். "இயக்குநர் முதல் இசையமைப்பாளர் வரை பல புதியவர்கள்"- சரி. ஆஸ்திரேலியாவில் இருந்து வந்திருக்கும் பிலிப்-ஜெர்ரியின் இசைத் திறமை பற்றி ஒரு வரியாவது விமர்சனத்தில் இருக்கும் என்று பூதக் கண்ணாடி வைத்து தேடிப் பார்த்தேன். ஏமாற்றம் தான்!

வேலூர் - 7, பா.வை. சுவாமிநாதன்.

● "நேர்மை என்பது சொக்கத் தங்கம். அதில் ராஜதந்திரம் என்ற செம்பை சரியான விகிதத்தில் கலந்தால் நல்லாட்சி என்னும் உயர்ந்த நகையை உருவாக்கலாம்" என்ற தராசு பதில், 24 காரட் தங்கத்தில் உருவான 'பொன்மொழி'. ரசித்து நினைவில் வைத்துக் கொள்ளத் தூண்டியது.

சென்னை - 34, ச. நாகரத்தினம்.

● "சப்தமும் நாதமும்" சிறுகதை யதார்த்தமாக இருந்தது.

சென்னை - 90, கலாசர்மிள்டா.

● 'இருட்டுக்குள்ளே...' கவிதை, வெளிச்சத்திலே தள்ளிவிட்டது. வெளிச்சமாக்கிய கவிதையாளருக்கு நன்றி.

கொரட்டூர், நா. சுதேசி.

● 'யுத்தம்' நமக்குத் தீமை வரும்போது அதனைத் தைரியமாக எதிர்த்துப் போராட வேண்டும் என்ற நற்கருத்தை அழகுற இயம்பியது. 'ஜனனம்' பெற்றவர்களை உதாசீனப்படுத்தக் கூடாது என்பதை அறிவுறுத்தியது. அருமையான சிறுகதைகள்.

சென்னை - 39, அ.கு. கிருஷ்ணன்.

சொக்கத் தங்கத்தில் ஒரு பொன்மொழி!

தாய்மை

சுப்புராஜ்

ஜெயந்தி வெறிபிடித்தது போல் பிழியப் பிழிய அழுதாள். சுப்ரமணியும் அழட்டும் என்று விட்டு விட்டான்.

"ஏம்ப்பா நமக்கு மட்டும் இப்படி! நாம யாருக்கு என்ன பாவம் பண்ணினோம்? கடவுள் ஏன் நம்மை இப்ப்டி சோதிக்கிறார்? இப்ப குழந்தையை என்னப்பா பண்றது?"

"என்ன ஜெயந்தி இப்படிக் கேட்கிறே? நமக்குன்னு பிறந்த குழந்தையை, நாமதானே வளர்க்கணும்..."

"எப்படிப்பா முடியும்? ஒரு ஊனமுள்ள குழந்தையை நாம வளர்க்குறது எப்படிச் சாத்தியம்? அய்யய்யோ, இப்படி ஆயிடுச்சேன்னு அனுதாபப்படலாம். ஒருநாள் அல்லது ரெண்டு நாள் வச்சு பராமரிக்கலாம். அவ்வப்போது படிப்பு கூட சொல்லிக் குடுக்கலாம். ஆனால், வாழ்க்கை முழுக்க, ஒரு பார்வையில்லாத குழந்தை கூட எப்படிப்பா... ப்ளீஸ் நமக்கு வேண்டாம்."

"தப்பு ஜெயந்தி, நீ பேசறது நிச்சயமா சரியில்ல. குழந்தை வேணாமின்னு அழிக்கப் போனவங்கள, நாமதான் கெஞ்சிக் கூத்தாடி நமக்காக பெத்துக்கச் சொன்னோம். இப்பக் குழந்தை ஊனமாயிருக்க வேண்டாம்னு சொன்னா எப்படி? இந்தக் குழந்தையை பராமரிக்க, அவ்ங்க குடும்ப நிலைமை தாங்காது. நமக்காக, நம்ம மேல உள்ள மரியாதையாலே அன்புனால... மறுப்பு சொல்ல முடியாம, அவங்க இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கிட்டாங்க... இப்ப வேண்டாம்னு சொல்றது நியாயமுமில்ல; தர்மமும் இல்ல. நீ இப்படிப் பேசறது தெரிஞ்சா சரோஜா மனசு என்ன பாடு படும்...?"

பக்கத்து போர்ஷனுக்கு, சரோஜாவும் மாரிமுத்துவும் குடிவந்த போது, ஜெயந்திக்கு ஒருசேர பொறாமையாகவும், பரிதாபமாகவும் இருந்தது – பொறாமைக்குக் காரணம், சரோஜாவின் அழகழகான இரண்டு பிள்ளைகள் – ஆறு வயதில் விம்மி என்கிற விமலா; முதல் வருஷம் முடிய ஒருசில மாதங்களே பாக்கியிருக்கும் சதீஷ்.

பரிதாபத்திற்குக் காரணம், இவ்வளவு சின்ன வயதில் – சரோஜாவிற்கு இருபத்தி இரண்டு அல்லது இருபத்தி மூன்று வயதுதான் இருக்கும். இரண்டு பிள்ளைகளுடன் போதிய வசதியின்றி அல்லாடும் அவளின் அவலம்.

மாரிமுத்து, இங்கிருந்து மூன்று கி.மீ. தூரத்திலிருந்த ரப்பர் தொழிற்சாலையில் மெஷின் ஆபரேட்டராக வேலை பார்த்தான். தினசரி கம்பெனிக்கு சைக்கிளில் போய் வந்து கொண்டிருந்தான்.

ஒரு நடுநிசியில் மாரிமுத்து நைட் ஷிஃப்டில் இருந்த போது, சரோஜா படபடப்பும் அழுகையுமாக வந்து நின்றிருந்தாள். விம்மிக்கு ஜுரம் அதிகமாகி கொதித்துக் கொண்டிருந்தது!

ஜெயந்தி குழந்தையை அள்ளிக் கொள்ள, சுப்ரமணி ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டு, டவுனுக்குப் போய், திறந்திருந்த ஒரு 24 மணி நேர ஆஸ்பத்திரியில் விம்மியைக் காட்டி சிகிச்சை முடித்து அழைத்து வந்தார்கள்.

தோளில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த விம்மியை பாயில் படுக்க வைத்து, டாக்டர் கொடுத்த மருந்து மாத்திரைகளை சரோஜாவிடம் கொடுத்து விளக்க, அவள் அழுது விட்டாள்.

"என்ன சரோ இது குழந்தையாட்டமா..." – ஜெயந்தி அவளைத் தேற்றி விட்டு வந்தாள். அன்றிலிருந்து இரண்டு குடும்பங்களுக்குள்ளும் நேசம் சுடர் விட்டது.

விம்மியும் சதீஷும் அப்படி ஒரு அன்னியோன்யமாக ஜெயந்தியிடம் ஒட்டிக் கொண்டார்கள். ஒரு நாளின் பெரும்பாலான நேரங்களில் இவளுடனேயே இருந்தார்கள்.

தனக்கும் குழந்தை இல்லாத குறையைக் கூட ஜெயந்தி கொஞ்சம் மறக்க ஆரம்பித்தாள். இந்த நிலையில்தான் ஒரு திடீர் திருப்பம் ஏற்பட்டது.

வீட்டு வாடகையைக் கொடுத்து வருவதற்காக, ஜெயந்தி மாடிக்குப் போன போது சரோஜா வீட்டுக்காரம்மாளிடம் பேசிக் கொண்டிருந்தாள். அவளின் முகத்தில் வாட்டம்.

"ஏன் ஒரு மாதிரியா இருக்கே சரோ?" –


ஜெயந்தி கேட்க, வீட்டுக்காரம்மாள் பதில் சொன்னாள்.

"கடவுளோட விளையாட்டப் பாரும்மா! நீங்க குழந்தை வேணுமின்னு தவமோ தவம் இருக்கீங்க. உனக்கு கருவே தங்க மாட்டேங்குது. இவங்க, குழந்தை வேண்டாங்குறாங்க; ஆனா கடவுள் கொடுத்துக்கிட்டே இருக்கார். கொஞ்சம் முன்னெச்சரிக்கையா இருந்திருந்தா தவிர்த்திருக்கலாம். ஆனால் இப்பப் போய் கருவைக் கலைக்கறேன்னு அசட்டுத்தனமாச் சொல்றா..."

"இதுன்னா பத்துப் பதினைந்து நாள் வேதனையோட போயிரும்; குழந்தை பெத்துக்கிட்டா வருஷமெல்லாம் வேதனையாச்சே மாமி... ரெண்டு குழந்தைங்கள வளர்க்குறதுக்கே உயிர் போயிட்டு இருக்கு. இதுல மூணாவது குழந்தையா... நெனச்சுப் பார்க்கவே பயமா இருக்கு..." சரோஜா அழுது விடுவாள் போலிருந்தது.

"நல்லா யோசிச்சு முடிவு பண்ணிக்க..." என்று சொல்லி வீட்டுக்காரம்மாள் வீட்டிற்குள் எழுந்து போன போதுதான் ஜெயந்தியின் மனசில் அந்த யோசனை தோன்றியது. அன்றிரவே கணவனுடன் மீண்டும் சரோஜாவைப் பார்க்கப் போனாள் ஜெயந்தி. அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, "எங்களுக்கு நீங்க ஒரு உதவி பண்ணணும்..." என்றாள்.

சரோஜாவும், மாரிமுத்துவும் ஒன்றும்





உனக்கு ஐம்பது நண்பர்கள் இருக்கிறார்களா?

அது போதாது.

உனக்கு ஒரே ஒரு விரோதிதான் இருக்கிறானா?

அது மிகவும் அதிகம்!

— இத்தாலியப் பழமொழி

— என். பங்கஜம்

புரியாமல் விழிக்க, ஜெயந்தியே தொடர்ந்து பேசினாள்.

"பீடிகை எதுவும் இல்லாம நேரா விஷயத்துக்கே வர்றேன். சரோ நீ இப்ப உன் வயித்துல உருவாகியிருக்கிற குழந்தையை பெத்துக்கணும். நல்லபடியா பெத்தெடுத்து எங்களுக்கு குடுத்துருங்க. நாங்க வளர்த்துக்கிறோம் எங்க பிள்ளையாக..."

திடீரென்று இவர்கள் இப்படி ஒரு தீர்மானத்தை முன்மொழியவும், சரோஜாவும் மாரிமுத்துவும் திணறினார்கள். என்ன சொல்வது என்று அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

"இதுல யோசிக்கிறதுக்கு ஒண்ணுமில்ல. உங்களுக்கு வேண்டாமின்னு அழிக்க விரும்புகிற குழந்தையை, எங்களுக்கு தத்துக் கொடுத்துடச் சொல்றோம். அவ்வளவுதான். ப்ளீஸ். இந்த நிமிஷத்திலிருந்து குழந்தை பெத்தெடுத்து சரோஜா நல்லபடியா வீட்டுக்குத் திரும்பறது வரைக்கும் எல்லா செலவுகளையும் நாங்களே ஏத்துக்கறோம்..." கெஞ்சுகிற தொனியில் சுப்ரமணி பேசினான்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும். சரோஜா, மாரிமுத்துவின் மனசுகள் கரைந்தன. இவர்களின் ஏற்பாட்டை முழு மனசோடு ஏற்றுக் கொண்டார்கள்.

அன்றைக்கிலிருந்து சரோஜாவை பூப்போல தாங்கினாள் ஜெயந்தி. அவளை அதிகம் வேலை செய்ய விடுவதில்லை. சாயங்காலங்களில் கடற்கரைக்கு வாக்கிங் அழைத்துப் போனாள். குங்குமப் பூவை வாங்கிக் குவித்தாள். குழந்தைகள் இரண்டிற்கும் ஜெயந்தியின் வீட்டில்தான் சாப்பாடு. சரோஜாவிற்கும் மாரிமுத்துவிற்கும் கூட பெரும்பாலான நாட்களில் இவளே சமைத்து அனுப்பினாள்.

எல்லாம் சரியாகத்தான் நடந்தது; சரோஜா கண் பார்வையற்ற ஒரு குழந்தையைப் பிரசவிக்கும் வரை...

"குழந்தையை ஏதாவது அனாதை விடுதியில நாமளே கொண்டு போய் சேர்த்துடலாமா...?" - ஜெயந்தி கேட்டாள்.

"அது இன்னும் மோசம் ஜெயந்தி. நீ ஏன் இப்படியெல்லாம் பேசுற; நீ இன்னும் ஒண்ணே ஒண்ணுதான் சொல்லலை. குழந்தையை கழுத்த நெரிச்சுக் கொன்னுடலாம்னுட்டு. அதையும் சொல்லிடு..." - ஜெயந்தி, சுப்ரமணியின் வாயை வந்து அவசரமாய்ப் பொத்தினாள்.

"நமக்கு இவ்வளவு சுயநலம் இருக்கக் கூடாது ஜெயந்தி. கடவுளோட அனுக்கிரகம் நாம ஒரு பார்வையில்லாத குழந்தையை வளர்க்குறதுன்னு இருந்தா அதையும் சந்தோஷமா ஏத்துக்குவோம். இப்படி ஒரு ஊனத்தோட நமக்கொரு குழந்தை பொறந்திருந்தா தூர எறிஞ்சுடுவமா என்ன?"

ஒருவழியாய் ஜெயந்தியை சுப்ரமணி சம்மதிக்க வைத்தான். அந்தக் குழந்தையை ஏற்க மறுத்து, தான் பேசிய பேச்சுக்களுக்காக ஜெயந்தியே வெட்கப்பட்டாள்.

ஆஸ்பத்திரி ரெஸ்ட் எல்லாம் முடிந்து சரோஜா குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வரவும், ஒரு நல்ல நாளில், குழந்தையை தத்தெடுப்பதற்கான ஏற்பாடுகள் பற்றிப் பேச முற்பட்டார்கள். ஜெயந்தியும் சுப்ரமணியும் அணுகிய போது சரோஜா குழந்தையை நெஞ்சோடு இறுக்கிக் கொண்டாள்.

"என்னை மன்னிச்சுருங்க. சாதாரண குழந்தைங்களை விட இந்தக் குழந்தை எனக்கு ரொம்ப முக்கியம். இவன் வளர்ந்தப்புறம், உண்மையான தாய் நான்தான்னு தெரிஞ்சா, அவன் மனசு என்ன பாடுபடும்! 'நான் குருடாயிட்டேன்னுதானே நீ வளர்க்காம தூக்கிக் கொடுத்துட்டே'ன்னு கேட்டா, என்னால தாங்க முடியாது! எனக்கு சொல்லத் தெரியலே. ஒரு தாயையும் குழந்தையையும் பிரிச்ச பாவம் உங்களுக்கு வேணாம். உங்க வயித்துலயே சீக்கிரம் ஒரு குழந்தை உருவாக நானும் வேண்டிக்கறேன். என்னை மன்னிச்சுருங்க..."

மாரிமுத்துவும் சரோஜாவை ஆதரிப்பவனாக அமைதிகாக்க, அவன் கையெடுத்துக் கும்பிட்டான்.

KALKI SHOPPING PAGE

மணமக்கள் தேவை
கம்யூட்டர் ஜாதகம்

அனைத்து சமூகத்திலும், ஆயிரக் கணக்கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில் ஆங்கிலம், தமிழ் ரூ. 40/-

எதிர்கால கணிப்புடன் ரூ. 120/-

ஆண்டு பலன் : ரூ. 50/-

கல்யாண பொருத்தம் : ரூ. 40/-

ASTROLOGY SOFTWARE FOR SALE.

ஸ்வயம்வராலயா

(GOVT. REGD.)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை - 33. போன் : 425822,

7-ஏ, சாந்தி வஹார் காம்ப்ளக்ஸ், லஸ், சென்னை - 4. போன் : 846278,

88, 1, 16th Cross, 6th Main, Malleswaram, Bangalore - 560 055. Ph. : 3340146

THUS SPAKE THE PARAMACHARYA



A volume in about 900 Pages being the Translation into English of the Divine Speeches of Sri Paramacharya Swamigal under the title, **"Thus Spake The Paramacharya"** is to be released shortly. The book will contain the select speeches of Sri Paramacharya Swamigal on a variety of Topics. The volume is prepared and compiled by 'Vidhya Seva Rathna' Sri A. Ganapathi Raman M.A., M.Ed. retired Headmaster of Dalmia Hr. Sec. School, Dalmiapuram. The book will be priced Rs.300/-, with Maha Swamigal Silver Dollar. Pre-publication price for those who remit money for the book before 21-1-96 will be Rs.250/-. Amount to be remitted to **Sri. A. Ganapathi Raman, No.7, Ganesh Nagar, Lalgudi, Tiruchi District, Tamil Nadu. Pin.621 601**. Book, Dollar will be sent by Reg. Post.

ADYAR

STUDENTS XEROX

Quality that is close to perfection

XEROX

LASER PRINTING

WORD PROCESSING

DTP

ELECTRONIC & MANUAL TYPING

BINDING & LAMINATION

RAMACHANDRA SAREES

Quality & Quality

தரம் தரம் தரம்தவிர வேறில்லை!

உயர்ரக Madurai Sungudi

புடவைகள் வழங்குபவர்கள்

ராமசந்திரா சாரீஸ்

RAMACHANDRA SAREES



(மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்)

37-B, Arya Gowder Road,
Postal Colony Bus Stop 3rd Street,
West Mambalam, Madras - 33.
Ph : 4896532

Other Attractions :

BENGAL, COIMBATORE KORA, DEVENDRA & VENKATAKIRI.

வழங்குபவர்கள் : Ramachandra Sarees 20 B. Old Kuyavar palayam road, Madurai - 625 009.



சென்ற வாரம்....

போசளர்களும் காகதீயர்களும் தமிழகத்தை ஆதிக்கம் செய்து கொண்டிருந்த காலம். சோழ மன்னன் அவநிதன் மகள் பூங்கோதையின் பாதுகாப்புக் கருதி, மன்னனின் நண்பரான சைவத் துறவியொருவர், நாகை சூளாமணி விஹாரத்தின் தலைவர் புத்தமித்திரர் பொறுப்பில் விட்டுச் செல்கிறார். திடீரென்று அவநிதனிடமிருந்து பூங்கோதையை அனுப்பி வைக்கும்படி ஓர் ஓலை வருகிறது.சீன இளைஞன் யுவான் பாதுகாப்பில் பூங்கோதையை அனுப்பி வைக்கிறார் புத்தமித்திரர். அவள் சென்ற சிறிது நேரத்தில் அங்கே வந்த சைவத் துறவி, ஓலையை வாங்கிப் பார்த்து விட்டு, "இது போலி ஓலையாயிற்றே, எப்படி அனுப்பி வைத்தீர்கள் பூங்கோதையை?" என்று உக்கிரத்துடன் இரைகிறார்....

2. பழங்கதை

சூளாமணி விஹாரத்திற்கும், நிகரற்ற வீரர்களை தமிழகத்திற்கு உருவாக்கி அளித்துக் கொண்டிருந்த அதன் கடிகைக்கும் தலைவரான புத்தமித்திரரை "இத்தனை உக்கிரமான குரலில் ஏதோ குற்றவாளியை விசாரிப்பது போல் ஒருவர் மிரட்ட இயலும் என்று கனவிலும் பணியாட்கள் எதிர்பார்க்கவில்லை.

திகைப்பில் சிலைகளாக நின்று விட்டார்கள். சற்றைக்கெல்லாம் அறைக்குள் ஒலித்த குரல்கள் மெல்ல மட்டுப்படத் தொடங்கின. உரையாடலை அங்கு நின்று மேற்கொண்டு கேட்பது பெருங்குற்றம் என்பதை உணர்ந்த



இந்திரதனுசு

விஷ்வக்சேனன்

வீரர்களும் பணியாட்களும் ஒருவரையொருவர் பார்த்தபடி மெல்லக் கலையத் தொடங்கினார்கள்.

எதிரே ஆஜானுபாகுவாக நின்ற சைவத் துறவியாரின கைகள் யானையின் துதிக்கைகளைப் போல வலுவுடன் பருத்து வளைந்து, இடுப்பில் பதிந்து நின்றன. அவரது பெருவிழிகளில் தெறித்த உக்கிரத்தை கவனித்த சூளாமணி விஹாரத் தலைவரின் சித்தம் பெரிதும் குழம்பிக் கிடந்தது.

'மனிதன், செய்து விட்ட தவறுகளையும் இனி செய்யப் போகும் தவறுகளையும் எண்ணியே பாதி வாழ்நாளைக் கழிக்கிறான். எஞ்சியிருக்கும் வாழ்நாள் செய்த தவறுகளுக்குப் பரிகாரம் காணவே சரியாயிருக்கிறது. எனவே அதிலிருந்து தப்ப புத்த பிரானின் திருவடிகளைச் சேர்ந்து விடு' என்று துறவறம் பெற்ற போது கிடைத்த உபதேசத்தை ஒருமுறை எண்ணிக் கொண்டார் அவர். நாசியிலிருந்து பெருமூச்சொன்றும் வெளிவந்தது.

புத்தமித்திரரின் சோகத்தையும் பெருமூச்சையும் கவனித்த சைவத் துறவியாரின் உக்கிரம் சற்று இறங்கியது. தமது குரலை அடக்கிக் கொண்டவர்; "புத்தமித்திரரே, உமது செய்கையின் விளைவு என்ன என்பது புரிகிறதா உமக்கு? பதினெட்டு ஆண்டுகளாகக் கட்டிக் காத்த பொக்கிஷத்தை வெகு எளிதாக போசள சிங்கனனிடம் சிக்க விட்டு விட்டீர்" என்றார்.

தலையைக் குனிந்தபடியே அறைக்குள் மெல்ல உலவிய சைவத் துறவியாரின் குரலில் கனவுச் சாயை படரத் தொடங்கியது. "புத்தமித்திரரே, சற்று எண்ணிப் பாரும். சோழ இராஜாதி ராஜர் பாண்டியரிடமிருந்தும், உட்பகையை வளர்த்த உறவினன் காடவகோப் பெருஞ்சிங்கனிடமிருந்தும் சோழ அரசைக் காக்க போசள மன்னன் வீர சோமேஸ்வரனிடம் உதவி கோரினார். மீண்டும் புரட்சி எழுந்த போது காகதீயரிடம் உதவி கோரினார். இருவருமே உதவத்தான் செய்தனர். ஆனால் அதற்கு விலையாகப் போசளர்கள் மெல்ல மெல்ல சோழ நாட்டையும் கொங்கு நாட்டையும் வசப்படுத்திக் கொண்டனர். காகதீயர் சார்பாக விஜயகண்ட கோபாலன் தொண்டை மண்டலத்தை எடுத்துக் கொண்டான். சோழ நாட்டில் வேரூன்ற எண்ணிய வீர சோமேஸ்வரன் சோழ வம்சத்தின் ஒரே வாரிசான சோழ இளவரசியை மணக்க எண்ணினான். ஆனால் இளவரசி கொங்கு மன்னன் அவந்தனை விரும்பி மணந்து கொண்டாள். ஆனால் இது நடந்து ஆண்டுகள் பதினெட்டு ஓடிவிட்டன" – பேச்சை சற்று நிறுத்திய சைவத் துறவியாரின் முகத்தில் இன்னும் கனவுச் சாயை படர்ந்து கிடந்தது.

அந்த கனவுச் சாயை சூளாமணித் தலைவரின் விழிகளிலும் தெரிந்தது. அவரது விழிகள் சாளரத்தின் வழியே எங்கோ வானத்தை வெறித்துக் கிடக்க, உதடுகள் மெல்ல "பழங்

அருள்வாக்கு



ஐம்புலன்களே நமக்கு வாழ்வின் சகல ஆனந்தத்தையும் சாத்தியமாக்குகின்றன. நல்ல சாப்பாடு, ரம்மியமான சங்கீதம், சுகந்தம், குளிர்ந்த தென்றல், பூரண சந்திரனின் காட்சி இவை நமக்கு ஐம்புலன்களாலே அனுபவத்துக்கு வருகின்றன. மனிதனுக்கு இந்த ஐம்புலன்களைத் தந்து, இவற்றுக்கு ஆதாரமாக வெளியே ஐம்பூதங்களிலிருந்து தோன்றும் சுவை, மணம் முதலிய அழகுகளையும் வைத்திருப்பவர் ஸ்வாமி. அவரது கிருபையால்தான் சகல இன்பங்களும் கிடைக்கின்றன. நம்மால் ஒரு மணி அரிசி சிருஷ்டிக்க முடியாது! ஸ்வாமியே இந்தப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து, அதன் அழகுகளை நாம் அனுபவிப்பதற்காக நமக்கு பஞ்ச இந்திரியங்களையும் சிருஷ்டித்துத் தந்திருக்கிறார். ஆனபடியால் நமது புலன்களால் அனுபவிக்கும் இன்பங்களை ஸ்வாமியின் நினைவோடு அனுபவிப்பதே நமது கடமையும் தர்மமுமாகும்.

அவருக்கு இந்த இன்பங்களை முதலில் அர்ப்பித்து, அவரது பிரசாதமாகவே அவற்றை நாம் ஏற்க வேண்டும். இந்த வழக்கம் நிலைப்பட்டால் ஸ்வாமிக்கு அர்ப்பணம் செய்யத் தகாத எந்தப் பொருளையும் நமது புலன்களால் அனுபவிக்கக் கூடாது என்ற பக்குவம் உண்டாகும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கதை" என்று முணுமுணுத்தன.

சைவத் துறவியாரின் குரல் தொடர்ந்து ஒலித்தது. "ஆம் புத்தமித்திரரே, பழங்கதைதான். ஆனால் பழங்கதையிலிருந்து புதுக்கதைகள் பிறக்கின்றன. உட்பகையைப் பேச்சுவார்த்தை மூலமாகவோ, போரிட்டோ தீர்த்துக் கொள்ளாமல், சோழ ராஜராஜர் அன்னியரை உதவிக்கு அழைத்தது பெரும் பிசகுதான். விளைவாக இப்போது பட்டமேற்ற ராஜேந்திர சோழருக்கு எந்த அதிகாரமும் இல்லை. போசளர் தயவில் ஆட்சி நடக்கிறது. கொங்கு மன்னனுக்கு இந்தப் பூங்கோதையை அளித்துவிட்டு, சோழ இளவரசியும் மறைந்து போனாள். ராஜேந்திரருக்கும் வாரிசு இல்லை. பூங்கோதையை தம் மகனுக்கு வற்புறுத்தி மணமுடித்து விட்டால் பிறகு சோழ நாட்டிலும் கொங்கு மண்ணிலும் வேரூன்றி விடலாம் என்று வீர சோமேஸ்வரன் மனப்பால் குடிக்கிறான். நீரும் உண்மையை அறியாமல் அவன் தண்டநாயகன் சிங்கணனின் வீரர்களுடன் இளவரசியை அனுப்பி விட்டீர்."

புத்தமித்திரர் மெல்லிய குரலில் பதிலளித்தார், "துறவியாரே, உடன் சென்றிருப்பது சிங்கணன் வீரர்கள் மட்டுமல்ல, யுவானும் சென்றிருக்கிறான்."

துறவியாரது பெருவிழிகள் இன்னும் அகன்றன. "யார், யாங்சின்னின் மகனா?" அவர் கேள்வியிலும் வியப்பு ஒலித்தது.

"ஆம். தந்தையைத் தேடி யுவான் நேற்று சீனக் கலத்தில் வந்தான். அவனையும் உடன் அனுப்பியிருக்கிறேன்" என்றார் சூளாமணி விஹாரத் தலைவர்.

அடுத்த சில கணங்கள் தீவிர சிந்தனையிலிறங்கிய சைவத் துறவியாரின் முகத்தில் தெளிவு புலப்பட்டது. அடுத்து ஓலைகளையும் எழுத்தாணியையும் கொண்டு வர வாயிலிலிருந்த வீரனைப் பணித்த துறவியார் ஓலைகளில் விறுவிறுவென்று ஏதோ எழுதத் தொடங்கினார். எழுதி முடித்து, புத்தமித்திரரிடமும் ஓர் ஓலையை எழுதி வாங்கி, அவற்றைக் குழல்களில் இட்டு அடைத்தவர் மீண்டும் வாயிற்காவலனை அழைத்தார்.

"வீரனே, நீ சென்று முன்னறையில் இருக்கும் என் சீடனை அழைத்து வா" என்று உத்தரவும் பிறப்பித்தார்.

சற்று நேரத்தில் உள்ளே நுழைந்தவன் துறவியாரின் சீடனாகத் தெரியவில்லை. சோழ வீரர் உடையுடனும் நீண்ட வாளுடனும் முகத்தில் சோழ நாட்டு விஷமம் மின்ன உள்ளே நுழைந்து வணங்கியவனைக் கண்ட சூளாமணி விஹாரத் தலைவர் விழிகளில் வியப்பு வழிந்தது. "துறவியாரே, விஜயனும் தங்களுடன் வந்திருக்கிறானா?" என்ற கேள்வியும் அவரிடமிருந்து உதிர்ந்தது.

அவர் கேள்விக்கு பதிலேதும் கூறாத சைவத் துறவி, விஜயனுக்கு அடுத்து இட்ட உத்தரவுகள் சூளாமணித் தலைவரின் வியப்பை இன்னும் உயர்த்தின.

"விஜயா, கொங்கு நாட்டின் தென்பகுதியில் பாண்டிய இளவல் இருக்கிறான். நீ காற்று வேகத்தில் செல்ல வேண்டும். இந்த ஓலைக் குழலை அவனிடம் அளித்துவிட்டு, இன்னொரு குழலை பாண்டியர் தலைநகரில் சேர்த்து விடு. பின்பு ஏற்கெனவே இட்ட பணியைக் கவனிக்கலாம்" என்றார் சைவத் துறவியார்.

ஓலைக் குழல்களைப் பெற்றுக் கொண்ட

விஜயன், மீண்டும் தலைவணங்கிவிட்டு வெளியேறினான்.

அவன் வெளியேறியதும் சைவத் துறவியாரை ஏறிட்ட சூளாமணி விஹாரத் தலைவருக்கு எந்த விளக்கமும் அவசியமில்லாமற் போயிற்று. அன்னியர் பிடியிலிருந்து தமிழகத்தை விடுவிக்க, தமிழகத்து மன்னர்கள் இணைய வேண்டும் என்று சைவத் துறவியார் அடிக்கடி கூறி வந்ததையும், அவரது அந்த திட்டத்தின் முதற்படி துவங்கி விட்டது என்பதையும் புரிந்து கொண்ட சூளாமணித் தலைவரின் முகத்தில் ஆனந்தம் தோன்ற ஆரம்பித்தது.

'இயல்புக்கு மாறாக நடக்கும் மனிதர்களையும், சந்தேகத்திற்குட்பட்டவர்களையும் உடனடியாகக் கொன்றுவிடுவதே சிறந்தது' என்ற சீனத்து சித்தாந்தத்தில் முழு நம்பிக்கை வைத்திருந்தான் யுவான். அந்தப் பயணத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே அவனுக்குச் சந்தேகம் தோன்ற ஆரம்பித்து விட்டது. கொங்கு இளவரசியும் தோழியருமிருந்த ரதத்தைச் செலுத்திக் கொண்டிருந்த யுவான், உடன் வந்த வீரர்கள் ரதத்தின் முன்னும் பின்னுமாக வரத் தொடங்கி விட்டதையும், நேர் மேற்கு நோக்கிச் செல்ல வேண்டிய பிரதானப் பாதையை விடுத்து பயணம் வடமேற்காகத் திரும்பி விட்டதையும் கவனித்தான். அந்த வீரர்களின் பார்வைகள் அடிக்கடி சந்தித்து ரகசியம் பேசியதையும், போதாக்குறைக்கு அவர்கள் இடையிடையே உச்சரித்த இரண்டொரு வார்த்தைகளையும் கவனித்தவன் இவர்கள் நிச்சயம் கொங்கு நாட்டின் வீரர்களாயிருக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டான். அவன் கூரிய அறிவிற்கு அவர்கள் போசள வீரர்கள் என்பதும், தங்களை போசளர் தலைநகருக்கு அழைத்துச் செல்ல முற்படுவதும் புரிந்தது.

அந்த சந்தேகம் ரதத்தினுள் அமர்ந்து வந்து கொண்டிருந்த இளவரசிக்கும் வந்திருக்க வேண்டும். ரத சாரதியின் நேர் முன்புறமிருந்த சீலையை விலக்கியவள் "சீனத்து வீரரே!" என்று மெல்ல அழைத்தாள்.

"என் பெயர் யுவான், இளவரசி" என்றான் யுவான் ரதத்தின் பாதையிலிருந்து விழிகளை அகற்றாமலே.

"யுவான், நாம் செல்வது கொங்கு நாட்டுப் பாதையாகத் தெரியவில்லையே" என்றாள் பூங்கோதை.

"ஆம் இளவரசி. எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் நீங்கள் அஞ்ச வேண்டாம். நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றான் யுவான்.

என்ன காரணத்தாலோ யுவானின் வார்த்தைகள் தனக்குப் பெரும் நம்பிக்கையளிப்பதை உணர்ந்த பூங்கோதை, மேற்கொண்டு ஏதும் பேசாமல் ரதத்தின் பக்கச் சீலையை விலக்கி பாதையெங்கும் விரிந்திருந்த பசுமையை ரசிக்க ஆரம்பித்தாள். பசுமை என்ற ஒரு பொது நிறத்திலேயே பலவித வண்ணபேதங்களைக் காட்டிக் கொண்டிருந்தது இயற்கை. வயல்களின் மரகதப் பச்சை, தளிர் நாற்றுக்களின் இளம் பச்சை, முற்றிய கதிர்களின் பொன்னிறம் கலந்த பச்சை, வாழையும் தென்னையும் காட்டும் வேறுவித பச்சை, குறுக்கே பாய்ந்த கால்வாய்களின் ஓரங்களில் விளைந்த கோரைகளின் பச்சை என்று வண்ண ஜாலங்களை வாரி இறைத்துக் கொண்டிருந்தது பசுமை. சோழ நாட்டின் எல்லை கடந்த பின்பு, இயற்கையின் வண்ணம் மாறத் தொடங்கியது.

சிறு குன்றுகளும், புதர்களும், மரங்களும் அடர்ந்த வனப்பகுதி நேர் எதிரில் தோன்ற ஆரம்பித்தது. தமிழகத்தைப் பற்றி சீன வணிகரிடமும், சூளாமணி விஹாரத் தலைவரிடமும் அறிந்த விவரங்கள் சரியானால், எதிரிலிருக்கும் வனப்பகுதி காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கனின் ஆளுகைக்கு உட்பட்ட வனப்பகுதியாகத்தானிருக்க வேண்டும் என்று தீர்மானித்தான் யுவான். அப்படியானால் காடவர்களின் குறுக்கீடு ஏதும் இல்லாத பட்சத்தில் மட்டுமே இந்த வீரர்கள் போசளர் தலைநகரை அடைய இயலும் என்பதும் புரிந்தது அவனுக்கு.

மாலைப் பொழுது முற்றி விட்டது. காடவருக்குச் சொந்தமான பகுதியைக் கடக்க வேண்டிய அபாயத்தை அந்த வீரர்களும் உணர்ந்திருக்க வேண்டும். பயணத்தை அத்துடன் நிறுத்திய வீரர்கள் இளவரசி தங்கவும், உணவுக்கும் அருகிலிருந்த சத்திரமொன்றில் ஏற்பாடுகள் செய்தனர்.

மீண்டும் உதய நேரத்தில் தொடர்ந்த



வித்தியாசம்....

'அதோ போகிறாரே, அவர் ஒரு காலத்தில் லட்சாதிபதியாக இருந்தார்; இன்று ஏழையாக அலைகிறார்' என்று சிலரைப் பார்த்துக் கூறுவதுண்டு. 'அதோ போகிறாரே அவர் ஒரு காலத்தில் எம்.ஏ. பட்டதாரியாக இருந்தார். இன்று எஸ்.எஸ்.எல்சியாகத் திரிகிறார்' என்று எவரைப் பார்த்தும் கூற முடியாது. பணத்துக்கும் படிப்புக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்!

கூறியவர் : புலவர் கீரன்; தகவல் : பா. குணா

பயணம், கதிரவன் உச்சிக்கு வரும் சமயத்தில் அடர்ந்த வனப்பகுதியை நெருங்கியது. நேர் எதிரில் விரிந்த வனப்பகுதியைக் கடக்காமல் இடதுபுறத்தில் மேற்கு நோக்கிப் பாதையொன்று வளைந்து திரும்புவதையும், அது கொங்கு மண்டலத்தின் பூந்துறை காட்டுக்குச் செல்லும் பாதையென்பதையும் புரிந்து கொண்ட யுவான் மெல்லத் திரும்பி, சிலையைச் சற்று விலக்கி, இளவரசியை எச்சரித்து விட்டு நடவடிக்கைக்குத் தயாரானான். ரதம் முட்புதர்களும் மரங்களும் நிறைந்த கானகத்துப் பாதையை நெருங்கிக் கொண்டிருந்தது.

அந்தப் பயணம் மட்டும் போசளத் தண்ட நாயகன் சிங்கணன் இட்ட திட்டப்படி நடந்திருந்தால் முப்பது ஆண்டுகளாகப் பரவத் தொடங்கி வேரூன்ற ஆரம்பித்திருந்த போசளர் ஆதிக்கம் தமிழகத்தில் ஸ்திரப்பட்டிருக்கும். ஆனால் தமிழகத்தின் தலைவிதி வேறு விதமாயிருந்தது. அந்த விதியும் சீனத்து யுவான் உருவத்திலும் அந்தக் கானகத்துக் காடவர்கள் வடிவிலும் வந்து குறுக்கிட்டது.

கானகப் பாதையின் துவக்கத்திலேயே தெரிந்த வளைவொன்றில் முன்னால் சென்ற வீரர்கள் திடீரென புரவிகளை இழுத்துப் பிடித்து நிறுத்தினார்கள். அவர்கள் முகங்களில் பெரும் கலவரம் படரத் தொடங்கியது. அவர்களின் கிலி பிடித்த பார்வைகள் பாதையின் குறுக்கே வெட்டி எறியப்பட்டுக் கிடந்த பெரும் மரம் ஒன்றை ஏதோ பிசாசைப் பார்ப்பது போல பார்த்தன. சற்று நேரம் அப்படியே நின்ற வீரர்கள், ரதத்தின் பின்புறமிருந்த வீரர்களையும் அழைத்தார்கள். கானகத்திலிருந்து எந்த அரவமும் எழாததால், வீரர்கள் புரவிகளிலிருந்து இறங்கி, அந்த மரத்தை அகற்றவும் துணிந்தார்கள். அடுத்த வினாடி எழுந்தது பெருங்கூச்சல். புதர்களின் மறைவிலிருந்தும், மரங்களின் பின்புறங்களிலிருந்தும் முப்பதுக்கும் குறையாத காடவ வீரர்கள் கறுத்துப் பெருத்த சரீரங்களுடனும், பெரும் மீசைகளுடனும், உயர்த்திப் பிடித்த பட்டாக் கத்திகளுடனும் பாய்ந்தனர்.

சற்றுத் திகைத்த போசள வீரர்கள், சுதாரித்துக் கொண்டு, வாட்களை உருவி காடவர்களின் தாக்குதலை எதிர்க்கத் தொடங்கினார்கள்.

சற்றுத் தள்ளி ரதத்தில் அமர்ந்தபடியே நடந்தவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த யுவான், ரதத்தை அரைவட்டமாகத் திருப்பி புதர்களினூடே மேற்கு நோக்கிப் பறக்க விட்டான். மரங்கள் மீது மோதி விடாமல் மயிரிழையில் விலகி, ரதம் அதிவேகமாக வளைந்து வளைந்து, கானகத்தினூடே அசுர வேகத்தில் பறப்பதைக் கண்ட இளவரசி பூங்கோதையின் கிலி படர்ந்த விழிகளில்



ஆசிரியர் : அரசியல்வாதி பையனை ஸ்கூல்ல சேர்த்துக்கிட்டது தப்பாப் போச்சு!

நண்பர் : எப்படி...?

ஆசிரியர் : என் நாற்காலியையே முறைத்து முறைத்துப் பார்க்கிறான்.

- தேனி. எஸ். மாரியப்பன்

வியப்பு பரவ ஆரம்பித்தது.

கானகத்தினூடே விரைந்த ரதம், குறுக்கில் திரும்பி, மேற்கு நோக்கிச் சென்ற பாதையை அடைந்ததும் இன்னும் அதிக வேகத்துடன் பூந்துறை நாட்டை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

சீனத்து வீரனின் ரத சாரத்தியத்திலிருந்த லாகவத்தைக் கண்டு வியப்பில் ஆழ்ந்து விட்ட பூங்கோதை, பின்புறம் திரும்பிப் பார்வையைச் செலுத்தியதும் அதிர்ந்தாள். அவள் பார்வையைத் தொடர்ந்து திரும்பிப் பார்த்த தோழியர் இருவரும் அச்சத்தில் வீலென்று அலறவும் செய்தனர்.

ரதத்தை செலுத்தியபடியே அவர்கள் அலறலுக்குக் காரணமறியத் திரும்பிய யுவான், ஐந்தாறு காடவர்கள் புரவிகளில் ரதத்தைத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டான். காடவ வீரர்களின் புரவிகள் பக்கவாட்டில் ரதத்தை முந்தத் தொடங்குவதைக் கவனித்த யுவானின் 'ப' வடிவ மெல்லிய மீசை ஒருபுறம் மெல்ல இழுபட்டது. ஏறக்குறைய ரதத்தின் நடுப்பகுதிக்கு நேராக காடவர்களின் இருபுரவிகள் வரும் வரை பொறுத்திருந்து, சடாரென்று ரதத்தை ஒருபுறமாக ஒதுக்கினான் யுவான்.

அந்தப் புரவிகள் தடுமாறி, பாதையிலிருந்து விலக, அவற்றின் மீதிருந்த காடவர்கள் அதே வேகத்தில் தூக்கி எறியப்பட்டு விழுந்தார்கள்.

ரதம் ஒருபுறமாக ஒதுங்கியதால் சற்று வேகம் தடைபடவே, மறுபுறத்தில் முந்திக் கொண்ட காடவர்கள் ரதத்தின் முன்புறம் வந்து புரவிகளையும் மெல்ல நிறுத்தினர். ரதம் நின்றதும் கீழே குதித்த யுவானை, புரவிகளிலிருந்து இறங்கிய காடவர்கள் ஐவரும் உயர்த்திய வாட்களுடன் நெருங்கவும் முற்பட்டனர்.

(தொடரும்)



தங்கமான சலுகைக்கு டாட்டா சொன்னதேன்?

நாளிதழ்களில் பெரிய பெரிய விளம்பரங்கள். 'இந்த ஆண்டு செய்கூலி சேதாரம் தள்ளுபடி செய்ய இயலாமைக்கு வருந்துகிறோம்...' - சென்னையின் பெரிய நகைக் கடைக்காரர்கள் நிறைய பேர் ஒற்றுமையாக ஒரே விளம்பரமாகக் கொடுத்திருந்தார்கள்.

போன வருடம் புத்தாண்டை ஒட்டி 'செய் கூலி இல்லை! சேதாரம் இல்லை!' என்று முழங்கிய அதே கடைக்காரர்கள்.

என்ன ஆயிற்று இந்த வருஷம்?

'நகை மற்றும் வைர வியாபாரிகள் சங்கம் எடுத்த முடிவு அது...'' என்றார் இந்தத் தள்ளுபடி விற்பனை யோசனையை முதன் முதலில் அறிமுகப் படுத்தியவர்களுள் ஒருவரான சுகுமாரன் - லலிதா ஜுவல்லரி உரிமையாளர்.

''பெரிய கடைக்காரர்கள் இவ்வாறு அறிவித்தால் சிறு வியாபாரிகள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதால் இச் சலுகையை வாபஸ் வாங்கி விட்டோம்'' என்றார்.

''மேலும், சலுகை அமுலில் உள்ள காலத்தில் கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை. ஆனால் அந்த தினங்களுக்குச் சற்று முன்னரும் பின்னரும் வியாபாரம் மந்தமாகி விடுகிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் சங்கம் முடிவெடுத்தது...'' என்கிறார்.

ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் ஜி.ஆர். தங்கமாளிகையில் துளைத்து எடுத்து விட்டார்களாம். 'இவ்வாண்டு ஏன் சிறப்புச் சலுகை இல்லை?' என்று...

''கூட்டத்தைச் சமாளிக்கறது கஷ்டமாச் சேன்னு பார்த்தால் என்கொயரியைச் சமாளிப்பதே பெரிய பாடா யிடுச்சு...'' என்றார் அதன் அதிபர் ராஜேந்திரன்.

''பேப்பரில் விளம்பரம் போட்டுட்டோம்... ஆனால், ரொம்ப நெருங்கிய வாடிக்கையாளர்கள் வந்து வற்புறுத்திக் கேட்கும் போது 'சலுகை கிடையாது' என்று முரட்டுத்தனமாக மறுப்பதும் கஷ்டம்தான்...'' என்றார் இன்னொரு பிரபல நகைக் கடைக்காரர்.

இதற்கிடையே, பல கடைகள், புத்தாண்டுக்குச் 'செய்கூலி சேதார தள்ளுபடி'யை பகிரங்கமாக அறிவித்தே விளம்பரம் செய்தன. அவர்களிடம் கேட்டால், தாங்கள் சம்பந்தப்பட்ட சங்கத்தின் உறுப்பினர் அல்ல என்றார்கள். ''எங்கள் கடையின் ஆண்டு விழா சமயம் இது... அதையொட்டி சலுகை தருகிறோம்'' என்று வேறுவிதமான காரணங்கள் சொன்னோரும் உண்டு.

ஜனவரி ஒன்றாம் தேதி நகை வாங்கியே தீருவது என்கிற செண்டிமெண்ட் வேர்பிடித்த பிறகு சலுகை இருந்தென்ன இல்லாது போனால்தானென்ன!

- எஸ். சந்திரமௌலி

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.


Happy Pongal
एअर-इंडिया
AIR-INDIA

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

